ஊர்வசி

4079

ந. சிதம்பரசுப்ரமண்யன்

4079

ஜோதி நிலையம்

4079

PRESENTED BY
V. PR. PL. KASIVISVANATHAN
CHETTIAR
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

பாகனேரி

V. PR. PL.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

ஊர்வசி

நாடகங்கள்

ந. சிதம்பரசுப்ரமண்யன்

பாகனேரி

ஜோதி நிலையம்
திருவல்லிக்கேணி, சென்னை

ஜோதி மலர் - 19
முதற்பதிப்பு 1944
உரிமை பதிவு
செய்யப்பெற்றது

சாதா பதிப்பு விலை ரூ. 2–0–0
உயர்ந்த பதிப்பு விலை ரூ. 2–8–0

இதே ஆசிரியர்
எழுதிய
சூரியகாந்தி
கதைகள்
விரைவில் வெளிவரும்

கபீர் அச்சுக்கூடம், சென்னை

சமர்ப்பணம்

ஸ்ரீ. தி. ஜ. ர. வுக்கு

நன்றியுரை

இந்த நாடகங்களில், முதல் நாடகம் மகாபாரதத்து ஊர்வசியை பாரதியாரின் இன்ப உலகத்தில் வைத்து வரையப்பட்டிருக்கிறது. தான்ஸேனைப்பற்றிய ஒரு சிறு வரலாற்றை ஆதாரமாக வைத்துப் புனையப்பட்டது தேவகானம். மற்றவை முழுமையும் என் சொந்த மனோ தர்மம். அவைகளுக்கு நானே பொறுப்பாளி. இவைகள், தினமணி வருஷ மலர், கலைமகள், மணிக்கொடி, சக்தி, கிராம ஊழியன் பொங்கல் மலர், கலாமோகினி, ஹிந்துஸ்தான், கதாமணி முதலிய பத்திரிகைகளில், பல வேறு சமயங்களில் பிரசுரிக்கப்பட்டவை. இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் இதற்கு முன்னுரையளித்த நண்பர் க. நா. சு. அவர்களுக்கும் எனது நன்றி.

ந. சி. சு.

முன்னுரை

ரஸிகர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். எனக்குத் தெரிந்தவரையில் பண்டைய தமிழ் இலக்கியங்களைப்பற்றி, அவர் திருவாசகம், திருவள்ளுவர், (திரு அல்லாத) கம்பன் இந்த மாதிரியே சொல்லிக்கொண்டு வந்தார். நான் சிலப்பதிகாரம் மட்டும் என்ன? கற்பனை மிகுந்த கதை அல்லவா என்று கேட்டேன். தமிழிலே அதைவிடச் சிறந்த கதை கிடையாது என்று எனக்குத் தோன்றுகிறது என்றேன்.

நண்பர் ஒப்புக்கொண்டார். "அற்புதமான கதை தான். சந்தேகம் இல்லை. அதனால் தான் அதை நாடகத்துக்கு எடுத்துக் கொண்டுவிட்டார்கள்."

அவர் இதைச் சொன்னகுரல் என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது. நாடகம் என்றால் இலக்கியமே அல்ல. ஏதோ கூத்து என்கிற பாவனையில் ரஸிகரான அவர் பேசியது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

இயல், இசை, நாடகம் என மூன்று பகுதிகள் தமிழிலே உண்டு என்று பண்டிதர்கள் சுலபமாகச் சொல்லிவிடுகிறார்கள். தமிழிலே கவிதையைத் தவிர வேறு எதுவும் இருந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கூத்து இருந்திருக்கிறது, பள்ளு இருந்திருக்கிறது, குறவஞ்சி இருந்திருக்கிறது, இவை எல்லாம் நாம் இலக்கியத்திலே சிறு பகுதிகள் என்று கூறலாம். நாம் இப்போது படித்து அனுபவிக்கும்படியாக நாடகம் ஒன்றுமே இல்லை.

சமஸ்கிருதத்திலே கவிதைக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ அவ்வளவு நாடகத்துக்கும் இருந்திருக்கிறது. "சகுந்தலா! உன் பெயரே அழகு" என்று (கீதே என்கிற ஜெர்மன் கவி) சொல்லும்படியாக ஒரு நாடகம் இருப்பதே சமஸ்கிருதத்தின் பெருமை என்றுதான் தோன்றுகிறது. சாகுந்தலத்துக்கு முன்னும் பின்னும் எவ்வளவோ நாடகங்கள் — ஆச்சரியகரமான, அழகான, இன்பகரமான நாடகங்கள் இருந்திருக்கின்றன.

மேல்நாட்டு இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலோ — கேட்க வேண்டியதேயில்லை. கிரேக்கர்களின் நாட்களிலிருந்து இன்று வரையில் மேல் நாட்டில் ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு தேசத்திலும் நாடக இலக்கியம் விசேஷமாக வளர்ந்திருக்கிறது. இந்த நாடகங்களை நாடக மேடையில் தான் பார்க்க வேண்டும் என்பதில்லை. படிப்பதற்கும், நடிப்பதற்கும் அழகான பல நாடகங்களை எழுதி பாஷையை வளப்படுத்தியிருக்கிறார்கள் — யார், யார் என்று நான் பெயர் சொல்ல விரும்பவில்லை இங்கு, இந்தச் சிறிய முகவுரையில். நூற்றுக் கணக்கான மேதைகள். சமீப காலத்தில் ஐரோப்பிய அமெரிக்க நாடக வளர்ச்சி அற்புதமானது.

இதை எல்லாம் கவனிக்கும்போது தமிழில், இன்றையத் தமிழில், நல்ல நாடகங்கள் இல்லையே என்று வருத்தப்படத்தான் வேண்டியிருந்தது. அறிந்து வருத்தப்பட்டதன் காரணமாகவே தான் போலும் அமரர் கு. ப. ராஜகோபாலனும் அவர் கோஷ்டியைச் சேர்ந்த சிலரும் தமிழில் புது நாடகத்தைப் படைக்க முயன்றார்கள்.

கதைகளிலே சிறு கதைகள்தான் தமிழிலே வேரூன்றியுள்ளன இன்றுவரையில். அதற்குக் காரணங்கள் பல சொல்லலாம், எனினும் இருக்கிற நிலைமை அதுதான். அதே போல நாடகங்களிலும் சிறு நாடகங்கள் தான் தழைத்திருக்கின்றன. வேலை நெருக்கடி, பத்திரிகை வசதி, இவை எல்லாம் காரணம் என்று வைத்துக் கொள்ளலாம்.

இன்றைய நாடக மேடைக்கும் இந்த நாடகங்களுக்கும் சம்பந்தமே யில்லாதது ஒரு பெரிய குறைதான். அந்தக் குறை நாளடைவில்தான் மறைய முடியும்.

நண்பர் ந. சிதம்பரசுப்பிரமண்யன் 124 பக்கங்களில் 12 நாடகங்கள் எழுதியிருக்கிறார். இதுவே ஓர் ஆச்சரியமான காரியம் என்றுதான் சொல்லவேண்டும். மனித உள்ளத்தின் அந்தரங்க பாவங்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்வதற்கு சிறு கதை எவ்வளவு சக்தி வாய்ந்ததோ அவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்கமுடியும் சிறு நாடகங்களும் என்பதை அற்புதமாகக் காட்டியிருக்கிறார்.

" ஊர்வசி ", " கண் திறந்தது " என்கிற இரண்டு நாடகங்களிலும் கடமைக்கும் ஆசைக்கும் உள்ள போராட்டத்தை வெகு

அழகாக விவரித்திருக்கிருர் – இரண்டு கோணங்களிலும் இருந்து, பக்ஷபாதமில்லாமல். இரண்டிலும் கடமையை வற்புறுத்து கிறவன் ஆண் பிள்ளைதான் என்பது கவனிப்பதற்குரிய விஷயம்.

"ஸெலக்ஷன் சங்கடம்", "குழாயடியில் குப்பு", "நடிகை", "சாவின் நிழல்" "சுவீகாரம்" "தீர்மானம்" இவை ஆறும் இன்றைய வாழ்க்கைச் சித்திரங்கள். ஓர் உணர்ச் சிக்கோ அல்லது ஒரு சிறு சம்பவத்துக்கோ உயிர் கொடுக்க முயன் றிருக்கிருர் ஆசிரியர்.

"நியாயம்" என்கிற நாடகத்திலே ஆத்மாவையும் கர்மாவை யும் பேசவைத்து நியாயம் தேடிக்கொண்டு கடவுளிடம் போக வைத்திருக்கிருர் ஆசிரியர். நியாயம் அப்படி எல்லாம், சுலபமாகக் கிடைத்துவிடுமா? ஆனல் ஒன்று. கர்மாவையும் ஜன்ம வாசனையையும் பற்றிப் பக்கம் பக்கமாக ஆராய்ச்சி நூல் எழுதிப் பேராசிரியர்கள் சாதித்திருப்பதைவிட அதிகமாகவே இந்த எட்டுப் பக்கத்திலே நாடகாசிரியர் சாதித்துவிட்டார் என்று நான் கருது கிறேன்.

"தேவகானம்", "வானவில்", "தோல்வி" மூன்றும் வாழ்க்கையிலே மற்றது எல்லாவற்றையும்விட ரஸனையே முக்கிய மானது என்பதை அறிவுறுத்துகின்றன.

சுருக்கமாகச் சொன்னல் 124 பக்கங்களில் அற்புதமான சில காரியங்களை அழகாகச் செய்து காட்டியிருக்கிருர் ஆசிரியர். அறிந்து அனுபவித்துப் பார்க்கவேண்டியது தமிழன் கடமை.

சென்னை
15-12-44.

க. நா. சுப்ரமண்யம்.

உள்ளுறை

			பக்கம்
1.	ஊர்வசி	...	1
2.	'ஸெலக்ஷன்' சங்கடம்	...	15
3.	நடிகை	...	27
4.	தேவகானம்	...	39
5.	சாவின் நிழல்	...	50
6.	வானவில்	...	58
7.	சுவீகாரம்	...	67
8.	கண் திறந்தது	...	78
9.	குழாயடியில் குப்பு	...	88
10.	தீர்மானம்	...	97
11.	நியாயம்	...	105
12.	தோல்வி	...	113

ஊர்வசி

அர்ச்சுனன் — ஊர்வசி
அம்ருதபானன் — சித்ரலேகா

இடம்—தேவலோகத்து நந்தவனம்; காலம்—மாலை நேரம்.

சித்ரலேகா: (புன்முறுவலுடன்) உலகத்தவரை உன்மத்தராக்க வல்ல ஊர்வசி, உனது ஆடல்பாடல் களினால், மனிதரின் ரத்தத்தைக் கொதித்துக் குதித்து ஆடச் செய்யும் அற்புத சுந்தரி!

ஊர்வசி: போதும் போதும் நிறுத்து; சமயா சமயம் தெரியாமல் ஏதாவது உளறிக்கொண்டே யிருக்காதே. என்ன இப்பொழுது வந்துவிட்டது, விளையாட்டிற்கு! உனக்கு வேறு வேலை கிடையாது.

சித்ரலேகா: உனக்கும் வேறு வேலை கிடையாது.

ஊர்வசி: (ஆச்சரியத்துடன் திடுக்கிட்டு) என்ன! என்ன!

சித்ரலேகா: எல்லாம் எனக்குத் தெரியும். முன்பு புரூரவஸோடு வேண்டிய பாடுபட்டாய்விட்டது. இப்பொழுது அர்ச்சுனன்!

ஊர்வசி: (வெட்கத்துடன்) உஸ்! இரையாதே.

சித்ரலேகா : ஆமாம், எல்லாம் வெளியிலே வராமல்தானிருக்கப் போகிறதாக்கும்! ஏன் உன் புத்தி இப்படிப் போகிறதென்றுதான் எனக்குத் தெரியவில்லை. இந்த சந்திர வம்சத்து அரசர்களே உன் புத்தியைத் தடுமாறச் செய்கிறார்கள்.

ஊர்வசி : நான் என்ன செய்யட்டும், சித்ரலேகா! காண்டீபன், ஸவ்யசாசி என்றெல்லாம் கீர்த்திபெற்ற இவ்வழகன், அஸ்திரங்களினால், எதிரிகளை சின்னாபின்னப்படுத்தி யிருக்கிறான். பாணத்தின் வன்மையினால் பாஞ்சாலியைப் பரிசாகப் பெற்றிருக்கிறான். பசுபதிக்கும், பார்வதிக்கும் தன் பாணங்களின் பெருமையைக் காட்டியிருக்கிறான். ஆனால், கேவலம், ஒரு பெண்மேல்; தன் பாணத்தைப் போடுவான் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை.

சித்ரலேகா : அது என்ன ஊர்வசி! மனிதர்களிடம் உனக்கு அவ்வளவு ப்ரமை! அழிந்து போகக் கூடிய அற்ப ஆயுளுள்ளவரிடம் உன் மனத்தைக் கொடுத்து ஏன் இப்படித் தவிக்கிறாய்?

ஊர்வசி : அசடே! உனக்கென்ன தெரியும். அழிந்துபோகக்கூடிய ஒரு நிமிஷ ஆனந்தமே போதும். அழிந்து போவதால் அதற்கு பெருமை அதிகம். ஜீவன் நிறைந்த நிமிஷத்திற்கு நித்யத்வம்கூட சமமாகாது. உயிரற்ற நித்யத்வம், நித்யத்வம் அன்று ;—நித்ரத்வம்!

சித்ரலேகா : முன்—புரூரவஸோடு என்ன பெரிய சுகத்தைக் கண்டாய்? இப்பொழுது என்ன காணப் போகிறாய்?

ஊர்வசி : பயனற்ற வாழ்வென்னும் பயங்கரப் பாலைவனத்தில், நடுநடுவே தோன்றிக் களைதீர்க்கும்

இன்ப ஊற்றுகள் அவை. அந்த இன்பத்தை அனுபவிக்க வேண்டாமென்கிறாயா?

சித்ரலேகா: ஊர்வசி! நீ, தேவலோக அப்ஸரஸ் என்பதை மறந்துவிடாதே. பூலோகத்துப் பேச்சுப் பேசாதே. அங்கு கொஞ்ச நாளிருந்ததின் பலன்போலிருக்கிறது இது!

ஊர்வசி: (சலிப்புடன்) நீ எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள். இவன் ஏன் இங்கு வந்து முளைத்தான்? நான் பாஞ்சாலியை நினைத்துப் பொறாமைப் பட்டதுண்டு. ஆனால், இப்பொழுது அவளுடைய பாதிவ்ருத்யத்தின் சிரமத்தையறிந்து அனுதாபம் கொள்கிறேன்.

சித்ரலேகா: அப்படியா!

ஊர்வசி: நேற்று நான் நாட்டியம் செய்துகொண்டிருந்தபோது, சபாநாயகனாக விளங்கிய அந்த இந்திர குமாரன், பல்வேறு கிரஹங்களுக்கும் ஒளியைக் கடன் கொடுத்துக்கொண்டிருக்கும் சூரியன்போல, கம்பீரமாக உட்கார்ந்துகொண்டிருந்தான். பூதேவியைப் போல் நான் சுற்றிச் சுற்றி வந்து அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தேன். அந்த வெப்பம் என்னை எப்படி தகிக்கிறது என்பதை அவன் அறிவானா? பூதேவியின் ப்ரதக்ஷிணங்கள் போல் என்னுடையதும் வியர்த்தமாகி விடுமா?

சித்ரலேகா: இன்பமூட்டுவதற்கென உதித்த ஊர்வசி, கவலைப்படாதே! அப்ஸரஸுகளுக்கு ஆபரணம் போல் விளங்கும் உன்னுடைய விற்புருவத்தின் முன், காண்டீபம் பலமற்றதாகிவிடும்.

ஊர்வசி : ஸகி! விவரம் தெரியாமல் பேசுகிருய். அவன் தர்மபுத்திரனின் தம்பி. தவம் செய்துவிட்டு வந்திருக்கிருன் என்பதை மறக்காதே. ராக்ஷஸர்கள், தபஸ்விகள் இவ்விருவரையும் நான் சமமாக வெறுக்கிறேன். அரக்கர் கையில் அழகான வஸ்து அகப்பட்டு விட்டால், அதைச் சித்ரவதை செய்துவிடுகிருர்கள். அவர்கள் மிருகங்கள்தானே. ஆனுல், தபஸ்விகளோ இன்னும் மோசம், அழகைக் கண்டு கரிக்கிருர்கள்! அதைக் கண்டு நடுங்குகிருர்கள்; எரிந்து விழுகிருர்கள். ஏன் அதைக் கண்டு அப்படிப் பயப்படவேண்டும். தவம் கலேந்துவிடுமாம்! ஒழுக்கம் தவறிவிடுமாம்! ஒழுக்கம் என்பது ஒரு பெரிய இழுக்கு. அது கலேக்கும் வாழ்வுக்கும் சத்ரு!

சித்ரலேகா : அர்ச்சுனனேப்பற்றி இம்மாதிரி தவருன எண்ணங்கொள்ள வேண்டாம். அவன் பரம ரஸிகன் கிருஷ்ணனுடைய ஆத்ம சிநேகிதனல்லவா அவன்!

ஊர்வசி : அவனுள்ளத்தை எப்படி அறிவது? என் ஹ்ருதயத்தின் ஒலி அவன் காதில் விழுமா? அல்லது செவிடாக இருப்பானு?

சித்ரலேகா : ஊர்வசி! நான் போய் அவனுடைய மனப் போக்கை அறிந்து வருகிறேன். மன நெகிழ்ச்சி அடையாதே. வாழ்வை மணக்க வைப்பவளே! உன் மணத்தை விரும்பாதவர் யார்? (போகிருள்)

(அதே நந்தவனத்தில் வேருெர் பக்கம்)

அர்ச்சுனன் : நம்பவே முடியவில்லே! எங்கள் கற்பனேயையும் தாண்டியதாகவல்லவோ யிருக்கிறது. என்ன அற்புத உலகம் இது!

அம்ருதபானன் : ஆமாம்; நம்ப முடியாதுதான். உண்மை கற்பனைக்கும் மீறியது. மரணம், தாரித்ரியம், மூப்பு, வியாதி, துக்கம், பேய்க்குணம், இவைகளில் உழலும் உங்களால் இந்த ஸௌந்தர்ய லோகத்தைக் கற்பனைக் கண்ணால் பார்க்க முடியுமா? துன்பக் குழியில் விழுந்து தவிக்கும் உங்களுக்கு, இன்ப அருவி யைக் கற்பனை செய்துகொள்ள முடியாது.

அர்ச்சுனன் : நீங்கள் சொல்வதில் மிகையேயில்லை.

அம்ருதபானன் : ராஜகுமாரா, கேள். இந்த இந்திர லோகம் போக பூமி. நாங்கள் யாவரும் ரஸிகர்கள்— கலைஞர்கள். ஸௌந்தர்ய உபாஸனையில் ஸந்ததமும் ஈடுபடுபவர்கள். போகமும், யோகமும், வெவ்வேறு அல்ல. ஒரே வஸ்துவின் இரண்டு அம்சங்கள். தன்னை மறந்து பரம்பொருளுடன் ஐக்யமாவதற்கு ஏற்பட்ட இரண்டு பாதைகள்.

அர்ச்சுனன் : உங்கள் உலகம், உங்கள் பேச்சு எல்லாம் என்னை திகைப்படையச் செய்கிறது. தடுமாறு கிறேன் நான்.

அம்ருதபானன் : அர்ச்சுனா கேள். இவ்வின்ப உல கத்தின் காற்றை சுவாஸித்ததாலேயே அநேக சௌக்கி யங்களை அடைவாய். மேலும் கேள், நாங்கள் யாவரும், அம்ருதரும், ஆனந்த ரூபியுமான ஈச்வரனுடைய புத் ரர்கள். எங்களுக்கு அழிவு கிடையாது. சத்யம், சுந் தரம் என்ற இரு கைகளைக்கொண்ட சிவ ஸ்வரூபியின் சுந்தரமான கையின் சின்முத்ரையின் சூக்ஷ்மத்தை அறிபவர்கள் நாங்கள்.

அர்ச்சுனன் : அதெல்லாம் மிகவும் சரி. ஹே தேவ!

ஆனால் இவ்வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுகிறதில்லையா உங்களுக்கு?

அம்ருதபானன் : சலிப்பு! பார்த்த, பூலோகத்துச் சரக்கு அது! அங்கு அது அவசியம். ஆனாலும், சதா காலமும், திரும்பத் திரும்ப துன்பங்களை அடைந்து அதிருப்தி கொள்ள வேண்டிய உங்களிலேயே அனேகருக்குச் சலிப்பு ஏற்படுகிறதில்லை. அம்ருதத்தைக் குடித்துக்கொண்டு, சந்திர கிரணத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் எங்களுக்கா ஏற்படும்? நாங்கள் ஒவ்வொரு நிமிஷத்தையும் சுவைத்து அனுபவிக்கிறோம். எங்கள் வாழ்க்கை நாங்கள் நன்கு வாழ்ந்த அநேக நிமிஷங்கள் கொண்டது. அதோ பார்!— மாலைக் கதிரவனின் பொற் கிரணங்கள் பட்டு, உருக்கி விட்ட ஸ்வர்ணம் போல ஓடிக்கொண்டிருக்கும் ஆகாச கங்கையில், நீந்தி விளையாடும் அந்த யுவதியைப் பார். லஜ்ஜைப்படாதே. இயற்கை அழகைக் கண்டு களிப்பதில் என்ன தவறு? என்ன வெட்கம்! தேவ லோகத்தில் கல்மஷம் கிடையாது. பாற்கடலில் பிறந்தவளைப் போல மிதந்துகொண்டிருக்கிறாள். அவளைச் சுற்றியிருப்பவர்கள் காதலர்கள்.

அர்ச்சுனன் : காதலர்கள்! அவ்வளவு பேரும் காதலர்கள்! பூலோகத்திலே பாண்டவர்களாகிய நாங்கள் ஒருத்தியைக் கொண்டோம். அதற்கே, துர்யோதனன், கர்ணன் முதலானவர்கள் இடித்துக் காட்டித் துன்புறுத்துகிறார்கள். இங்கு இது மிகவும் சகஜமா? அப்படியானால் இது மிகவும் ஒழுக்கம் கெட்டதாகவல்லவோ கருதப்படும். பூலோக வாசிகள் அதை நினைக்கவே மாட்டார்கள்.

அம்ருதபானன் : கௌந்தேய! இங்கே, சட்டம், பழக்கம், வழக்கம், ஒழுக்கம் முதலியவைகளுக்கு நீங்கள் போட்டிருப்பதைப் போன்ற கோரமான தளை கள் கிடையாது. எங்களுடைய இச்சா வாழ்க்கைக்கு அவை பொருந்தாது. இன்ப வாழ்க்கைக்குச் சரிப்பட்டு வராது. கட்டுப்பாட்டை மீறியவர்கள் நாங்கள். இது ஸ்வர்க்க லோகம். ஸ்வதந்த்ர நாடு. போக பூமி.

அர்ச்சுனன் : அது எப்படி சாத்தியம்? இதனால் அராஜகமன்றோ ஏற்படும்?

அம்ருதபானன் : குருநந்தன! குறுகிய நோக்கங் கள், சொத்துரிமை, பொறாமை, முதலியன நிறைந்த பூலோகமல்ல இது. நான் முன் சொன்னதுபோல், கலைஞர் உலகம், ரஸிகர்கள் நாடு இது. பூலோகத்தி லேயே, நல்ல வஸ்துக்களைப் பிறருடன் ரஸிக்க முயற் சிக்கிறீர்கள். அதனால் சமுதாய உணர்ச்சிகள் ஏற்படு கின்றன. இங்கு எல்லாம் பொது உடைமை. தனியாக ஒன்றை அடைய நாங்கள் விரும்புவதில்லை. எங்கள் சமுதாயத்தின் அடிப்படை மிருக பலத்தினால் ஆன தல்ல; அவசியத்தை முன்னிட்டு ஏற்பட்டதும் அல்ல; ரஸனை மிகுதியில் இதன் பலம் இருக்கிறது. ரஸனைக் குறைவினாலே தான் சமுதாயத்திற்கு பலவீனம் ஏற்படு கிறது. சமூகத்திற்கு குந்தகம் ஏற்படுகிறது.

அர்ச்சுனன் : அழிவற்றவனே! நான் பார்க்க வேண் டியதெல்லாம் பார்த்தாகி விட்டது. கேட்க வேண்டி யதைக் கேட்டாய்விட்டது. மேலும், மேலும், வியப் பைக் கொடுக்கும் விஷயங்களைக் கண்டும், கேட்டும், என் மூளையின் கிராஹ்ய சக்தி மழுங்கிவிட்டது. ஆகை யால், தேவா, என் வந்தனத்தை ஏற்றுக்கொள்.

என்னை மன்னிப்பாய். நான் கற்பக விருக்ஷத்தடியில் சற்று இருந்து களை தீர்த்துக்கொண்டு வருகிறேன். குறித்த நேரத்திற்குள் சபைக்கு வந்துவிடுகிறேன்.

அம்ருதபானன்: சீக்கிரம் வந்துவிடு. இல்லாவிட்டால் அப்ஸரஸுகளிடம் அகப்பட்டுக் கொள்வாய்.

(போகிருன்)

அர்ச்சுனன்: அப்பா! இது அதிசய பூமிதான். என்ன ஒளி. என்ன கீதம். என்ன மணம். தாங்க முடியாதுபோலிருக்கிறது. ஆஹா அந்த நட்சத்திரங்களுக்குத்தான் என்ன மினுக்கு. அவைகள் என்ன இந்த தேவர்கள் பூஜிக்கும் அழகின் திவலைகளோ?— அது யார்? அப்ஸரஸ் போலிருக்கிறதே?

(சித்ரலேகை வருகிருள்)

அர்ச்சுனன்: அம்மா! நீ யார்?

சித்ரலேகா: இந்திர குமாரா! நான் ஊர்வசியின் உயிர்த் தோழி என் பெயர் சித்ரலேகை.

அர்ச்சுனன்: ஊர்வசியின் சகியே! நான் இங்கு அநேக அதிசயங்களைக் கண்டுவிட்டேன். ஆனல் இவற்றின் அழகுக்கெல்லாம் சிகரம் போல விளங்குகிருள் உங்கள் ஊர்வசி.

சித்ரலேகா: வாஸ்தவமாகவா?

அர்ச்சுனன்: ஆமாம். பாலைப் பிழிந்துகொண்டிருக்கும் இந்நிலவு, சிதறுண்டு கிடக்கும் நட்சத்திர முத்துக்கள், மனக் கவலையை அடித்துக்கொண்டுபோக விழும் இவ்வருவி, இவைகள் எல்லாம் அந்த ஊர்வசி யிருக்கும்போது எதற்கு? சித்ரலேகா, பாசுபதாஸ்த்ரம் பெற மிகுந்த பிரயாசைப்பட்டேன். ஆனல் நேற்று ஊர்வசியைப் பார்த்தேன். அவள் நடனத்தை அனுப

வித்தேன். எனக்கும் கொஞ்சம் நாட்டிய சாஸ்திரம் தெரியும். இப்பொழுது, பாசுபதாஸ்திரத்தை தூக்கியெறிந்துவிட்டு ஊர்வசிக்குப் பின்னால் நட்டுவனாகிவிடலாகாதா வென்று தோன்றுகிறது.

சித்ரலேகா : பாஞ்சாலியின் பிரியநாயக! ஊர்வசியின் நாட்டியம் எப்படியிருந்தது ?

அர்ச்சுனன் : ஊர்வசியின் உருவழகிலேயே பிரமித்து நின்ற நான் நாட்டியத்தைப்பற்றி என்ன சொல்வது! மேடைமீது மயில்போல வந்து நின்றாள். அவள் மேலிருந்து விழும் தேன் துளிகள் போன்ற சிவந்த சிறு புஷ்பங்களை மொய்க்க, வண்டுகள் சுற்றி சுற்றி வந்து சுருதி சுத்தமாக ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. மகர வீணையின் மெல்லிய கம்பியிலிருந்து சிந்திக் கொண்டிருக்கும் இன்னிசையுடன், கையசைவின் இசையும் சம்மேளித்து நிற்க, கை காட்டுவதை, வீசி எறியும் கண் ஜாடை விரித்துக்காட்ட, மனக் கொதிப்பின் பல்வேறு குமிழிகளை, வானம் காட்டும் பல்வேறு சித்திரங்கள் போல, முக விலாஸம் மாறி மாறித் தெளியக் காட்ட, அவள் நடனமா ஆடினாள்? பல்வேறு லோகங்களை சிருஷ்டித்துக் கொண்டிருந்தாள். பூதேவியைப்போல் அவள் ஆடிப்பாடி ஆனந்தித்துக் கொண்டிருந்தாள். நான் சூரியன் போல் விழித்த கண் விழித்தபடி பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால், நான் எப்படிக் கொதிக்கிறேன் என்பதை அவள் அறிவாளா ?

சித்ரலேகா : சூரியனே! நீயும் எரிகிறாய்; பிறரையும் எரிக்கிறாய். கடைக் கண்ணால், அண்டங்களை ஆட்டி வைக்கும் ஊர்வசி உன்னை நினைந்து கவலையில் ஆழ்ந்திருக்கிறாள்.

அர்ச்சுனன் : சித்ரலேகா, என்னைப் பரிகசிக்காதே!

சித்ரலேகா : அர்ச்சுனா! குறைந்து கொள்ளாதே. நீ மிகவும் அதிருஷ்டசாலி. ஊர்வசி உன்னை விரும்பி வருகிறாள். அதைரியப்படாதே. உன் மனோபீஷ்டம் நிறைவேறுமாக.

அர்ச்சுனன் : அதிருஷ்டசாலி யென்று சொல்கிறாய். இல்லை. இல்லை. நான் மிகுந்த துர்பாக்கியன்! என் மனோரதம் நிறைவேறாது. பூமியும் சூரியனும் என்று வது ஒன்று சேர முடியுமா.

சித்ரலேகா : அது யார்! அடேடே, இதோ வந்து விட்டாளே ஊர்வசி!

(ஊர்வசி வருகிறாள்)

சித்ரலேகா : என்ன ஊர்வசி! அதற்குள் பொறுக்க வில்லையா உனக்கு! தேடிக்கொண்டு வந்துவிட்டாய். (அர்ச்சுனனைப் பார்த்து) ஊர்வசி என்னைப் பிரிந்து சிறிதுநேரம் கூட இருக்கமாட்டாள். (சிரித்துக் கொண்டு) ஆனால், இனிமேல் அப்படியில்லை; நான் அவளுடன் இருக்கப் பிரியப்படமாட்டாள்.

ஊர்வசி : (கோபம் கொண்டவள் போல்) உன் விளையாட்டு எனக்குப் பிடிக்கவேயில்லை.

சித்ரலேகா : (விஷமத்துடன்) ஆமாம் என் விளை யாட்டு உனக்குப் பிடிக்குமா, பிடிக்காதுதான். இவர் தான் அர்ச்சுனன். இவரோடு விளையாடிக்கொண்டிரு. நான் போகிறேன். (கோபிப்பவள்போலப் போகிறாள். அர்ச்சுனனும், ஊர்வசியும் புன்னகை மூலம் வரவேற்றுக் கொள்கிறார்கள்.)

அர்ச்சுனன் : ஊர்வசி! ஊர்வசி! நீ யார்? நான் காணக்கூடியக் கடைசிக் கனவா. அல்லது என் ஸ்வர்க்க

வாழ்க்கைக்கு ஓர் இறுதி ஏற்படுத்த வந்த ஒரு முடிவா? சுந்தரி! உன் புதுமை மாருத அழகைக் கண்டு என் உள்ளம் புளகம் அடைகிறது.

ஊர்வசி: திக்குகள் தோறும் விஜயம் செய்து, வெற்றிக் கொடி நாட்டி, வெற்றி மாலை சூடி வரும் விஜயனே!

அர்ச்சுனன்: ஆமாம், கேவலம் மிருக பலத்திஞல், நான் வெற்றிபெற முடிகிறது. ஆஞல் உன்னுடைய மயக்கம் தரும் அழகுக்குமுன், என்னுடைய பலம் குன்றிப்போகிறது. குழந்தைபோலாகி விடுகிறேன்.

ஊர்வசி: நரேந்திரா! உனக்குப் பூலோகம் சரியான இடமில்லை. இங்கேயே இருந்துவிடு. உன்னை அமரஞக்குகிறேன்.

அர்ச்சுனன்: நித்திய சுந்தரி! அம்ருதமான உன் அழகைப் பருகும் யார்தான் அமரஞகை மாட்டான்!

ஊர்வசி: மாந்தருலகை மறந்துவிடு, இந்த மந்தார மலரை ஏற்றுக்கொள். (மலர் மாலையை அர்ச்சுனன் மேல் வீசி எறிகிருள், அர்ச்சுனன் திகைப்படைகிருன்.)

அர்ச்சுனன்: (மாலையை உற்று நோக்குகிருன். மனம் யோசனையிலாழ்கிறது. முகத்தில் கவலை தோன்றுகிறது.)

ஊர்வசி: விஜயனே! திடீரென்று என்ன கலக்கம்?

அர்ச்சுனன்: நான் யாத்திரை புறப்படும்பொழுது செய்துகொண்ட பிரதிக்ஞை ஞாபகம் வருகிறது. மலர் மாலையுடன், என் தமையனுடன் செய்து கொண்ட சபதம் நினைவுக்கு வருகிறது. அஞ்ஞானத் திரையை விலக்கும் ஒளிபோல, இந்த மலர் நான் மறந்திருந்ததை ஞாபகப்படுத்துகிறது.

ஊர்வசி : என்ன அது? எனக்குப் புரியவில்லையே!

அர்ச்சுனன் : வந்த காரியத்தையும், கடமையையும் மறந்துவிட்டு என்ன கனவு கண்டுகொண்டிருக்கிறேன். நான் ஒரு பேதை. எனக்கு சுய பிரக்ஞை இப்பொழுது தான் வருகிறது.

ஊர்வசி: (ஆச்சரியத்துடன்) என்ன! என்ன!

அர்ச்சுனன் : மயங்கி மறந்திருந்த எனக்கு ஞாபகம் உண்டாக்கி விட்டாய்; என் கடமையைச் செய்யத் தூண்டிவிட்டாய். நான் யார் என்பதை நினைவூட்டி ஞய்;

ஊர்வசி : (ஒன்றும் புரியாமல்) அர்ச்சுனு, எனக்கு விளக்கிச் சொல்லு.

அர்ச்சுனன் : (தீர்மானத்துடன்) அம்மணி, என்னை மன்னிப்பாய். நான் சிறு குழந்தை போல விளையாடிக் கொண்டிருந்து விட்டேன். அதையெல்லாம் மறந்து விடு. நடைபெற முடியாத நாடகத்தை நடிக்க முயலு வதில் பிரயோஜனமில்லை. நான் பிதற்றினவற்றை யெல்லாம் மறந்து விடு.

ஊர்வசி : (திடுக்கிட்டு, ஆச்சரியத்துடன்) நடை பெருது என்ரு சொல்கிருய். ஏன் சாத்யமில்லை? சௌந்தரியமும், சௌர்யமும் சேர்வதை யார் தடுக்க முடியும்?

அர்ச்சுனன் : உன்னை நான் அடைய முடியாது. நாம் ஒன்று சேருவதை எதிர்க்க அநேகம் இருக் கின்றன.

ஊர்வசி: நீ வீரனல்லவா! எதிரிகளை முறியடிப் பது மிகச் சாதாரணமான விளையாட்டல்லவா உனக்கு!

அர்ச்சுனன் : நான் சொல்வதைக் கவனி. ஒழுக்கம்

தவருத உத்தமனின் தம்பி நான். இன்னும் தவநிலை கலையாதவன். ஒழுக்கத்தைக் கைவிட்டு விட்டு, எப்படி நான் தமையனிடம் திரும்புவது? அவருக்கு மனச் சஞ்சலத்தை உண்டுபண்ணலாமா?

ஊர்வசி: (அதிர்ச்சியுடன்) நீ கூடவா இப்படிப் பேசுகிருய்! ஒழுக்கம் அவ்வளவு சக்தி வாய்ந்ததா?

அர்ச்சுனன்: ஆமாம், மனிதரிடம் அதற்குள்ள சக்தி அபாயகரமானது.

ஊர்வசி: அர்ச்சுனு! நான் ஏமாந்தேன். கேவலம், சாஸ்திரங்களையும், வழக்க ஒழுக்கங்களையும் மேற் கோள்களாகச் சொல்லிக்கொண்டு திரிவாய் என்று நான் நினைக்கவே யில்லை. அட பாபமே, வெளி வேஷத் தைக் கண்டு மயங்கினேனே!

அர்ச்சுனன்: (பணிவோடு) அம்மா! கோபித்துக் கொள்ளாதே! சிந்தித்துப்பார். தேவதேவன் பிரிய நாயகி!—இந்திரன் என் தந்தை. புரூரவஸ் எங்கள் மூதாதை.

ஊர்வசி: சை! தபஸ்வியே! உன் பாசுபதாஸ்திரத் தைத் தூக்கி எறிந்து விடு. சித்தத்தை அடக்கி, புலன் களை மடக்கி, தவம் செய். போ! நீ வீரன் என்று நினைத்தேன். பேயைக் கண்டு நடுங்கும் பயங்காளி நீ! —உனக்குக் கிரீடம் என்ன? ஆபரணங்கள் என்ன? தர்ப்பையைத் தூக்கிக்கொள்! ஆச்ரமம் கட்டிக் கொள்!

அர்ச்சுனன்: முறை தவறி எப்படி நடப்பது? சாஸ்திரத்திற்கு விரோதமாக என்ன செய்வது? ஒழுக் கம் தவறி எப்படி நடப்பது?

ஊர்வசி: தர்ம நிலை தவருதவனே! சட்டம் பேசு

கிருய். சாஸ்திரம் பேசுகிருய். ஆனல், உயிரைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. மேற் புல்லே மேயாதே. உள்ளிருக்கும் எரிமலேயைக் கவனி. சேர விரும்பும் இரண்டு உயிர் ஜீவன்களே உன் சாஸ்திரமும் ஒழுக்கமும் தடுக்கின்றன். சேர விரும்பாத இரண்டு ஜீவன்களேச் சேர்த்து வைத்துச் சித்திரவதை செய்கின்றன. 'சாஸ்திரம்', 'ஒழுக்கம்', இவ்வார்த்தைகளே என் காதில் போடாதே. அவைகள் பயங்கரமான விலங்குகள்!

அர்ச்சுனன் : ஆமாம், பழமையினுல் பலமடைகின்றன அவை. பழமையைக் கண்டு பயப்படவேண்டியிருக்கிறது, தாயே!

ஊர்வசி: (அருவருப்புடன்) பயந்துகொண்டேயிரு. அது உன்னே விழுங்கட்டும். கைக்கட்டுகளே உடைத்தெறிய உனக்கு பௌருஷம் கிடையாது. அசேதன வஸ்து நீ. ஆண்மை யற்றவன் நீ. போ. என் முன் நில்லாதே. ரஸிகத் தன்மையை நீ இழப்பாய்!

(போகிருள்)

‘ஸெலக்ஷன்’ சங்கடம்

கல்யாணசுந்தரம்	ஸையத்
மீனாக்ஷிநாதன்	ஹெட்மாஸ்டர்
சொக்கலிங்கம்	பியூன்

[**ஹை**ஹஸ்கூல் ஹெட்மாஸ்டரின் அறைக்கு அடுத்தாற்போலுள்ள ஒரு பெரிய ஹால். மாலை சுமார் மூன்றுமணி. தலைமை உபாத்தியாயர் தம்முடைய உபாத்தியாயர்களுடன் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். பக்கத்திலே சித்திரகுப்தன் போல் குமாஸ்தா ‘மார்க் ரிஜிஸ்டரை’ வைத்துக்கொண்டு நிற்கிறார். இதெல்லாம் ஜன்னல் வழியாகச் சலனப் படம் போல, அந்த ஜன்னலில் நெருங்கிக்கொண்டு நிற்கும் ஐந்தாறு மாணவர்களுக்குத் தெரிகிறது. இதர மாணவர்கள் அங்குமிங்குமாகப் பதைபதைப்புடனும் பரபரப்புடனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

கல்யாணசுந்தரம் : அடே மீனாக்ஷி! இன்னிக்காவது தலையைச் சொரியாதேடா.

மீனாக்ஷிநாதன் : தலையைச் சொரிந்தால் என்ன? மண்டையைச் செதுக்கியெறிந்தால்தான் என்ன? இந்தப் *பொட்டையன் எழுதின எழுத்தை அழித்து எழுத முடியாது; பிரும்மா எழுத்தைக்கூட அழித்து எழுதிவிடலாம். டே சொக்கலிங்கம். இங்கே வாப்பா! (சொக்கலிங்கம் வருகிறான்.) பொட்டையன் இன்னிக்கி

* தலைமை உபாத்தியாயர்

க்ஷவரம் பண்ணிக்கொண்டிருக்கான்; தெரியுமோல் லியோ?

சொக்கலிங்கம்: அட எளவே! வெறும் நாளிலே சவரம் பண்ணிக்கொண்டு வந்தாலே, குட்டு உதை வசவு எல்லாம் தாராளமாகக் கிடைக்கும். இன்னிக் குப்போய்ச் சவரம் பண்ணிக்கொண்டு வரணுமா! நம்ம 'ரிஸல்டை'ச் சவரம் பண்ணிடுவார்; சந்தே கமேயில்லே.

மீனாக்ஷிநாதன்: உனக்கென்னப்பா கவலே? நீதான் நன்ருயெழுதியிருப்பாயே.

சொக்கலிங்கம்: என்ன கேலியா பண்றே? ஏண்டா நம்ப சமாசாரந்தான் உனக்கு நல்லாத் தெரியுமே. ஒன்று, நிச்சயமாப் 'பாஸ்' பண்ணிடு வோம் என்கிற தைரியம் வேணும். இல்லாட்டி, தேறுதுங்கிற விஷயமாவது நிச்சயமாகத் தெரியணும். அப்படியு மில்லாமே இப்படியு மில்லாமே நடுவாந் தரத்திலே திண்டாட வேண்டி யிருக்குங்கிறேன். இந்தவாட்டி உன்னே அனுப்புவாரா இல்லேயா;

மீனாக்ஷி: என்னபண்ணித் தொலேக்கருனே, பாவிப் பயல். என்னே சதா கருவிக்கொண்டேயிருந்தான். இந்த விசையும் நிறுத்திவிட்டான்னு என்பாடு திண் டாட்டந்தான். இந்த வருஷம் என்னே நிறுத்தட்டும்; அவனே ஒரு கை பார்த்துடறேன். எப்படியிருந்தாலும் சரி. அடுத்த வருஷம், இங்கே படிக்கப்போவதில்லே. ஏ. கே. ஸி. ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஒத்தரைக்கூட நிறுத்தவில்லேயாம். இந்தத் தோசிதான் நம்ப வயிற் றெரிச்சலே இப்படிக் கொட்டிக்கிருன்.

கல்யாணம்: அனுப்பறவங்களெல்லாம் தேறிட

ராங்களா? போன வருஷம் இவர் அனுப்பமாட்டேன்னு தகராறு பண்ணின ஆட்கள்தான் முதல்லே தேறிஞர்கள். எங்கே, ஸையத்தைக் காணோம்?

சொக்கலிங்கம்: அதோ ஜன்னல்கிட்ட நிற்கிருனே. ஏ ஸையத்! ஸையத்!

ஸையத்: (விரலை வாயில் வைத்து) உஸ். சத்தம் போடாதே! பொட்டையன் காதில் விழப்போவுது.

கல்யாணம்: என்ன இவ்வளவு பயம்? இப்பொழுது பணிவு, பயம் எல்லாம் வந்துவிட்டதுபோலிருக்கிறது. எவ்வளவு நாளைக்கு?

ஸையத்: 'ரிஸல்ட்' சொல்லுகிறவரையில்.

மீனுக்ஷி: உனக்கென்னப்பா; ஸெலக்ஷன் ஆகலேன்ஞ, மரக்கடையில் உட்கார்ந்து விடுவாய். பிழைக்கத் தெரியாத என்போன்ற ஆசாமிதான் பரீக்ஷை பரீக்ஷைன்னு அது நம்மை விடுகிறவரையில், அதோடு மாரடிக்கவேண்டியிருக்கிறது.

சொக்கலிங்கம்: அங்கே என்ன நடக்குது? ஏதாவது தெரியுதா?

ஸையத்: ஒண்ணுமே காதிலே விழல்லியே. கண்ணாடி அடைச்சிருக்காங்களோ இல்லியோ! இன்னம் கொஞ்ச நேரத்தில் எல்லாம் தெரிஞ்சு போவுது. அவுங்க என்னதான் பண்ருங்கன்னு பாத்துக்கிட்டிருந்தேன்.

கல்யாணம்: என்ன பண்ருங்க அப்பா? அப்பொ முதற்கொண்டு ரொம்பக் கவனமாகக் கவனித்துக்கொண்டிருந்தாயே?

ஸையத்: ஹெட்மாஸ்டர், 'மார்க் ரிஜிஸ்ட'ரைக்

கையில் வைத்துக்கொண்டிருக்கிறார். கையில் 'அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்டர்' மாதிரி ஒண்ணு இருக்குது.

கல்யாணம்: சரி. சரி. என்பாடு நிச்சயம் திண்டாட்டந்தான்.

மீனாக்ஷி: ஏண்டா! என்ன ஆபத்து வந்துடுத்து புதுசா?

கல்யாணம்: ஊமைப் பெண்ணுக்குக் கண் வேறு குருடு. அந்தமாதிரி, 'மார்க்'கே இழுவல்; அதோடு 'டர்ம்டேஸ்' கொஞ்சம் போதாது. சரி சரி.

சொக்கலிங்கம்: மற்ற வாத்தியார்கள்ளாம் என்ன பண்றுங்க?

ஸையத்: ஹெட்மாஸ்டர், ஒவ்வொரு பையனையும்பற்றி ஒவ்வொரு வாத்தியாரையும் கேட்கிறார் போல இருக்கிறது. கம்பளிப்பூச்சியும்*, மிஸ்டர் ஆந்தையும்† தான் குறுக்கே விழுந்து விழுந்து பேசறதுகள். கே. வி. எஸ். வாயே திறக்கவில்லை; பேசாமல் உட்கார்ந்திருக்கிறார்.

கல்யாணம்: கே. வி. எஸ். ரொம்ப அப்பாவி. அவராலே ஒருவருக்கும் உபத்திரவமேயில்லை.

மீனாக்ஷி: பொட்டையன், கம்பளிப்பூச்சி, மிஸ்டர் ஆந்தை இதுகள் மூணும் மும்மூர்த்திகள்தான். இவங்க இருக்கிறவரையில் இந்தப் பள்ளிக்கூடமே உருப்படாது.

ஸையத்: இவங்களுக்கு என்னப்பா வந்தது? அனுப்பித் தொலைக்கிறதுதானே!

கல்யாணம்: ஒரு வருஷம் வீணாவதென்றால்

---

* கணக்கு வாத்தியார் † ஸயன்ஸ் வாத்தியார்

லேசாகவாயிருக்கிறது? இந்த வருஷம் கட்டுவதற்குப் பணம் சம்பாதிக்க நான் எவ்வளவு திண்டாடினேன் தெரியுமா? மற்றப் பள்ளிக்கூடங்களில் பரீக்ஷைக்குப் போகிறவர்கள் ஜாப்தாவைச் சொல்லிவிட்டு, அவர்களை மாத்திரம் பணம் கொண்டுவரச் சொல்லுவார்கள். இவர்மாத்திரம், முதல்லே எல்லோரையும் பணத்தைக் கட்டிவிடச் சொல்கிறது. பிறகு ஜாப்தாவை வெளியிடறது. ரொம்ப அக்கிரமம்.

மீனாக்ஷி: அது ஏன் தெரியுமா? பொட்டையன் பெரிய பேர்வழி! 'ஸெலக்ஷன்' ஆகாதவர்கள் பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் விட்டுவிட்டுப் போனாலும் போய்விடுவார்கள். அதற்காக முதல்லேயே எல்லார் பணத்தையும் வசூல் பண்ணுகிறது. பரீக்ஷைக்குப் போகிறவர்கள் பணத்தை மாத்திரம் கவர்மெண்டுக்கு அனுப்புகிறது. போகாதவர்களுக்கு, பாக்கியிருக்கும் மாதச் சம்பளத்தைப் பிடித்துக் கொண்டு, மீதியிருக்கும் இரண்டேகாலே வீசத்தைத் திருப்பிக் கொடுத்து வீட்டுக்கு அனுப்புவது. இது அவர் வழக்கம். ஆள் யமன்!

கல்யாணம்: அம்மாவும் அப்பாவும் பரீக்ஷைக்குப் பணம் கட்டப்போவதாக நினைத்துக்கொண்டிருப்பார்கள். இந்த வருஷம் அனுப்பவில்லையென்று சொல்லிவிட்டு, இரண்டேகாலே வீசத்தைத் திருப்பிக் கொடுத்தால் ரொம்ப நன்றாயிருக்கும்!—சகிக்கவில்லை இவர் பண்ணுகிற அக்கிரமம்!

சொக்கலிங்கம்: போன வருஷம் அருள்சாமியை அனுப்பின சமாசாரம் தெரியுமா? மீனாக்ஷி, அதைச் சொல்லேன்.

மீனுக்ஷி : நீயே சொல்லு அப்பா! எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லே.

சொக்கலிங்கம் : போன வருஷம் அருள்சாமி எல்லாப் பாடத்திலும் ஒத்தை 'டிஜிட்' மார்க் வாங்கியிருந்தான். வகுப்பில் எல்லோருடனும் பணத்தைக் கட்டினுன். 'ரிஸல்ட்' அன்னிக்கி ஹெட்மாஸ்டர் அவனேக் கூப்பிட்டனுப்பித்தார். 'அடுத்த வருஷம், நீ இங்கே படிக்கவேண்டாம். வெட்டியில் பணத்தையும் காலத்தையும் செலவழிக்காதே' என்று சொல்லித் தயாராய் வைத்திருந்த 'டிரான்ஸ்பர் ஸர்ட்டிபிகேட்' டையும் பாக்கி ரூபா இரண்டேகாலே வீசத்தையும் கொடுத்தனுப்பினுர்.

மீனுக்ஷி : அந்தமாதிரி, எனக்கு இந்த வருஷம் பண்ணினுல்கூடப் போதும். இல்லேயானுல், நானே 'ஸர்ட்டிபிகேட்'டை வாங்கிக்கொண்டுவிடப் போகிறேன்.

[சேவகன் ஒரு சீட்டைக்கொடுத்து ஹெட்மாஸ்டர் கூப்பிடுவதாகச் சொல்கிருன். சொக்கலிங்கம் வாங்கி, அந்தச் சீட்டைப் பார்க்கிருன்.]

சொக்கலிங்கம் : (பயத்துடன்) ஹெட்மாஸ்டர் என்னேக் கூப்பிடுருர். யமகிங்கரன் மாதிரி ஆள் வந்தூட்டானே! என்னடா பண்றது?

மீனுக்ஷிநாதன் : சும்மா போடா! ஒண்ணும் பயப்படாதே!

[சொக்கலிங்கம் 'பயங்கர' அறைக்குள் நுழைகிருன்.]

கல்யாணம் : இதேதடா சங்கடமாயிருக்கிறது!

மீனுக்ஷி : இன்னிக்கிப் பூரா இந்த நரகவேதனேயை அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

[சொக்கலிங்கம் வாடிய முகத்துடன் திரும்பி வருகிறான்.]

கல்யாணம், மீனாக்ஷி, ஸையத்: என்னடா? என்ன சொன்னாருடா? சொல்லடா?

சொக்கலிங்கம்: (வருத்தத்துடன்) அனுப்பமாட்டாராம்டா.

எல்லோரும்: அனுப்பமாட்டாரா?

சொக்கலிங்கம்: ரொம்பக் கோவிச்சுண்டார்.

மீனாக்ஷி: கம்பளிப்பூச்சியின் வேலை அதிலேயிருக்கும். நீ வேணுப்பாரு.

கல்யாணம்: அடித்தாரா என்ன? .

சொக்கலிங்கம்: ஆமாண்டா!

மீனாக்ஷி: அப்பொ உன்னை நிச்சயம் அனுப்பி விடுவார். உதை விழுந்தால் 'ஸெலக்ஷன்' ஆயிடுத்தென்று நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

[சேவகன் வந்து ஸையத்தைக் கூப்பிடுகிறான். ஸையத் போகிறான்.]

கல்யாணம்: எனக்கு ரொம்பப் பயமாயிருக்குதுடா.

மீனாக்ஷி: சும்மாத் தைரியமாயிருடா!

[ஸையத் முணுமுணுத்துக்கொண்டே வருகிறான்.]

எல்லோரும்: என்ன?

ஸையத்: என்ன, எல்லாம் தெரிஞ்சதுதான் போனேன். 'இந்த வருஷம் கட்டாயம் பரீக்ஷைக்குப் போகணுமா?'ன்னு கேட்டார். 'ஆமாம், போக வேண்டியதுதானே' என்றேன். 'போனால் தேறிடுவாயா?' என்று கேட்டார். 'முடியுமட்டும் சிரமப் பட்டுப் படிக்கிறேன்' என்றேன். 'இந்த வருஷம் நீ போகவேண்டாம். சாவகாசமாகப் படி. அடுத்த வருஷம் போகலாம். கணக்கிலே 25. பிசிக்ஸிலே

20. உன்னை அனுப்பி என்ன பண்றது? போயிட்டுவா' என்று அனுப்பிவிட்டார்.

[சேவகன் மறுபடியும் வருகிறான்.]

கல்யாணம்: யாருக்கு ஆபத்தோ தெரிய வில்லையே?

மீனாக்ஷி: கல்யாணம்! உன்னைத்தாண்டா கூப்பிடறான்.

[கல்யாணம் நடுங்கிக்கொண்டு போகிறான்.]

மீனாக்ஷி: பாவம்! கல்யாணம் ரொம்பப் பயந்தவன்.

சொக்கலிங்கம்: நம்ம ஹெட்மாஸ்டருக்குத் தராதரமே தெரிவதில்லை. மஹா மோசம்.

[கல்யாணம் கண்ணீர் ததும்ப வருகிறான்.]

மீனாக்ஷி: ரொம்ப பயமுறுத்தினாரோ? உதை பலமோ?

கல்யாணம்: நான் பிரயோஜனமில்லையாம். 'மார்க் போதாது, டர்ம் டேஸ் போதாது' என்று ரொம்ப வைதார். கடுமையாகக் கோபித்துக்கொண்டார்.

[சேவகன் வருகிறான்.]

ஸையத்: (சீட்டைப் பார்த்து) மீனாக்ஷிநாதா! உனக்கு அழைப்பு வந்திருக்கு. போயிட்டு வா.

மீனாக்ஷி: வரட்டுண்டா பார்த்துக்கிறேன். (போகிறான்.)

சொக்கலிங்கம்: தைரியமாய்ப் போறானே. வர்ர போதுன்னா அவன் தைரியம் தெரியும்!

(மீனாக்ஷிநாதன் சிரித்துக்கொண்டே வருகிறான்.)

எல்லோரும்: என்னடா? அனுப்புவாராடா?

மீனாக்ஷி: அனுப்பமாட்டேன்னுதான் சொன்னார்.

இருந்தாலும் அடி நன்னு வெளுத்துட்டார். அதனுலே நிச்சயம் அனுப்பிடுவார். பாரேன், நம்ம எல்லோரையும் அனுப்பிடத்தான் போருர்.

கல்யாணம்: போடா போ! என்னடா விளையாட்டு? இப்ப என்னடா பண்றது? ஒண்ணும் புரியல்லியே!

சொக்கலிங்கம்: படிப்பும் போதும்; பரீக்ஷையும் போதும். தலையை முழுகிடப் போறேன். ஸையத்! உனக்குத்தான் மரக்கடையிருக்கே; போய்ப் பொட்டியடியில் ஒக்காந்திரு.

ஸையத்: பள்ளிக்கூடம் பெரிய லீவு கழித்து மறுபடியும் திறக்கும் வரையில் புஸ்தகத்தைத் தொட வேண்டாம். ஆறுமாசத்துக்குக் கவலையில்லை.

சொக்கலிங்கம்: நம்ப போய் அவரைக் கண்டு வருவமா? சித்தெ இரண்டு வார்த்தை சொல்லிக் கெஞ்சிப் பார்ப்போமே.

மீனுக்ஷி: இருங்கப்பா. ஜாப்தாவை அவர்கள் ஒட்டட்டும். அதற்கப்புறம் மேல் நடவடிக்கைகள் நடத்தலாம்.

கல்யாணம்: நான் அவரிடம் போய் முறையிட்டுத்தான் ஆகணும்.

ஸையத்: சொக்கலிங்கம்! நீதான் ஒரு வருஷமா காக்காப் பிடிச்சிண்டு வந்திருக்கியே; ஏன் உன்னைக் கூட இந்தமாதிரி செய்துட்டார்?

மீனுக்ஷி: காக்காயும் குருவியும் இவங்கிட்டே நடக்காது. ஆனுல் நான் இந்தவிசை விடப்போவ

தில்லை—டே! டே! டே! வாங்கடா. வாங்கடா. 'லிஸ்டை' ஒட்டறுண்டா.

[எல்லோரும் ஜாப்தாவைப் பார்க்கிறார்கள்.]

மீனாக்ஷி: ஸையத், கையைக் கொடு. கல்யாணம் உன் கையை நீட்டு. சொக்கலிங்கம்!

[ஒவ்வொருவரும் கைகுலுக்கிக்கொள்கிறார்கள்.]

கல்யாணம்: எல்லாரையுமா அனுப்பறார்?

ஸையத்: நல்ல வேளை. குஷிதான் இந்த வருஷம்!

சொக்கலிங்கம்: இருபத்தாறுபேரில் ஒத்தரைக் கூட நிறுத்தல்லியே! இந்த வருஷம்மாதிரி ஒருவருஷமாவது எல்லோரையும் அனுப்பினதேயில்லை!

மீனாக்ஷி: நான்தான் சொன்னேனே, அவர் அடிக்க ஆரம்பித்தால் அனுப்புவது நிச்சயம்னு. நடுவாந்தரங்களைக் கொஞ்சம் பயமுறுத்த இப்படியெல்லாம் பண்றது சும்மா!

கல்யாணம்: எல்லாம் நமக்கு நல்லதுக்குத்தானே?

ஸையத்: நம்ப சும்மாச் சொல்றோம். அடித்தால்தான் என்ன? இவர்மாதிரி, பையன்களைத் தனித் தனியாகக் கவனிப்பது வேறு ஒரு பள்ளிக்கூடத்திலும் இல்லை.

மீனாக்ஷி: ஏ. கே. ஸி. ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் பிரயோஜனமே இல்லேடா. பரீக்ஷை 'ரிஸல்டை'ப்பார். இந்தப் பள்ளிக்கூடத்திற்கும் அதற்கும் எவ்வளவு வித்யாசம்! வேலையைப் பொறுத்தவரையில், நம்மவரை மிஞ்சறவன் இந்த ஜில்லாவிலேயே இல்லை.

சொக்கலிங்கம்: பாடம் சொல்லிக் கொடுப்ப

தில்தான் என்ன? எவ்வளவு புரியும்படி சொல்லித் தருார்! பால் மாதிரி போட்டருார்.

கல்யாணம்: வேறு ஒருத்தரும் அப்படிச் சொல்லிக் கொடுக்க முடியாது.

ஸையத்: சொக்கலிங்கம், முக்கியமா ஒரு சங்கதி மறந்துட்டமே! கடைசி வருஷமாச்சே; ஹெட்மாஸ்டருக்குப் 'பார்ட்டி' கொடுத்து ஒரு 'குரூப்' எடுத்துக்க வேண்டாமா?

மீனாக்ஷி: அவ்சியம் உடனே செய்யணும்டா. போன வருஷத்தைவிட இந்த வருஷம் நன்னாயிருக்கணும்.

சொக்கலிங்கம்: சிறப்பாகச் செய்துவிடலாம், சும்மாயிரு.

[சேவகன் சீட்டுக் கொண்டுவருகிருன்.]

கல்யாணம்: அடேடே! நம்ப நாலுபேரையும் ஹெட்மாஸ்டர் இருக்கச்சொல்கிருர்! இதேதடா வம்பு?

மீனாக்ஷி: ஐயையோ! சனி விடாது போலிருக்கு! (ஹெட்மாஸ்டர் வருகிருர்)

ஹெட்மாஸ்டர்: தாட்சண்யத்திற்காக இந்த வருஷம் உங்களை அனுப்புகிறேன். பரீக்ஷைக்குள்ளே நீங்கள் சரியாகப் படிக்கல்லையோ, உங்களைப் பரீக்ஷை எழுதவிடமாட்டேன்; ஜாக்ரதை. ரொம்ப சிரத்தையாய்ப் படிக்கணும். தெரியறதா?

எல்லோரும்: ஆகட்டும் ஸார். ஆகட்டும் ஸார்.

ஹெட்மாஸ்டர்: படிப்பிலே உஷாராயிருங்கள். விளையாட்டு ஜாஸ்தியாச்சோ, தொலைத்துவிடுவேன்.

எல்லோரும்: இல்லை ஸார், ஆமாம் ஸார்.

ஹெட்மாஸ்டர்: சரி, போய்ப் படிக்க ஆரம்பியுங்கள். போங்கள். (ஹெட்மாஸ்டர் போகிறார்)

மீனாக்ஷி: நல்ல வேளை!' இத்தோடே விட்டார். இன்னிக்கி முழித்தவர் மூஞ்சியிலே முழிக்கவேணும். சரி, ஆளுக்கொரு கப் காபி! என்னசொல்றேள்?

ஸையத்: ஆகா, எல்லோரும் தயார். ஆனால், மீனாக்ஷி, நீதான் வாங்கிக் கொடுக்கணும்.

மீனாக்ஷி: நீதான் கொடேன்?

கல்யாணம், ஸையத், சொக்கலிங்கம்: மீனாக்ஷிதான் கொடுக்கணும். அவன்தான் பெரியவன்.

மீனாக்ஷி: சரி வாருங்கள், ஆனால் ஹெட்மாஸ்டருக்குக் கொடுக்கவேண்டிய 'பார்ட்டி'க்குத் தயார் செய்யவேண்டியது, ஸையத், உன் பொறுப்பு. சரிதானே?

கல்யாணம்: எங்கே போகலாம்? ராமவிலாஸுக்குத்தானே?

சொக்கலிங்கம்: சே, சே. அங்கே கூடவே கூடாது. ஹெட்மாஸ்டர் திடீரென்று வந்தாலும் வந்துவிடுவார். கிருஷ்ணவிலாஸுக்குப் போகலாம்.

மற்றவர்கள்: சரி. (போகிறார்கள்.)

நடிகை

சுப்பையா செட்டியார் — சௌபாக்யலக்ஷ்மி
சிதம்பரம் செட்டியார் — பிராமணன்

[ஒரு நாகரிகமான அறை. சாய்வு நாற்காலிகளில், சுப்பையா செட்டியாரும் சிதம்பரம் செட்டியாரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். மாலை சுமார் மூன்று மணி இருக்கும்.]

சுப்பையாசெட்டியார் : சீனு, தானு; அப்பொ அடுத்ததும் புராணப் படம் தானு?

சிதம்பரம்செட்டியார் : ஆமாம், சுனு பனு! புராணப்படம் தான். சமூகப் படங்கள் இரண்டு எடுத்ததிலே கையைக் கடிச்சிடுச்சு. இனிமேல் சமூகப் படமே எடுக்கப் போவதில்லை.

சுப் : பெண் பிள்ளைகளுக்குப் புராணம் தான் பிடிக்கிறது. பெண் பிள்ளைகள் நிறைய வந்தால் தானே, படத்துக்கு வசூல்?

சித : காரணம் என்ன தெரியுமா? ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மாமியார், புராணப்படமானுல்தான் மருமகளைப் போகச் சொல்ரு. சமூகப் படமானுல் காலித்தனமாய் இருக்குமென்று, போகச் சொல்லுவதில்லை.

சுப் : ராமனையும், கிருஷ்ணனையும் வைத்துக் கொண்டு, என்ன காலித்தனம் செய்தாலும் பாதகமில்லே!

சிது: அது பரவாயில்லே.

சுப்: நக்ஷத்திரம் யாரு?

சிது: ஸௌபாக்யலட்சுமி தான்.

சுப்: பேஷ்! இப்பொழுது அவளுக்கு நல்ல கிராக்கியாகத் தான் இருக்கு. அவள் நடித்த படங்களுக்கும் நல்ல வசூல் தான்.

சிது: நல்ல முகவெட்டு. நல்லாப்பாடுகிறுள். நடிப்பும் கூடுமான வரையில் நல்லா யிருக்கிறது. வேறே என்ன வேண்டும்?

சுப்: பேசி முடித்தாய் விட்டதா?

சிது: அநேகமாக முடிந்தது மாதிரி தான்.

சுப்: உங்களே ஒரு விஷயம் வெகு நாளாய்க் கேட்கணும்னு எனக்கு, அவளுக்கு எந்த ஊரு?

சிது: இது தெரியாதா உங்களுக்கு? தெரிந்திருக்குமின்னு அல்லவா நினேச்சேன். அவளுக்கு நம்ம ஊர் தான்.

சுப்: அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தாங்க. எனக்குச் சந்தேகம். அதற்குத் தான் கேட்டேன்?

சிது: சந்தேகப்படவே வேண்டாம். அசல் நம்ம ஊர்க்காரி. காஞ திஞ வீட்டுக் குப்பான் செட்டியார் இருக்கிருரே, அவரிடம் ஓர் ஐயர் வேலேக்கிருந்தார். அவருடைய சம்சாரம் இந்த அம்மாள்.

சுப்: அப்படியா! எனக்குத் தெரியவே தெரியாது.

சிது: அப்பவே, இந்த அம்மா ஒரு மாதிரி. அந்த ஐயன் ஒரு அப்பாவி; யோக்கியன். இந்த அம்மாளுடைய தளுக்கு மினுக்குக்கும், ஐயனுடைய சாதுத்தனத்துக்கும் சரிப்பட்டு வரவில்லே.

சுப்: சரிப்பட்டு வராது தானே!

சித: ஒரு தரம், அவர்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு நாடகக் கம்பெனி ஆளுக்ள் வந்து தங்கி யிருந்தானுக. இரண்டு மாசம் ஊரிலே நாடகம் நடந்தது. அவன்கள், போகும்போது, இந்த அம்மாளையும் காணோம்.

சுப்: அந்த ஐயர்?

சித: அவர் எங்கே போவார்? இங்கே தான் இருக்கார். சம்சாரத்தின் மேல் அளவு கடந்த ஆசை அவருக்கு. சொற்பச் சம்பளம் தானே? கடன் வாங்கியாவது, பெண்டாட்டிக்கு வேண்டியதை யெல்லாம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

சுப்: அவ்வளவு பிரியமுள்ளவரையா சந்தியில் விட்டு விட்டுப் போய் விட்டாள்!

சித: இவர் நல்லவராய் இருந்தாலும் அவளுக்கும் இவருக்கும், சரியா வருமா? இவரை விட்டு விட்டுப் போனதினாலேதான், இவ்வளவு பெரிய நக்ஷத்திரம் ஆனா. படத்துக்குப் பதினையாயிரம் கேட்கிரு. இங்கே இருந்தால், சோத்துக்கு லாட்டரி போட்டுக் கொண்டிருக்க வேண்டியது தான்.

சுப்: அந்த ஐயர் வேறே கல்யாணம் செய்து கொண்டு விட்டாரோ?

சித: இல்லை யில்லை. மறு கல்யாணம் வேறே வேண்டுமா அவருக்கு? பெண்டாட்டி ஓடிப்போனதிலிருந்து பித்துப் பிடித்தது மாதிரி திரிந்து கொண்டிருந்தார். வேலையை விட்டு விட்டார். நாடோடியா ஊர் சுற்றிக் கொண்டிருக்கார். இங்கே கூட அடிக்கடி வருவார். ஏதாவது நானும் அவருக்கு கொடுப்ப

துண்டு. ஆனல் மனுஷன் ஒரு மானஸ்தன். ரோசக் காரன். இன்னைக்குக்கூட அவர் வந்தாலும் வருவார். வந்தால் காட்டுகிறேன்.

சுப்: ஐயரைப் பார்த்து என்ன ஆகணும்?

சிநு: அப்போ நக்ஷத்திரத்தைப் பார்க்கணு மின்னு ஆசை இருக்கோ? அவளும் இன்னிக்கி வரு வாள்.

சுப்: இரண்டு பேரும், சந்தித்தால் என்ன செய் வார்கள்?

சிநு: என்ன செய்வார்கள்? இந்தப் பிராமணன் அவளைத் தெரிந்து கொள்ள முடியாது; அவள் இவ ரைத் தெரிந்து கொள்ள முடியாது. அவள் எவ்வளவு பெரிய மனுஷி ஆயிட்டாள்; இந்தப் பிராமணன் பாவம் பைத்தியக்காரனைப் போல் இருக்கான்!

[வெளியே இருந்து யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கிறது]

முதலாளி இருக்காங்களா?

சுப்: யாரோ கூப்பிடுகிறுப் போலிருக்கே?

[ஒரு ஏழைப் பிராமணன் உள்ளே வருகிறுன்]

சிநு: யாரையா அது? அட நீங்களா! உங்க ளுக்கு ஆயுசு நூறு, ஐயா? சுணு பணு! இப்பபேசிக் கொண்டிருந்தமே, அந்த ஆசாமி இவர் தான்.

சுப்: இவர் தானு? வாங்க, ஐயா; இப்படி இருங்க.

சிநு: என்ன, ஐயா! பிழைப்பு எப்படி நடக்குது?

பிரா: (வெறுப்புடன்) என்ன பிழைப்பு! மானங் கெட்ட பிழைப்பு! ஆத்தமாட்டாமல் காலந்தள்ள வேண்டி யிருக்கிறது. இப்பொழுதெல்லாம் சிறு

பிள்ளைகளின் ராஜ்யமாப் போயிடுத்து. அந்த காலத்து மனுஷ்யர்களுக்கு விசுவாசம் ஜாஸ்தி. இப்பொழுது அதெல்லாம் கிடையாது.

சுப்: (சித-வைப் பார்த்துக் கொண்டு குறும்பாக) என்ன சினு-தானு? நம் விசேஷத்திற்கு ஐயர்வாளைத் தம்பதியாக வைத்தால் என்ன?

சித: (விஷமமாக) வைக்கலாம். ஐயரை வைக்கலாம். ஆனால் சம்சாரத்திற்கு எங்கே?

சுப்: (ஆச்சரியமடைந்தவர் போல) என்ன ஐயர் பிரம்மசாரியோ?

சித: கல்யாணம் ஆயிடுத்து; ஆனால் அவர் மனைவிக்கு இவருடன் வாழக் கொடுத்து வைக்க வில்லை. ஏன் ஐயா செத்துப்போய் விட்டாளா? ஓடிப்போய் விட்டாளா?

பிரா: (அருவருப்புடன்) நான் வந்த காரியம்......

சித: (அவர் முகபாவத்தைப் பார்த்துக் கொண்டே) ஐயா, இப்பொ ஒரு சினிமாக்காரி இங்கே வருவ. அவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றேன். பண்ணிக்கிறீரா!

பிரா: (கோபத்தையும் அவமானத்தையும் காட்டும் பாவத்துடன்) முதலாளிமார்களுக்கு சினிமாக்காரி தேவை. எனக்கு என்னத்திற்கு.

சுப்: இந்தக் காலத்திலே சினிமாக்காரியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது ரொம்ப நாகரிகம் ஐயா! நீரும் நாகரிக மனுஷனாகுமே. சாப்பாட்டுக் கவலை இல்லாமல் இருக்கலாம். யாசகம் கேட்க வேண்டாம்.

பிரா: முதலாளிகளுக்கு எல்லாம் விளையாட்டாய்த் தான் இருக்கு. (சித-வைப் பார்த்து) அன்

னிக்கி வந்தேன், இன்று வரச் சொன்னீர்கள். காசி வரையில் போகணும்னு ஆஸ்தை இருக்கு. அங்கேயே பிராணனை விட்டாலும் என் ஆத்மா சாந்தி அடையும். முதலாளிகள் கிருபை வைத்து ஏதாவது பார்த்து அனுமதி பண்ணினல், அடிக்கடி இங்கே வந்து தொந்தரவு பண்ணச் சந்தர்ப்பம் ஏற்படாது. அவிடத்திலே பெரியமனது வைத்து ஏதாவது செய்யணும்.

சுப்: காசிக்குப் போனாலும் சில பேருக்குக் கருமந் தொலையாதையா.

[வெளியே தூரத்தில் மோட்டார் 'ஹார்ன்' சத்தம் கேட்கிறது]

சித: கொஞ்சம் இருங்க. கார் வரும் சத்தம் கேட்குது. (மறுபடியும் கவனித்துக் கேட்டு விட்டு) ஆமாம் அவ கார் தான். ஐயா, நீர் அந்த வாசலிலே இரும். கொஞ்ச நேரங் கழிச்சுக் கூப்பிடறேன். இல்லேன்னு நாளைக்கு வாரும். இப்ப ஒரு மனுஷா இங்கே வராங்க. போயிட்டு வாரும். (பிராமணன் ஒரு பக்கமாகப் போகிருன்.)

[வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. சௌபாக்ய லட்சுமி தக்க அலங்காரத்தோடு வருகிருள்.]

சித: வாங்க, வாங்க, இப்படி உட்காருங்க—டே, பயலே கறுப்பையா! பிரிஜிடயர்லே இருந்து இரண்டு சாத்துக் கட்டியும், ஒரு கிரஷும் எடுத்துண்டு வாடா—உங்களை எதிர் பார்த்துண்டே இருந்தோம். இப்ப கூட உங்களைப்பத்தித் தான் பேச்சு.

சௌ: ரொம்ப சந்தோஷம். அவாள் யாரோ?

சித: அவர் நமக்கு அத்தியந்த நண்பர். ஊரிலே. முக்கியமான புள்ளி. பெரிய முதலாளி.

சௌ: அப்படியா? (சுப-வைப் பார்த்து) உங்களைத் தெரிந்து கொண்டது ஒரு பாக்கியம் தான்.

சுப்: படத்திலே உங்களை அநேகம் தரம் பார்த்திருக்கிறேன். சித-வினாலே, நேரிலே சந்திக்கும்படியாக ஏற்பட்டது. வெகு நாளாகப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டு. அது இன்னிக்குத் தான் நிறைவேறிற்று.

சௌ: சினிமாவிலே பார்த்த பிறகு கூட, நேரிலே பார்க்க வேண்டும் என்று தோன்றிற்று என்ன? (சிரிக்கிறாள்: சித-வும் சுப-வும் கூடச் சிரிக்கிறார்கள்.)

சுப்: நீங்கள் நடித்த 'மனமோகினி' படத்தைப் பார்க்க, மூன்று தரம் போய் டிக்கட் கிடைக்காமல் திரும்பி வர நேர்ந்தது. இந்த ஊரிலே அது பனிரண்டு வாரம் ஓடிற்று.

சித: உங்க படத்தைத் தான் என் பையன் தன் பாடப் புத்தகத்தில் ஒட்டி வைத்திருக்கான்.

சுப்: எனக்கு வெகு நாளாகத் தெரியாது. இப்பொத்தான் கேள்விப்பட்டேன் உங்களுக்கு இந்த ஊர் தான் என்று.

சௌ: (சுவாரஸ்யமில்லாமல்) ஆமாம் ஆனால், வெகு நாட்களாக இந்த ஊருக்கு வருவதே யில்லை.

சித: (பேச்சைத் திருப்புவதற்கு) என்றைக்கு எக்ரிமெண்டு எழுதிக் கொள்வது?

சௌ: என்றைக்கு வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம்.

சித : சர்மாவைக் கூட்டிவரச் சொல்லவா, எக்ரிமெண்டு எழுதி முடிக்க ?

சௌ : ஆஹா, செய்யுங்கள் !

சித : டே கறுப்பையா ; காரை எடுத்துப் போய் ஐயரை அழைத்து வா. (பையன் போகிறான்.)

பிரா : (திடீரென்று வந்து) என்னையா கூப்பிட்டீர்கள் ? (சினிமா நட்சத்திரத்தைப் பார்த்துப் பின் வாங்குகிறான்.)

சித : (அருவருப்பையும் கோபத்தையும் காட்டும் முகத்துடன்) உம்மை யார் ஐயா கூப்பிட்டது ? பூஜை வேளையில் கரடி புகுந்தாப்பிலே வந்து விட்டீரே ! போயிட்டு இன்னொரு நாள் வாரும். (பிராமணன் வாசல் பக்கம் திரும்புகிறான்.)

சௌ : (பிராமணனைப் பார்த்துக்கொண்டே சிதவிடம்) கொஞ்சம் அவரை இருக்கச் சொல்லுங்கள்.

சித : ஐயரே ! கொஞ்சம் இரும்.

சௌ : நான் அவருடன் தனியாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன். கொஞ்சம் மன்னிக்கணும்.

(சித-வும் சுப-வும் ஒருவரை ஒருவர், கேள்விக்குறியுடன் பார்த்துக்கொள்கிறார்கள். சௌபாக்ய லட்சுமி பிராமணன் இருக்கும் பக்கம் வருகிறாள்.)

சௌ : நீங்களா ? அடையாளமே தெரியவில்லையே, இந்த நிலையில் உங்களைக் காண எனக்கு அளவிறந்த துக்கம் ஏற்படுகிறது !

[அது காதில் விழாதவன் போல, பிராமணன் வெளியே போகப் பார்க்கிறான்.]

சௌ : கொஞ்சம் இருங்கள். உங்களைச் சந்திப்

யதற்காகவே இப்போது இந்த ஊருக்கு வந்திருக்கிறேன்.

[பிராமணன் நிமிர்ந்து வெறுப்புடன் பார்த்துவிட்டு]

பிரா: இனிமேலும் சந்திப்பு ஏற்படாமல் இருந்தால் என் பாக்கியம்தான்.

சௌ: இத்தனை கடிதங்கள் எழுதியும் தங்கள் மனது சமாதானம் அடையவில்லை போல் இருக்கிறது

பிரா: சமாதானமா? என்னைக்கொன்று விட்டாய்! எனக்கு அழகான சமாதி கட்ட ஆசைப் படுகிறாய்!

சௌ: நான் எப்படித்தான் சொல்வது? என் மனமே என்னை வாட்டுகிறது. உங்களுக்குச் செய்த தீங்குக்குப் பரிகாரம் செய்ய அனுமதிக்க மாட்டீர்களா?

பிரா: இதற்குப் பரிகாரம் செய்ய பகவானாலும் முடியாது. ஒரு தீங்கைச் செய்தால் அதற்கு மாற்று இல்லை.

சௌ: நான் என்ன செய்வது? வெளிப் பகட்டுக்கும், சில்லரைப் பெருமைகளுக்கும் ஆசைப் பட்டேன். அப்போது உலகம் அறியாதவள். எவ்வளதரம் வேண்டுமானாலும் தங்களை வேண்டிக் கொள்கிறேன்: என்னை மன்னிக்க வேணும்.

பிரா: என் அன்புக்கு நீ செய்த துரோகத்தை எண்ணி எண்ணி நான் அடைந்த துன்பம் உன்னை ஜன்ம ஜன்மமாக வாட்டுமே!

சௌ: சுகமடைவதற்குச் சுறுக்கு வழி தேடினேன். இல்லறத்தின் துன்பத்திலும் இன்பம் இருப்பதை அறியவில்லை.

பிரா : இன்புத்தைத் தகாத விலைக்கொடுத்து வாங்கினுய் ; எனக்குத் தீராத துன்பத்தைக் கொடுத் தாய்.

சௌ : அதற்கு மாற்ருக, தங்களுக்குப் பணி விடை செய்து பரிகாரம் செய்துகொள்ளச் சந்தர்ப்பம் தாருங்கள்.

பிரா : சை ! இது என்ன நாடகம்? நான் என்னை விற்று உன்னைச் சந்தோஷப்படுத்த முயன்ற காலத்தில், நீ என்னுடன் இருக்கவில்லை. இப்பொழுது உன்னை விற்று வலியவந்து எனக்குச் சேவை செய்யப் போகிரு யாக்கும் !

சௌ : இது நாடகம் அல்ல. நடிகையான எனக்கு நாடகம் அலுத்துப்போய் விட்டது. வாழ்க்கை தான் எனக்கு தேவை. அதைத் தான் தங்களிடம் தேடிவந்தேன்.

பிரா : என் வாழ்க்கைக்கு உலை வைத்த நீயா என் னிடம் வாழ்க்கையை வேண்டுகிருய்.

சௌ : தாங்கள் அப்படி மனம் வருந்தப்படாது. என்னுடன் வந்து இருங்கள், என் மனதுக்கு ஓர் ஆறு தல் அளியுங்கள்.

பிரா : (கோபத்துடனும் ஆங்காரத்துடனும்) உல கம் என்னை வெறுக்க என் மானத்தை வாங்கினுய். அது போதாது என்று இன்னும் என்னை ஹிம்ஸிக் கிருய். உன்னுடன் வாழவேண்டுமா ? அதைவிட ரயி லடியில் விழுந்து சாகலாம்.

சௌ : தாங்கள் விரும்பினுல், நான் இந்தத் தொழிலை வேண்டுமானுலும் விட்டுவிடுகிறேன். நான் இனி விரும்புவது உங்கள் அன்பும் மன்னிப்பும்தான்.

பிரா: அது உனக்குக் கிடைக்காது. வீணைசைப் பட வேண்டாம். (போவதற்குத் திரும்புகிறுன்.)

சௌ: நான் இவ்வளவு கெஞ்சிக் கேட்கிறேனே, இரக்கமில்லையா?

பிரா: இரக்கப்பட வேண்டுமா? நீ உன் போலிப் பெருமையை இழந்து, உலகம் வெறுக்க, சோற்றுக்குத் திண்டாடித் தெருவில் அலையவேண்டும்; அப்பொழுது தான் என் மனம் திருப்தியடையும்.

சௌ: (கோபத்துடன்) என் மனச்சாட்சியைத் திருப்தி செய்யும் பொருட்டே இவ்வளதூரம் நான் வேண்டிக் கொண்டேன். தங்களுக்கு இஷ்டமில்லாது போனல் எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை.

பிரா: ஆனல். உன்னேடு இருப்பதில் எனக்கு நஷ்ட முண்டு. நான் பிச்சைக்காரனுகிவிட்டாலும் உலகம் என்னை அவமதித்தாலும்,என் சுயமரியாதையை இழக்க விரும்பவில்லை. நான் போகிறேன். இனி மேல் நமக்குள் சந்திப்பு ஏற்படாமல் இருக்கவேண்டும். அதுதான் என் பிரார்த்தனை. (திரும்புகிறுன்.)

சௌ: அப்பொழுது, என் பிரார்த்தனைக்கு நீங் கள் இரங்கமாட்டீர்களா?

[பிராமணன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே போகிறுன்.]

சௌ: ஐயோ-கடவுளே இந்த நாடகம் இப்படியா முடிய வேண்டும்!

சித: (வந்துகொண்டே) போய்விட்டாரா அவர்? அவரை எப்படி உங்களுக்குத் தெரியும்?

சௌ: (தீர்மானமாக) அவர் என் புருஷர். மிக

உத்தமர். அவருடன் குடும்பத்தில் இருந்து வாழும் பாக்கியம்தான் எனக்கு இல்லை.

(மோட்டார் ஹார்ன் சத்தம் கேட்கிறது.)

சித: சர்மா வந்துவிட்டார்.

சுப்: இன்று நல்ல நாள். எக்ரிமெண்டு இப்பொழுதே எழுதி விடலாம்.

சௌ: இப்பொழுது என் மனசு சரியாய் இல்லை. நான் போய் வருகிறேன். மற்றவைகளைப் பிறகு பார்த்துக் கொள்வோம்.

(போகிறான்)

[சித. வும் சுப. வும் ஒருவரை யொருவர் வெறிக்கவெறிக்கப் பார்த்துக்கொள்கிறார்கள்.]

தேவகானம்

அக்பர், ஹரிதாஸ் சுவாமி
தான்ஸேன்

[யமுனை நதிக்கரை—மாலை நேரம்—அக்பரும் தான்ஸேனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

அக்பர் : தான்ஸேன், நாம் இங்கு முகாம் போட்டது நல்லதாகத்தான் போயிற்று. இந்த யமுனைக் கரை எவ்வளவு மனோ நிம்மதியைக் கொடுக்கிறது.

தான்ஸேன் : ஆம் பிரபு, மனிதனைப் புனிதத் தன்மை கொள்ளச் செய்வது இந்த யமுனை.

அக்பர் : என்ன இனிமையான காற்று! இந்த மாலை வேளைக்குகந்தவாறு, "மூல்தானி" பாடு. ரொம்ப நாளாகிவிட்டது அந்த ராகத்தை உன்னிடம் கேட்டு. அரசனாகப் பிறக்கவே கூடாது. என்ன விவகாரங்கள்! என்ன சதியாலோசனைகள்! என்ன கலகங்கள்! சை. சை. நல்ல விஷயங்களைப்பற்றி நினைக்கக்கூட ஒழியவே ஒழியாது போலிருக்கிறது. ஊம் "மூல்தானி" ஆரம்பி. காது குளிரக் கேட்கலாம்.

(தான்ஸேன் பாடுகிறான்)

அக்பர் : ஆஹா! தான்ஸேன், சங்கீதம் என்பது ஒன்று இல்லாவிட்டால், சாரமில்லாத இந்த வாழ்க்கையில் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கு வேறு என்ன இருக்கிறது! என்ன கானம்! தான்ஸேன், நீ பாக்யசாலி. உனக்கு இனி பிறவியே கிடையாது.

தான் : என்ன காரணமோ?

அக்பர் : சங்கீதத்தைக் கொட்டி சில நிமிஷங்களுக்கு மனிதனை தேவனுக்கும் காயகன், தேவபுருஷனல்லவா? அவனை சாதாரண மனிதனுகவே நாம் நினைக்கக்கூடாது.

தான் : தங்களுக்கு சங்கீதத்திலுள்ள பிரேமை இப்படிச் சொல்லச் சொல்லுகிறது போலும்!

அக்பர் : ஆம். எனக்கு சங்கீதத்தில் அளவிலாத பிரேமைதான். அடுத்த ஜன்மத்திலாவாது சக்ரவர்த்தியாக இல்லாமல், ஒரு வானம்பாடியாக வனங்களில் பாடிக்கொண்டு திரியும் பாக்கியம் பெறுவேனுகில், நான் ஆனந்தமடைவேன்.

தான் : ஆம், பிரபு. சங்கீதம் மகத்தானது. அதை அப்பியசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் புண்யாத்மாக்கள் தாம்.

அக்பர் : இன்று எப்பொழுதுமுள்ளதைவிட உன் பாட்டில் ஒரு மந்திரசக்தி இருந்தது.

தான் : இருந்திருக்கலாம். ஆச்சரியப்படவேண்டியதில்லை. இந்தத் தரையில் காதை வைத்துப் பாருங்கள்; தேவகானம் ஒலிக்கும். இந்த யமுனைக்கரையின் ஒவ்வொரு மணலும், ஒவ்வொரு சுத்தமான ஸ்வரமாகத் தொனிக்கும். இது பிருந்தாவனத்தின் ஒரு பகுதி. கண்ணன் குழலோசை பொங்கி வழிந்து நாதமயமாகி நிற்கும் தபோவனம் இப்புண்ணிய பூமி.

அக்பர் : பிருந்தாவனத்தைச் சேர்ந்ததா இந்த இடம்! எனக்குத் தெரியாமல் போய்விட்டதே.

தான் : ஆம். அதோ ஒரு கோபுர கலசம் தெரிகிறதே, அதுதான் பிருந்தாவனம். அங்குதான்

கிருஷ்ணன் எங்கெங்கோ ஓடித் திரியும் பசுப்ராணி களாயிருந்த ஜீவாத்மாக்களைத் தன் குழலோசையால் கூவி இழுத்தான்.

அக்பர் : "பூர்வி"யில் கிருஷ்ணனைப் பற்றி ஒரு அருமையான பாட்டுப் பாடுவாயே. அதைப் பாடு.

தான் : (பின் வரும் கருத்தமைந்த பாட்டு ஒன்றைப் பாடுகிறான்.) ராதை கிருஷ்ணன் தன்னிடம் இருக்கிறான் என்ற கர்வத்துடன் மற்றொரு கோபியிடம் அதைத் தெரிவிக்க ஓடுகிறாள். போன இடத்திலும் கிருஷ்ணன் கோபியுடன் இருப்பதைக் கண்டு கோபத்துடன் திரும்புகிறாள். வந்து பார்க்கும்போது, மாயாவி கிருஷ்ணன், ஒன்றும் அறியாதவன்போல இருந்த இடத்திலேயே இருப்பதைக் கண்டு, கோபிப்பதா, அழுவதா என்று புரியாமல் திகைக்கிறாள்.

[பாட்டு முடிந்ததும் பரவச நிலையில் இருந்த அக்பர் கண்ணைத் திறந்து)

அக்பர் : ஆஹா! என்ன பாட்டு! என்ன ராகம்! என்ன சாகித்யம்! பரமாத்வைத் கிருஷ்ணனாகவும், ஜீவாத்மாவைக் கோபியாகவும் பக்தியைக் காதலாகவும் கற்பனை செய்து, பாடியிருக்கும் ஹிந்துக்களின் கலைத் திறனை எப்படித்தான் சிலாகிக்க முடியும்! நிச்சயமாக ஜீவாத்மாவும், பரமாத்மாவும் பேசிக்கொள்ளும் பாஷைதான் சங்கீதம்.

தான் : சங்கீதம் என்பது ஒரு யோகம் என்று சொல்வார்கள். உண்மையாக சங்கீதத்தை அப்பியசித்தவன் ஒரு மகா யோகிதான்.

அக்பர் : ஆமாம்! நீ ஒரு யோகிதான். தான்ஸேன்! சங்கீதத்தை உன்னைப்போல், பக்தியோடும், சிரத்தை

யோடும் கற்றவர் வேறு ஒருவரும் இருந்ததுமில்லை, இனி இருக்கப் போவதுமில்லை.

தான் : பிரபு, மன்னிக்கவேண்டும். தாங்கள் என்னிடம் காட்டும் தயவிற்கு நான் மிகவும் கடமைப் பட்டவன். ஆனால் தாங்கள் சொல்வதைப் போல் யோக்யதை உடையவனல்ல. நான் கிஞ்சிக்ஞன் ; சங்கீதத்தில் முழங்காலளவுகூடப் போகாதவன். சங்கீதத்தில் கரைகண்டவர்கள் இருந்திருக்கிறார்கள் ; இருக்கவும் இருக்கிறார்கள்.

அக்பர் : வித்வத்திற்கு விநயம் வேண்டியதுதான் தான்ஸேன். ஆனால், உன்னைவிட, சங்கீதத்தில் கரை கண்டவர்கள் இருக்கிறார்கள் என்றால், யார் நம்புவது? நான் நம்பமாட்டேன்.

தான் : பிரபு, நீங்கள் நம்ப மறுக்கலாம். ஆனால், உண்மையைச் சொல்லாமல் இருக்க முடியாது.

அக்பர் : (ஆச்சரியத்துடன்) வாஸ்தவமாக உன்னை விட சங்கீதம் பயின்றவர் இருக்கிறார் என்று நிச்சயமாகச் சொல்லுவாயா ?

தான் : ஆமாம் பிரபு. என் குருநாதன் இருக்கிறார். அவருடைய கால் தூசி பெறமாட்டேன் நான்.

அக்பர் : அவர் யாரோ ?

தான் : அவர்தான் ஹரிதாஸ் ஸ்வாமி.

அக்பர் : சரி. அவர் உன்னுடைய குருவாக இருக்கட்டும். ஆனாலும் ஞானத்திலோ, பயிற்சியிலோ உன்னைவிட சிலாகிக்கத் தகுந்தவராயிருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை.

தான் : பிரபு, அவரை உங்களுக்குத் தெரியாது. அவரைத் தெரிந்துகொண்டால் இவருடைய சிஷ்யன்

தானு நீ என்று ஆச்சரியப்படுவீர்கள். அப்பெரியாரின், சிஷ்யன் என்று சொல்லிக்கொள்ளும் யோக்யதைகூட எனக்கு இல்லை.

அக்பர் : அவர் எங்கே இருக்கிறார்?

தான் : (யோசனையுடன்) இங்குதானிருக்கிறார். அதோ தெரிகிறதே, அந்த பிருந்தாவனத்திலேதானிருக்கிறார்.

அக்பர் : (சந்தோஷத்துடன்) அப்படியானால் வெகு சமீபத்தில்தானிருக்கிறார். இப்பொழுதே பரிக்ஷை பார்த்துவிடலாம். நீ போய் அவரை அழைத்து வருவாயா? அவர் பாட்டையும் கேட்டுவிடலாம். தானே விஷயம் தெளிவாகிவிடுகிறது.

தான் : அது அவ்வளவு சுலபமல்லவே.

அக்பர் : எது சுலபமில்லை?

தான் : அவர் தங்களிடம் வரமாட்டார்.

அக்பர் : (சிறிது அகங்காரத்துடன்) வரமாட்டாரா? அக்பரை இதுவரையில் ரஜபுத்திரர்களே எதிர்த்து நிற்கவில்லை. ஒரு பாடகர் அக்பரின் ஆக்ஞைக்குப் படிய மாட்டாரோ?

தான் : பிரபு. தாங்கள் தெரியாமல் சொல்லுகிறீர்கள். துறவிக்கு வேந்தன் துரும்பு. நான் பதவிக்கும், பொருளுக்கும் ஆசைப்பட்டவன். அவர், ஒரு துறவி தங்களிடம் வந்து அவருக்கு என்ன ஆகவேண்டும்? தங்களிடம் அவர் எதற்காகப் பயப்படவேண்டும்? தன் வாழ்க்கையை கிருஷ்ணபரமாத்மாவிடம் ஒப்படைத்துவிட்டு, சன்யாசத்தை மேற்கொண்டு நிற்கும் தபஸ்வி அவர்.

அக்பர் : (ஆத்திரமடைந்தவர் போல) என்ன செய்தாலும் அவர் இங்கு வரமாட்டாரா ?

தான் : நிச்சயமாக வரமாட்டார். கடவுளைத் தவிர வேறொன்றையும் அவர் பொருட்படுத்தக்கூடியவர் இல்லை.

அக்பர் : (சாந்தமாக) மலை மகம்மதிடம் வராவிட்டால், மகம்மத்தான் மலையிடம் போகவேண்டும். அப்படியானால் நாமே போவோம்.

தான் : அப்படியே நாம் போனாலும், அவர் பாடுவது நிச்சயமில்லை.

அக்பர் : (தயவாக) தான்ஸேன், எப்படியாவது அவர் பாட்டைக் கேட்டுத்தானகவேண்டும்.

தான் : அப்படியானல், நான் அதற்கு ஒரு யுக்தி செய்கிறேன். அதன்படி நடக்க, தங்களுக்கு மனமிருக்குமானல்...

அக்பர் : அவருடைய சங்கீதத்தைக் கேட்க நீ என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்.

தான் : நீங்கள் என்னுடைய சிஷ்யனுகவேண்டும்! என்னுடைய தம்புராவைத் தூக்கிக்கொண்டு என்னுடன் வரவேண்டும்.

அக்பர் : இவ்வளவுதானே. இந்த ஒரு நிமிஷத்தில், சக்ரவர்த்தி வேஷத்தைக் கலைத்துவிடுகிறேன். நாடகம் ஆடுவதில் எந்த வேஷத்தை ஆடினல் என்ன. வித்தியாசமேயில்லை. (மாற்று உடைகள் அணிந்தபடியே) நான் தயாராகிவிட்டேன். கிளம்பலாமா? எனக்கு அவர் பாட்டைக் கேட்கவேண்டுமென்று மனம் துடிக்கிறது. அவ்வளவுதூரம் முறுக்கேற்றிவிட்டாய் நீ.

(போகிருர்கள்)

ஹரிதாஸ் பிருந்தாவனத்தில் தியானம் செய்து கொண்டிருக்கிறார். சிஷ்யர்கள் கைகட்டி வாய் புதைத்து நிற்கிறார்கள். தான்ஸேன் போய் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறான். அக்பரும் பின்னாலே, நமஸ்கரிக்கிறார்.)

ஹரிதாஸ் : (கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு) யாரது, தான்ஸேனா? வா, அப்பா. எப்பொழுது வந்தாய்? அது யார் உன் சிஷ்யனா? எல்லோரும் சௌக்யம்தானா?

தான் : தங்கள் அனுக்ரஹத்தால் எல்லாம் சௌக்யம்தான்.

ஹரிதாஸ் : சக்ரவர்த்தியின் ஆஸ்தான வித்வானாகி யிருக்கிறாயாமே? உன் வித்வத்திற்கு எல்லாம் கிடைக்கும்.

தான் : என் வித்வத்தாவது. எல்லாம் நீங்கள் இட்ட பிச்சை.

ஹரிதாஸ் : அப்படிச் சொல்லாதே. நீ சம்பாதித்துக்கொண்டது அந்த வித்தை. அது உனக்கு செல்வத்தையும், புகழையும் கொண்டுவந்து தள்ளுகிறது. என் பங்கு அதில் ஒன்றுமே இல்லை.

தான் : செல்வமும், செல்வாக்கும், எனக்கு நிரம்பத்தான் கிடைத்திருக்கிறது. ஆனால்...

ஹரிதாஸ் : ஆனால், என்ன?

தான் : அதைவிடத் தங்கள் அருள் எனக்கு இருந்தால் போதும்.

ஹரிதாஸ் : கடவுளுடைய அருளுக் கிரங்கிநிற்கும் ஒருவனிடம், நீ அருளை எதிர்பார்க்கிறாயா?

தான் : எனக்கு நீங்களே கடவுள்.

ஹரிதாஸ் : சாந்தம்! பாபம்! தான்ஸேன். நீ எது முதற்கொண்டு இப்படியெல்லாம் பேசக் கற்றுக் கொண்டாய்? முன்பெல்லாம் இப்படிப் பேசினது கிடையாது.

தான் : மன்னிக்கவேண்டும். குரு மகராஜ். அரண்மனையில் உத்தியோகம் பார்ப்பதிலிருந்து, பழகி விட்டேன்போலிருக்கிறது. தங்களுக்கு மனது புண்ணுகும்படிப் பேசியதற்கு மன்னியுங்கள்.

ஹரிதாஸ் : குழந்தாய், தான்ஸேன். வருத்தப் படாதே. என்னுடைய அருமை தான்ஸேன் என் மனம் நோகப் பேசுபவனு என்ன? உன்னுடைய சங்கீதத்தை எவ்வளவு தூரத்தில் வைத்திருக்கிருய்.

தான் : இங்கிருந்து போனதைவிட கொஞ்சம் குறைந்திருக்குமே தவிரக் கூடுதல் இல்லை.

ஹரிதாஸ் : அது எப்படி ?

தான் : ஸ்தல விசேஷமும், சான்னித்ய விசேஷமும் இங்கு எனக்கு இருந்தது.

ஹரிதாஸ் : சங்கீதத்திற்கு, சாதகம் மிகவும் அவசியம். நீ எவ்வளவுதான் வித்தையை சம்பாதித்துக்கொண்டாலும் மேலும் மேலும் தேர்ச்சியடைய முயலவேண்டும். சங்கீதத்தின் எல்லையை ஒருவரும் கண்டதில்லை. சங்கீதம் ஒரு தபஸ். கோடி கோடி ஜன்மமெடுத்து இதை அப்யஸித்தாலும், கரை காண்பது என்பது சாத்யமில்லாத விஷயம்.

தான் : நான் என்ன ஒரு பதர். தங்களைப் போலப் பாடவேண்டும் என்று என் மனம் ஏங்கி நிற்கிறது. என்ன பிரயோசனம்? அதற்கு வேண்டிய

கற்பனையும், வேகமும், லாகவமும், வரமாட்டே னென்கிறது.

ஹரிதாஸ் : நான் ஒரு லட்சியமல்ல, என்னைவிட நன்ருகப் பாடும் சக்தி உன்னிடம் இல்லையா? நிச்சயமாய் இருக்கிறது. சாதகம் வேண்டும். பக்தி வேண்டும். சங்கீதத்தின் ஜீவநாடி எது தெரியுமா? பக்திதான்.

தான் : காதல்?

ஹரிதாஸ் : காதலும்தான். ஆனல் பக்திக்குள் ளடங்கியதுதான் காதல். காதல் புனிதமடையும் போது'பக்தியாக மலர்கிறது, மனிதன் தன் காதலைக் கடவுளிடம் திருப்பும்போது பக்தியாகப் பரிணமிக் கிறது.

தான் : என் மனம் இன்னும் பக்குவமடைய வில்லையே. இன்னும் அஞ்ஞானத்தில் உழன்றுகொண் டிருக்கிறேன்.

ஹரிதாஸ் : சங்கீதத்தில், சாதகமும் ஞானமும் ஏற ஏற, உன் மனது தானகவே திரும்பும். உன் மன மானது சங்கீதத்துடன் லயித்து, நாதப் பிரும்மத்தை உபாசிப்பதிலிருந்தே, பக்குவம் தானகவே வரும். முக்தி அடைவதற்கு சங்கீதம் சிறந்த ஸாதனம், அதை ஈசுவரார்ப்பணமாகச் செய்துவிட்டால்.

தான் : (தயக்கத்துடன்) ஒரு வேண்டுகோள்.

ஹரிதாஸ் : என்ன வேண்டும் உனக்கு?

தான் : சிஷ்யனுக்கு குருவிடமிருந்து கிடைக்க வேண்டியது என்ன! வித்தையாசகம்?

ஹரிதாஸ் : பாடம்தான?

தான் . ஆம், மகராஜ். அடிக்கடி "பைரவி"யில்

கிருஷ்ணகர்ணாமிர்தத்திலிருந்து பாடுவீர்களே. அதை நான் போகும்போது எனக்கு சொல்லித் தந்தீர்கள். ஆனால் அதை நான் சரியானபடி பாடம் செய்து கொள்ளவில்லை. தாங்கள் எனக்கு அதைத் தந்தருள வேண்டும்.

ஹரிதாஸ்: அதுவா. எங்கே வந்தவரையில் பாடு பார்க்கலாம்.

[தான்ஸேன் பாடுகிறான்; ஹரிதாஸ் தலையசைத்துக் கொண்டே கேட்டு வருகிறார். இடையில் தான்ஸேன் அக்பருக்கு சமிக்ஞை செய்து, ஒரு அடி தப்பாகப் பாடுகிறான்.]

ஹரிதாஸ்: இரு. இரு. அது அப்படியில்லை. நீ கேட்டு நாளாகிவிட்டது. மறந்துபோய்விட்டது உனக்கு. நான் பாடுகிறேன், கூடப் பாடேன்.

தான்: இல்லை. நீங்களே முழுக்கப் பாடிவிடுங்கள். நான் மனதில் வாங்கிக்கொண்டு பிறகு பாட ஆரம்பிக்கிறேன்.

[ஹரிதாஸ் பாட ஆரம்பிக்கிறார். பாடும்போதே ஆவேசம் வந்துவிடுகிறது. மேலே, மேலே பறந்து செல்கிறது, கற்பனை. எல்லா வற்றையும் மறந்து, கிருஷ்ணனைத் தேடிப் போகும் கோபியைப் போல, வேகமாக, சங்கதிகள் ஒன்றன்பின் ஒன்றாக, அலைமோதி வருகின்றன. தான்ஸேன் அப்படியே மெய்மறந்து அனுபவித்து நிற்கிறான். அக்பர் பிரமித்து ஊமையாகி இருக்கிறார். ஹரிதாஸ், பக்தியின் வேகத்தில் பாடிக்கொண்ட படியே மூர்ச்சையாகி விழுகிறார். அக்பரும் தான்ஸேனும் மெதுவாக வெளியே வருகிறார்கள்.]

தான்: என்ன சங்கீதம்! என்ன பக்தி! எப்பொழுதும் இப்படித்தான். பாட ஆரம்பித்து வேகம் ஏறிவிட்டால் அதிலேயே லயித்து விடுவார். உலகமே தெரியாது. சில மணிகளாவது ஆகும், சுயபிரக்ஞை வருவதற்கு.

அக்பர்: ஆகா. உலகத்திலே சிறந்த மகான் ஒருவரை இன்று கண்டேன்! என்ன என் பாக்யம்!

தான்: இம்மகானின் சிஷ்யன் என்று சொல்லிக் கொள்ளும் யோக்யதை எனக்கு இல்லை என்பதை இப்பொழுதாவது ஒப்புக் கொள்வீர்களென்று நினைக்கிறேன்.

அக்பர்: அதெல்லாம் கிடக்கட்டும். அம்மாதிரி தெய்வீகமாகப் பாடும் சக்தி இவருக்கு மாத்திரம் எப்படி வந்தது? உன்னிடமில்லாத ஒரு தெய்வத் தன்மை இவருடைய சங்கீதத்தில் இருக்கிறது; அது எதனால் என்பது தெரியவில்லை.

தான்: எனக்குத் தெரியும். அவருடையது தேவ கானம். நான் மனிதர்களை திருப்திசெய்வதற்கும் சக்ரவர்த்திகளுக்காகவும் பாடுகிறேன். அவர் கடவுளுக்காக மாத்திரம் பாடுகிறார். அதனால்தான் அது தெய்வீகமாக விருக்கிறது.

அக்பர்: ஆமாம். பக்தியில் பெருகும் சங்கீதம் தான் உண்மை சங்கீதம். மற்றதெல்லாம் போலிதான்.

சாவின் நிழல்

பரசுராமன்	ஹரிஹரன்
செல்லம்மா	குழந்தை

[பரசுராமன் 'ஹிந்து' வாசித்துக்கொண்டிருக்கிறான் செல்லம்மாள் உள்ளே காரியமாயிருக்கிறாள். வெளியே யாரோ கதவை தட்டும் சப்தம் கேட்கிறது]

பரசுராமன் : செல்லம்மா, யார் கதவைத் தட்டறது யார்.

செல்லம்மா : (கதவைத் திறந்துகொண்டே) நம்ப ஹரிதான். வாடா, ஹரி.

பரசு : வாப்பா ஹரி, இப்போதான் ஊரிலேயிருந்து வறியோ ?

ஹரிஹரன் : ஆமாம், அத்திம்பேரே, இப்போதான் வறேன்.

பரசு : என்ன விசேஷம் ?

ஹரி : கோர்ட்டு விவகாரமாகச் சில வக்கீல்களைக் கலந்து போகவேண்டியிருந்தது. புறப்பட்டு வந்தேன்.

பரசு : ஊரிலே எல்லோரும் சௌக்கியந்தானே ?

ஹரி : எல்லோரும் சௌக்கியந்தான். அப்பாவுக்குத்தான் வரவர முடியமாட்டேங்கிறது. பலஹீனம். வயசாயிடுத்தோல்லியோ ?

செல்லம்மா: அங்கிச்சிட்டேயிருந்து ஏதாவது கடுதாசு வந்துண்டிருக்கா? அவாத்துக்காரர் காயிதம் போடவேமாட்டேங்கிறுரே!

ஹரி: அங்கிச்சி நாலு மாஸமா ஸ்நானம் செய்யாமல் இருக்காளாம். குழந்தை எங்கே?

செல்லம்மா: தொட்டிலிலே தூங்கறது. ஆச்சு, இப்போ எழுந்திருக்கிற தறுவாதான்.

பரசு: குழந்தை சாப்பிட்டதோ இல்லையோ!

செல்லம்மா: இன்னும் இல்லே. எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பாட்டி விட்டேன். கத்தோ கத்துன்னு கத்தி விட்டுத் தூங்கறது. ஆச்சு, எழுந்திருந்தவுடன் ரகளை பண்ணப்போகிறது, பசியினுலே.

பரசு: விஷமம் தாங்கல்லே அப்பா வர வர.

ஹரி: என்னமோ, ஆயுசோடே இருக்கட்டும்.

பரசு: யார் கண்டார்கள்? எப்படி எழுதியிருக்கோ, இதன் தலையில்!

ஹரி: அடுத்த வெள்ளிக்கிழமை, குழந்தைக்கு ஜன்ம நக்ஷத்ரமாமே?

பரசு: அடுத்த வெள்ளிக்கு வயசு இரண்டு பூர்த்தியாறது.

ஹரி: அப்பா, வற்புறுத்திச் சொல்லியிருக்கா: ஒவ்வொரு வருஷத்திலேயும், தவறுமல், ஆயுஷ்ய ஹோமம் பண்ணிண்டு வரச்சொன்னு.

பரசு: அதற்கென்ன, செய்தால் போகிறது!

ஹரி: அங்கேயும் குழந்தை பேருக்கு, அப்பா தோஷநிவிருத்திக்காக நவக்ரஹங்களுக்கு அர்ச்சனைகள் பண்ணிண்டுதான் வரா.

செல்லம்மா : என்ன செய்து என்ன பிரயோஜனம்? நான் ரொம்பப் பாவம் பண்ணியிருக்கேன்.

ஹரி : அத்திம்பேரே, நீங்க கோவிச்சுக்கக்கூடாது. வெறும் கர்நாடகமாக நினைக்கக்கூடாது. அக்காவை அழைச்சுண்டு ஒரு தரம் ராமேசுவரம் போய்ட்டு வாருங்கோ. பாவம் தொலையட்டும்.

பரசு : காசியை விட்டுவிட்டாயே!

ஹரி : விளையாட்டா நினைக்காதேயுங்கோ. நாலு குழந்தைகளைக் குழியில் கொண்டுபோய்ப் போட்டாய் விட்டது. இனிமேலாவது, இருக்கிறதாவது, பெரியவாள் பேரைச் சொல்லிண்டு இருக்கணுமோல்லியோ!

பரசு : அதற்கென்னப்பா பண்றது? இந்தியாவிலேயே, குழந்தைகள் சாவு ரொம்ப சகஜமாயிருக்கு. தாயார், தகப்பனுர்கள் பலசாலிகளாயிருந்தான்னு, குழந்தைகளும் பலமுள்ளதாயிருக்கும்? செல்லம்மா உடம்பைப் பார்.

ஹரி : அது கிடக்கட்டும், அத்திம்பேரே. பீடாபரிஹாரம் செய்துகொண்டால் தேவலே. நாலு குழந்தைகளைப் பெத்துச் சாகக் கொடுத்திருக்கா அக்கா. அவ உடம்பு இப்படித் துரும்பாயில்லாமே எப்படி இருக்கும்?

செல்லம்மா : என் உடம்பு எப்படிப் போனுல் என்னடா ஹரி? சுமை தாங்கியாச் சுமந்து சுமந்து பெற்றுக் குழியிலே கொண்டுபோய்ப் போடற வயித்தெரிச்சலைச் சகிச்சுண்டு உயிரோடே இருக்கேனே!

ஹரி : கிளிக்குஞ்சு கிளிக்குஞ்சா ஒவ்வொண்ணையும் வளர்த்து வளர்த்துச் சாகக்கொடுக்க யாருக்கு மனசு வரும்?

செல்லம்மா: கடைசியாகச் செத்துதே, அது ஒரு மணிநேரத்திலே போயிடுத்துடா, கணையிலே.

பரசு: கணையும் மாந்தமும் எங்கள் வீட்டைச் சுத்திச் சுத்தி வந்து பலி வாங்கறது.

ஹரி: இதுவரையில் பிறந்த ஒரு பெண் குழந்தை யும் தக்கல்லே. இது ஆணுப் பிறந்திருக்கு. சுவாமி தான் இதற்குத் தீர்க்காயுசைக் கொடுத்துக் காப்பாத் தணும். வேறே நம் செயல்லே என்ன இருக்கு?

செல்லம்மா: ஹரி, வெந்நீர் போட்டிருக்கேன். ஸ்நானம் பண்ணிவிட்டுச் சாப்பிடவா. நாழியாகல்லே?

ஹரி: எனக்கு வெந்நீர் வேண்டாம். இந்த வெயில்லே, யாருக்கு வெந்நீர் வேணும்? சாப்பாட் டுக்கு அவசரம் இல்லே. காலையிலே ஆகாரம் வலுவாய் ஆயிடுத்து. அத்திம்பேருக்கு நாழியானுல் அவர் முன் னுலே சாப்பிடட்டும்.

[குழந்தை விழித்துக்கொண்டு அழுகிறது.]

பரசு: அடியே, குழந்தை அழறது பார். எழுந் திருந்துடுத்து; தூக்கிண்டு வா.

செல்லம்மா: (குழந்தையை எடுத்துக்கொண்டே) மாமா வந்திருக்கா. தங்கம், பாருடா. (தூக்கிக் கொண்டுவருகிருள்.)

ஹரி: (குழந்தையை வாங்கிக்கொண்டே) டே போக்கிரி, இங்கே வாடா. இந்தா அக்கா, இந்தப் பழங்களை எடுத்து வை. குழந்தைக்கு மத்தியானம் குடு. தினசரி பழச்சாறு போட்டிக்கொண்டே வந் தால் ரொம்ப நல்லது—இந்தா பாத்தியாடா பொம்மை!

செல்லம்மா: அடடே! என்ன என்ன பொம்மைக

ளெல்லாம் வாங்கிண்டு வந்திருக்காண்டா உனக்கு, மாமா! பந்து, குட்டிக்கரணம் போடற பொம்மை, மோட்டார் வண்டி,—அடேயப்பா!

பரசு : ஏதுக்கடா அனுவச்யமா இதெல்லாம் வாங்கிண்டு வந்தே?

ஹரி : இருக்கட்டும், இருக்கட்டும். பொம்மைக் கடைக்குள்ளே புகுந்தால், நமக்கே பொம்மைகளை வைச்சு விளையாடணும்போல இருக்கு. எத்தனை எத்தனை தினுசு பொம்மைகள்!

செல்லம்மா : ஹரி, இவன் விளையாட்டெல்லாம் பார்த்ததில்லையே. இங்கே பார், உன் மருமான் செய்யற வேடிக்கையெல்லாம்.—ஏண்டா குஞ்சு, பொய்க்கால் குதிரை எப்படியப்பா ஆடித்து?

[குழந்தை குதிக்கிறது.]

ஹரி! அடே! அப்படியா ஆடித்து? அப்ப எங்கூர்த் திருநாளைக்கு உன்னை வரவழைச்சுடலாம் போல இருக்கே.

பரசு : அப்பா எப்படி ஆபீசுக்குப் போறு? அப்பா மாதிரி நட.

[குழந்தை குதித்து குதித்து நடக்கிறது.]

ஹரி : அடே, மெல்லடா. அப்பா மாதிரி போற வேகத்திலே தூணிலே முட்டிக்கப் போறே. பேச்சு இன்னும் சரியா வராவிட்டாலும், ஊமை ஜாடையா எல்லாத்தையும் செய்துடறுனே! அப்பாவுக்குக் குழந்தையைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசை.

பரசு : இங்கேதான் வந்து ஒரு மாசம் இருந்துவிட்டுப் போகட்டுமே.

ஹரி : அது முடியற காரியமா ? ஊரிலே எவ்வளவு கார்யமிருக்கு ! செல்லம்மா, இந்த வெய்யில்லே, என்னத்துக்குக் குழந்தைக்குச் சட்டையைப் போடறே? காத்தாட இருக்கட்டுமே. இதோ பாரு, குழந்தைக்கு வேர்த்துக் கொட்டியிருக்கு. (சட்டையைக் கழற்றுகிருன்.) ஏன், குழந்தைக்கு எலும்பு எல்லாம் தெரிகிறது ? தோள் பக்கமெல்லாம் சூம்பியிருக்கே.

பரசு : இரண்டு மாசமாகவே பயலுக்கு உடம்பு சரியாயில்லே,

ஹரி : (குழந்தையின் வயிற்றைத் தொட்டு அமுக்கிப் பார்த்துப் பயத்தைக் காட்டும் முகபாவத்துடன்) ஏன் அக்கா, என்ன நீயும் அசிரத்தையாயிருந்துட்டே ?

செல்லம்மா : என்னடா, ஹரி ?

பரசு : என்னடா பயமுறுத்தறே?

ஹரி : (கவலையாக) குழந்தைக்கு அசௌக்கியமானல், பெரியவாளை யாரையாவது கேட்கவேண்டாம் ?

செல்லம்மா : கேட்டுக்கொண்டுதானே வறேன். நீ வந்து அதை......

ஹரி : (கவலையைக் காட்டும் முகத்துடன்) ஆமாம், அக்கா அது கட்டிதான்.

செல்லம்மா : ஏண்டா, ஹரி, உனக்கு நிச்சயமாகத் தெரியறதோ, கட்டிதான்னு ?

ஹரி : ஆமாம் அக்கா. நான் வைத்தியம் வேங்கடராம ஐயருடன் சேர்ந்து, முக்கால் குழந்தை வைத்தியன் ஆயிட்டேன். சந்தேகமே இல்லை, இது கட்டிதான். இவ்வளவு அனுபவப்பட்ட நீகூட அசிரத்தையா யிருந்துவிட்டாயே !

செல்லம்மா : அசிரத்தையில்லேடா, ஹரி. எனக்கு

உள்ளூற அதுவோ என்கிற பயந்தாண்டா. நானும் வைத்தியரிடமும், மாத்தூர்ப் பாட்டியிடமும் காட்டினேன். அவா, 'நிச்சயமா கட்டியில்லே. பிறளி வாயு அது. கட்டிமாதிரி இருக்கும்' இன்னு சொல்லிட்டா. அதன்மேலேதான் பேசாமல் இருந்தேன்.

ஹரி : போ, அக்கா, அப்படியிருக்கலாமா ?

செல்லம்மா : சுண்ணம்பைக் கரைச்சுவிட்டாப் போலப் போறபோதே எனக்குப் பயந்தான். அப்பவே, இன்னும் நாலு பேரிட்டே காட்டியிருக்கணும். அவர்கள் வார்த்தையை நம்பி மோசம் போய்விட்டேனே பாவி ! ஏண்டா ஹரி, கட்டி முத்திப்போயிருக்கோ ?

ஹரி : அதெல்லாம் ஒன்றுமில்லையக்கா. இளங் கட்டிதான் ; கவலைப்படாதே. இரண்டு மாசம் மருந்து கொடுத்துக்கொண்டே வந்தால் சரியாப் போயிடும்.

பரசு : என்னத்தைச் சரியாப் போயிடும் ? எங்கள் அனுபவமெல்லாம் வேறு மாதிரியிருக்கு.

ஹரி : முந்திமாதிரி, கட்டியிலே குழந்தைகள் சாகிறதில்லை இப்போ. அநேகம் குழந்தைகள் பிழைத்துவிடறதுகள். அக்கா, நீ பயப்படவேண்டாம்; மோசம் ஒண்ணும் போயிடல்லே. நீ மருந்தை வாங்கி விடாமே கொடுத்துக்கொண்டு வா. சரியாப் போயிடும்.

செல்லம்மா : பிழைக்கிற குழந்தையா யிருந்தால், கட்டி ஏதுக்கடா வறது ? இதுவும் என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கத்தான் போறதோ, என்னமோ ? (அழுகிறாள்.)

பரசு : (கசப்புடன்) செல்லம், இப்ப என்னத்துக்கு அழறே ? குழந்தை பிறந்த உடனேயே, இனிமேல்

அழுதுவிடு. சாவதற்குத்தான் பிறக்கிறது குழந்தைகள்.

செல்லம்மா : இப்படிப் பிறக்கவும் வேண்டாம், சாகவும் வேண்டாமே.

ஹரி : இரண்டு பேரும், பேசாமல் இருங்கோ. கன்னு பின்னுவென்று ஒன்றும் சொல்லாதேயுங்கள். இதுக்கு முந்தினதெல்லாம் போயிடுத்துன்னு, இது பிழைத்துக் கொள்ளப்படாதுன்னு இருக்கா ?

பரசு : போடா போ. நன்னு பிழைக்கட்டும். அது தானே பிரார்த்தனை. எனக்கென்னமோ மனசு வெறுத்துப் போயிடுத்து. குளிர்விட்டுப் போயிடுத்து. கவனித்துப் பார்க்கப் போனுல் வாழ்க்கையே சாவின் நிழலிலேதான் இருக்கிறது. முன்பின்னுக சாவதில் தான் இவ்வளவு துக்கங்களும் துன்பங்களும் ஏற்படறது. இந்தப் பிறப்பும், இறப்பும் எதற்காகவோ ? (பெருமூச்சுடன்) இதோ பார் : ஏதுக்கு அழறே செல்லம்மா ? மருந்தை வாங்கிக் கொடுப்போம், வேண்டியதுகளெல்லாம் செய்வோம். எமனுடன் முடிந்த வரையில் போராடுவோம். பிறகு.........நடக்கிறபடி நடக்கட்டும்.

செல்லம்மா : வேறு, என்ன பண்ணப்போறது ? நாலு குழந்தைகளை முழுங்கிவிட்டு, என்ன பண்ணிண்டிருக்கோம் ? (உள்ளே போகிருள்.)

பரசு : இந்தா : உள்ளேபோய் அழுதுகொண்டு கிடக்கவேண்டாம். இலையைப்போடு, நாழியாயிடுத்து. சாப்பிடுவோம் வாடா, ஹரி, குழந்தை இங்கேயே விளையாடிக் கொண்டிருக்கட்டும். கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போடு.

வானவில்

சித்ரசேனன்
கானதாஸன்
சிவன்
கணநாதன்
சப்தகன்னிகைகள்
ரஞ்சனன்
குமாரன்

இடம் :— கைலே. காலம் :—மாலே. நேரம்.

கானதாஸன் :—சித்ரஸேனு ! வா வெளியே ; சிறிது நேரம் பொழுது போக்கிவிட்டு வருவோம்.

சித்ரசேனன் :—என்ன கானதாஸா ! இந்த நேரத்திலா ?

கான :—ஆமாம், இப்பொழுதுதான். மனோஹரமான மாலே வேளே. இளங்காற்று வீசுகிறது. மலரின் மணம், ஒரு புரியாத இன்ப வேதனேயைக் கொடுக்கிறது. இதுதான் சமயம் ; வா போகலாம்.

சித்ர :—என்ன விளேயாட்டுத்தனம். பிரதோஷ காலம் நெருங்குகிறது. மஹேச்வரன் சன்னிதியில் இருக்கவேண்டிய நாம், இங்கு வெறும் பேச்சு பேசிக் காலம் கடத்தக்கூடாது. நாம் போகவேண்டிய இடம் உத்யான வனமல்ல ; ஈசன் சன்னிதி.

கான :—நான் வரவில்லே. என்ருல் இன்று சன்னிதிக்கு வந்து பாடமுடியாது. தினசரி பாடிப்பாடி அலுத்துப் போய்விட்டது. ஈசுவரனேக் குறித்து நான் தினசரி பாடும் பாட்டைவிட சுகமான இந்த பாட்டைக் கேள்.

(சிருங்காரமான பாட்டைப் பாடுகிருன்)

சித்ர :—என்ன, உனக்கு புத்தி குழம்பிவிட்டதா? சிருங்காரமான பாட்டைப்பாட என்ன துணிச்சல்! காமன் எரிந்துபோன இந்த பூமியில் சிருங்கார ரஸத்திற்கு வேலையில்லை; பாடாதே.

கான :—காமன் எரிந்து போகட்டும்; அவனுடைய சக்தி எரிந்ததா? வீணுகப் பேசி காலதாமதம் செய்யாதே. நான் மலரின் மணத்தையும், காற்றின் மென்மையையும் விட மனேஹரமான இன்பத்தை அனுபவிக்கப் போகிறேன், அதைப்பற்றிப் பாடுகிறேன். மனம் ஒட்டாமல் நான் பாடும் ஈசன் பெருமைகளைவிட, மனம் நெகிழ்ந்து பாடும் இந்த சிருங்காரமான பாட்டு ஆயிரம் மடங்கு உயர்ந்தது.

சித்ர :—சரி, நிறுத்து. முரசொலி கேட்கிறது. ஈசன் சாபத்திற்கு ஆளாகவேண்டாம். கிளம்பு, பூஜையில் கலந்துகொள்வோம்.

கான :—நான் வரமாட்டேன். அதோ பார், அந்தக் காட்சியை. அது என்ன தெரிகிறதா?

சித்ர :—நன்ருகத் தெரியவில்லை. பெண்கள் கூட்டம்போல் தெரிகிறது. ஒரே வர்ணமயமாக இருக்கிறது.

கான :—வா, யோசனை பண்ணுதே. இந்த அரிய காட்சியை வந்து பார்.

சித்ர :—நம் இரண்டு பேருக்கும் என்ன ஆபத்து வரப்போகிறதோ தெரியவில்லை. சரி வருவது வரட்டும், கிளம்பு.

கான :—சிவன் தாண்டவத்தை, நாம் பார்த்துக் கொண்டேயிருக்கிருேமே. இந்த சப்த கன்னிகைகளின் நிருத்யத்தையும் பார்த்து இன்புறு.

சித்ர :—வாஸ்தவம், என்ன அழகான காட்சி. வருவது வரட்டும், சிறிது நெருங்கிக் கவனிப்போம்.

கான :—அதோ, முன்னணியில் நிற்பவள், ஏதோ கேட்க வருகிறது போலிருக்கிறதே, கவனி.

ஸ. சுந்தரி :—சிரேஷ்டர்களே! தாங்கள் யார்?

கான :—நான் கானதாஸன் என்னும் காயகன். அவன் சித்ரசேனன் என்னும் சைத்ரிகன். இருவரும் சிவ ஊழியர்கள்.

சுந்தரி :—கலைஞர்களே! ஏது சிவசன்னிதானத்தை விட்டு இங்குவர நேரிட்டது?

கான :—இன்பத்தைத் தேடிப் புறப்பட்டோம்.

சுந்தரி :—அது அகப்பட்டதா?

சித்ர :—ஆம், இப்பொழுதுதான் அகப்பட்டது.

சுந்தரி :—எங்கே?

கான :—உங்கள் நடனத்தின் இசையில்.

சித்ர :—உங்கள் நடனத்தின் அசைவில்.

கான :—என் பாட்டும், இவன் சித்திரமும், உங்கள் நடனத்தில் உயிர்பெற்று விளங்குகிறது. உங்கள் நடனம் மிகவும் அற்புதம்.

சித்ர :—அதைவிட உயர்ந்தது உங்கள் அழகு.

கான :—அதற்கும் பெரிது என் பிரேமை. சமுத்திரம் போலப் பொங்கிவரும் என் ஹ்ருதயத்தை உங்கள் திவ்விய நடனத்திற்குக் காணிக்கையாகக் கொடுக்கிறேன்.

சுந்தரி :—என்ன துணிச்சல் உங்களுக்கு! என் நடனத்தைப் பார்த்தாய்விட்டது. இன்பத்தை அனுபவித்தாய் விட்டது. இனி போகலாமே.

கான :—போகவேண்டியதுதான். ஆசாபாசங்களை

எரிக்கும் ஸ்மசான பூமியில் எங்களுக்கு என்ன காரியம்? புறப்படுங்கள் ; உங்களோடு கந்தர்வலோகத்திற்கு வருகிறோம்.

சுந்தரி :—சரி, வாருங்கள் போக பூமியான கந்தர்வ லோகத்திற்கு. ஆனால், ஒவ்வொரு கந்தர்வ ஸ்திரீயைப் பார்க்கும்போதும் நவநவமான இன்பங்கள் மனதில் பிறக்குமே. சமுத்திரம் போன்ற ஹ்ருதயங்கூடத் தாங்குமோ தாங்காதோ.

கான :—குறும்பு வேண்டாம். உங்களைவிட ஸெளந்தர்ய சிருஷ்டிகள் கந்தர்வலோகத்திலும் உண்டா என்ன? அடே! இது என்ன இடி முழக்கம்?

சித்ர :—நமது இன்பக்கனவில் வந்து விழும் பேரிடி இது.

(இடி முழக்கத்துடன் கணநாதன் வருகிறான்.)

கணநாதன் :—உங்கள் வாழ்வைக் குலைக்கும் பேரிடி இது. கானதாஸா, சித்ரஸேனா, வாருங்கள் சன்னிதானத்திற்கு. புண்ய பூமியை மாசுபடுத்தி என்ன அபசாரம் செய்கிறீர்கள். பூஜா காலத்தில் பிரேமலீலை செய்து விளையாட என்ன துணிச்சல்!

சித்ரா :—சரி, ஈசன் சாபத்திற்கு ஆளாகவேண்டியது தான். நான் தடுத்துச் சொன்னதையும் கேட்கவில்லையே, கானதாஸா, பார்த்தாயா?

கான :—நிமிஷ சுகத்திற்கு நித்யமான நரகத்தையும் அடையலாம். ஈசனையே கேட்கிறேன். அவர் கொடுக்கும் தண்டனையை அனுபவிக்கப் பின்வாங்கப் போவதில்லை.

(போகிறார்கள்)

(சிவன் சன்னிதியில், ருத்ரம் சொல்லிக்கொண்

டிருக்கிறார்கள். சாமகானம். வீணையில் "பாஹிபர்வத" என்று பாடுகிறார்கள்.)

கணநாதன் :—பிரபோ! இதோ வந்துவிட்டார்கள் கானதாஸனும், சித்ரஸேனனும். யோகநாதன் இருக்கும் இடத்தை ப்ரேம விஹாரமாக்க முன்வந்த இவர்களுக்கேற்ற சிக்ஷை அளிக்கவேண்டியதுதான்.

சிவன் :—கானதாஸ, சித்ரஸேன, இது என்ன. என்றுமில்லாத இந்தப் பழி உங்களுக்கு ஏற்பட்டது? காமாதுரர்கள் இங்கு இருக்க நியாயம் இல்லை. பூலோகத்திற்குப் போங்கள். அங்கே உங்கள் இச்சை பூர்த்தியடையட்டும். இந்த வெள்ளியங்கிரியை அசுத்தப் படுத்தவேண்டாம்.

கான :—மஹேசா! நியாயமாக, ஹ்ருதயத்தில் ஏற்படக்கூடிய மனோவிகாரத்திற்கு ஏற்ற தண்டனையா இது?

சித்ர :—பூலோகத்திற்குப் போனால் பிறகு எங்களுக்கு விமோசனம் ஏற்படாதே. மிருகங்களைப்போல் உழன்றுகொண்டிருக்கும் மனிதர்களுடன் நாங்களும் அழிந்துபோக வேண்டியதுதான்.

சுந்தரி :—எங்கள் கலை மண்ணோடு மண்ணாய் மடிந்து போக வேண்டியதுதான்.

கான :—தங்கள் தாண்டவத்தைவிட இவர்கள் நிருத்யம் விசேஷமானதாகவல்லவா இருக்கிறது. நிரந்தரமான பூலோக வாழ்வை எங்களுக்கு அது கொடுக்கிறது.

சிவன் :—கானதாஸா, வருத்தப்படாதே. மண்ணுலகில் கலையுணர்ச்சியும், சௌந்தர்யோபாஸனையும் இல்லாமலிருக்கிறது. உலக விவகாரங்களிலேயே

மூழ்கி ஜனங்கள் ஜடங்களாயிருக்கிறார்கள். நீங்கள் போய் மண்ணுலகைப் பொன்னுலக மாக்குங்கள். அதற்காகத்தான் உங்களை அனுப்புகிறேன். சப்த சுந்தரிகளே, நீங்கள் போய் மனிதஹ்ருதயத்தில் காவிய உணர்ச்சியைப் பொங்கி எழச் செய்யும் வானவில்லாக இருங்கள். கானதாஸா, சித்ரஸேனா, நீங்கள் தேடியலைந்த இன்பம் பூலோகத்தில்தான் உங்களுக்குக் கிடைக்கும். இந்த சப்த சுந்தரிகளும் கானதாஸனை ஸப்த ஸ்வரங்களாகவும், சித்ரஸேனனை ஸப்த வர்ணங்களாகவும் வரிப்பார்கள். அனுராகம்தான் ராகமாகவும், வர்ணமாகவும் பரிணமிக்கிறது. அதை நிரூபிக்க பூலோகத்திற்குப் போங்கள்.

சித்ர : பாட்டிலும், சித்திரத்திலும் காலத்தைக் கழித்துக்கொண்டு தங்களையும் மறந்து, இவ்வுலகத்தையும் மறந்து இருக்கவேண்டியதுதானா?

சிவன் : உன் சித்திரத்திலும், அவன் பாட்டிலும், பிரிவினையின் வேதனைதான் பொங்கி நிற்கும். நீங்கள் மறக்க முயன்றாலும் முடியாதபடி, பாட்டும், சித்திரமும் எதையோ விட்டுப் பிரிந்திருப்பதினாலுண்டாகும் ஒரு துன்பத்தைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்.

கானதாஸன், சித்ரஸேனன் : தங்கள் ஆக்ஞை.

சிவன் : நாதத்திலும், ஜோதியிலும் இருக்கும் என்னை பாட்டின் மூலமும், சித்திரத்தின் மூலமும் உலகத்தவருக்கு எடுத்துக் காட்டுங்கள். ப்ரேமையை பக்தியாக்குங்கள்.

2

பூலோகம் :— மாலை நேரம்

ரஞ்சனன் : குமாரா! வா வெளியே. இப்பொழுது தான் சிறிது தூரல் தூறி, எங்கும் குளுமையாயிருக்கிறது. மரத்திலிருந்து காற்றடிக்கும்போது, மழைத் துளிகள் கண்ணீர்போல் உதிர்கின்றன. இந்தக் காட்சியை வந்து பார்.

குமாரன் : என்ன குளுமையான காற்று. பக்ஷிகள் எவ்வளவு இனிமையாகப் பாடுகின்றன!

ரஞ்சனன் : மேற்கே விரைந்து போய்க்கொண்டிருக்கும் அந்த சூரியனும், இந்த மேகக் கூட்டங்களும் என்ன ரம்யமான தோற்றத்தை அளிக்கின்றன பார்த்தாயா?

குமாரன் : ரஞ்சனா! திரும்பு, திரும்பு. இது என்ன தோற்றம்! என்ன காட்சி!

ரஞ்சனன் : என்ன அழகான வானவில்! வானவில்லைப் பார்ப்பதிலேயே, மனிதனுடைய ஜன்மா சாபல்யமடைந்துவிடுகிறது. இதைப் பார்க்கும்பொழுதெல்லாம் என் கைக்குப் பேசும் சக்தி ஏற்படுகிறது. அந்த வர்ணங்களை சித்திரத்தில் தீட்டினால்தான் எனக்கு மன அமைதி ஏற்படும்போலிருக்கிறது.

குமாரன் : உனக்கென்ன ரஞ்சனா! இந்த வானவில்லின் விசித்திர ஸௌந்தர்யத்தையும், மலர்களின் மயக்கங்கொடுக்கும் நிறபேதங்களையும் சித்திரத்தில் கொண்டுவந்து காட்ட முயல்கிறாய். எனக்கும் மனத்திலிருக்கும் வேதனையை வெளிப்படுத்தினால் தேவலை யென்று தோன்றுகிறது. நீ எழுது, நான் பாடுகிறேன்.

(பாடுகிறான்)

ரஞ்சனன் : குமாரா! ஏன் இவ்வளவு சோகம்? ஏதோ வேதனை உன்னை அரித்துக்கொண்டிருப்பது போல் பாடுகிறாயே.

குமாரன் : என் உள்ளத்தில் கொந்தளிக்கும் துன்பத்தை நீ அறியாயா ரஞ்சனா?

ரஞ்சனன் : என்ன, புஷ்பலதிகையைக் குறிப்பிடுகிறாயா?

குமாரன் : ஆமாம், வேறு யாரைப்பற்றி நினைக்கும்போது இவ்வளவு துன்பம் ஏற்படும்?

ரஞ்சனன் : ஆம், அவள் நமக்குக் கொடுத்தது இந்தத் துன்பம்தான். தினந்தோறும், அருவிக்கருகில் சந்தித்தபொழுதும், அவளுடன் மலர்ச் சோலைகளில் சுற்றிக்கொண்டிருந்தபொழுதும், இன்பம் சாசுவதமானது என்று எண்ணினோம்: ஆனால் அவள் அருவிக்கு இரையானபொழுது துன்பம்தான் உண்மை என்ற முடிவிற்கு வர நேரிட்டது.

குமாரன் : அப்படியிருந்தும், நீ அதைப் பொருட்படுத்தவில்லையா? அந்த அனுபவம் உன் மனத்தில் ஒருவித நித்தியமான முத்திரையையும் வைக்கவில்லையா?

ரஞ்சனன் : குமார்! எனக்கும் சில சமயங்களில் ஒருவித துன்பத்தின் சாயை படாமலிருப்பதில்லை. ஆனால், அதைப் படர விடுவதில்லை. அதன் ரஹஸ்யம் தெரிந்துகொண்டபடியால் எனக்கு அதிக சிரமம் உண்டாவதில்லை.

குமாரன் : அந்த ரஹஸ்யம் என்ன?

ரஞ்சனன் : உன்னை உள்ளூரத் துளைத்துக்கொண்டிருக்கும் அந்த துன்பமானது புஷ்பலதிகையைப்

பிரிந்ததால் உண்டான துக்கமில்லை. புஷ்பலதிகையின் பிரிவால் உண்டாகும் துக்கம் ஒரு மாயை, இந்த வான வில்லைப்போல.

குமாரன் : பின் எது உண்மை?

ரஞ்சனன் : இந்த வானவில் மாயை. சூரிய ஒளி உண்மை. புஷ்பலதிகையின் பிரிவால் ஏற்படும் துன்பம் மாயை. புஷ்பலதிகை எந்த சக்தியின், எந்த தெய்வத்தின், எந்த அழகின் சின்னமாக இருந்தாளோ, அதைப் பிரிந்து இருப்பதில் உண்டாகும் ஏக்கம்தான் உண்மை. அதுதான் உன் பாட்டிலும் என் சித்திரத்திலும் வெளியாகிறது.

குமாரன் : அது எனக்குத் தெரியாது. நீ சொல்லும் தெய்வத்தைப் பிரிந்திருப்பதும், புஷ்பலதிகையைப் பிரிந்திருப்பதும் ஒன்றுய்த்தான் படுகிறது. ஆனல் இந்த வேதனை மாத்திரம் குறையவே குறையாதுபோலிருக்கிறது.

ரஞ்சனன் : குமாரா! கவலைப்படாதே, மாயை மூலமாக உண்மையை வணங்குவோம். எந்த விரக வேதனையும், விச்வவிரகத்தின் எதிரொலிதான். நீ பாடு. நான் எழுதுகிறேன். நம் கலை மூலம், ஒளியிலும், ஒலியிலும் இருக்கும் உண்மைப் பொருளை உலகுக்கு எடுத்துக் காட்டுவோம். அதற்காக அனுப்பப்பட்ட தூதர்கள் நாம். ஜனங்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதை மறக்காமல் இருக்கச் செய்வோம். அதுதான் நமது லக்ஷியம், வெற்றி, நமது விமோசனம். ஸௌபாக்யமும், ஸௌந்தர்யமும் உருவான ஸ்ரீ அருள்புரிவாள்.

சுவீகாரம்

கிருஷ்ணய்யர் வாலாம்பாள் அம்மாள்.
பாகீரதி அம்மாள்

[கிருஷ்ணய்யர் வீட்டின் கூடம். சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு, விவேகசூடாமணியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். வயது ஐம்பத்தைந்திலிருந்து அறுபதுவரை மதிப்பிடலாம். மாலை சுமார் மூன்றே முக்கால் மணி. உள்ளிருந்து அவர் மனைவி பாகீரதி அம்மாள் வந்துகொண்டிருக்கிறாள்.]

கிருஷ்ணய்யர்: (புத்தகத்தைப் பக்கத்து மேஜையில் திறந்தபடி வைத்து விட்டு) அடியே, வாலாம்பாள் எங்கே?

பாகீரதி அம்மாள்: மீனாளாத்துக்காவது, சாலியாத்துக்காவது போயிருப்பாள்.

கிரு: சதா என்ன பேச்சு அவர்களிடம் இருக்குமோ?

பாகீ: எவ்வளவோ இருக்கு; உங்களுக்கு என்ன தெரியறது. அவள் இப்பொழுது எதற்காக இங்கு வந்திருக்காளென்பது தெரிந்தால்தானே மற்ற விஷயங்கள் உங்களுக்கு தெரியப்போறது.

கிரு: அண்ணா வீட்டிற்குத் தங்கை வருவதற்கு காரணம் என்ன வேண்டும்? அண்ணாவிடம் தங்கைக்கு விச்வாசம் இருக்காதா? வெறுமனே தான் அண்ணாவைப் பார்க்க வரக்கூடாதோ?

பாகீ: விசுவாசமிருந்தால் நான் ஏன் இப்படி இருக்கேன். விசுவாசம் இருக்கு; ஆனால் அண்ணாவிடத்தில் இல்லை. அண்ணா பணத்தின்மேல் நிறைய இருக்கு.

கிரு: அவள் உடன் பிறந்தவள் தானே. அவளுக்கு பாத்யதையில்லையா?

பாகீ: பாத்யதையில்லாமலா இவ்வளவு நாள் வேண்டியதையெல்லாம் வாரிக்கொண்டு போனாள். இருப்பதைப் பத்திரப்படுத்த வந்திருக்கிறாள். எனக்குத்தான் இந்த வீட்டில் ஒரு பாத்யதையுமில்லை. அவளுக்கு நிறைய உண்டு.

கிரு: உனக்கு எப்படி பாத்யதையில்லாமல் போகும்?

பாகீ: என்ன பாத்யதையிருக்கு? வந்த புதிதில் என்னை வேண்டிய பாடு படுத்தினீர்கள். பிறகு உங்கள் உடம்புச் சீக்கிற்கு வேண்டிய பாடு பட்டாய்விட்டது. இதைத் தவிர இந்த வீட்டில் என்ன சுகத்தைக் கண்டேன்?

கிரு: பழங் கதையெல்லாம் இப்பொழுது ஏன் கிண்டி ஆரம்பிக்கிறாய்? வேறு வேலையில்லையா உனக்கு?

பாகீ: பழங்கதையாவது புதுக்கதையாவது? பழசை எங்கே மறக்கவிடுகிறாள் உங்கள் தங்கை. என்னை சதா பிடுங்கி திங்கணும்; ஒரு நாழி சும்மா விடக்கூடாது.

கிரு: இதென்ன வம்பாயிருக்கு? நீயா எதையாவது நினைத்துக்கொண்டு அவள்பேரில் எதற்காக

குற்றம் கண்டுபிடிக்கப் பார்க்கிருய்? சண்டைக்குத் தயரர் செய்து கொள்ளாதே.

பாகீ: நான் சண்டைக்குத் தயார்செய்துகொள்ள வில்லை, சண்டைபிடிக்கத்தான் அவள் வந்திருக்கிருள். இது வரையில் இங்கு வந்து சண்டையில்லாமல் போன துண்டா? நான் வந்து முப்பத்தைந்து வருஷத்திற்கு மேலாகிறது. ஒரு 'சுபகரமான வார்த்தை பேசாதே போளுலும், சண்டைக்கு மாத்திரம் குறைவேயில்லை. வந்த புதிதில் என் பிறந்த வீட்டாருக்குப் பணம் இல்லை, சீர் வரிசை சரியாகச் செய்யவில்லையென்று இளப்பம்; அதற்கப்புறம், இந்த மலட்டைத் தொலேத்துவிட்டு வேறு கல்யாணம் செய்துகொள் என்று உபதேசம்.

கிரு: சரி, போதும் இவையெல்லாம் முன்பு நீ சொல்லியிருப்பது தானே.

பாகீ: உண்மையைச் சொல்லப்போனுல் உடம் பெரிச்சல். எவ்வளவுதரம், உங்கள் பணத்தை நான் என் வீட்டாருக்கு, அள்ளி அள்ளிக் கொடுக்கிறமாதிரி காதைக் கடித்திருக்கிருள். ஒன்ரு இரண்டா? உங்கள் ஜனங்களுக்குச் செய்து செய்து என் கை தேய்ந்துவிட் டது. என்ன செய்தென்ன? நானும் சவரணையா யிருந்தால் அவர்களிடம் பேச்சுச் கேட்கவேண்டியிருக் காது.

கிரு: உனக்கு என்ன சவரணைக் குறைச்சல்? நீ இப்பத்தான் புக்ககத்திற்கு வந்திருக்கிருயா? புது மாட்டுப்பெண்ணைப்போல பேசுகிருயே.

பாகீ: எனக்கு வயசானுலென்ன? நான் இந்த வீட்டுக்கு வந்து எவ்வளவு மாமாங்கம் ஆனுலென்ன?

எனக்கு இந்த வீட்டிலே ஒரு சுவாதீனமும் இல்லாதது போலத்தான் எல்லாரும் நடந்து கொள்ளு. நான் மலடா, மரமாட்டம் நிற்கிறபோது, எனக்குப் பேசற துக்கு வாயேது. வாயை அடக்கிக்கிடக்க வேண்டியதுதான் (கலங்கும் கண்களைத் துடைத்துக் கொள்கிருள்).

வாசற் கதவு ஓசைப்படுகிறது. யாரோ வரும் சப்தம் கேட்கிறது.

கிரு : 'வாலாம்பாள் வருகிருள் போலிருக்கே. (வாலாம்பாள் வருகிருள். பாகிரதி அம்மாள் உள்ளே போகிருள்).

கிரு : என்ன வாலாம்பா, எங்கே இத்தனை நாழி காணும்? எங்கே போயிருந்தே?

வாலாம்பாள் : மீனுவாத்துக்கு போயிருந்தேன்.

கிரு : ரொம்ப நாழி பேசிக்கொண்டிருந்தேபோலிருக்கே. என்ன விசேஷமோ?

வாலா : கூப்பிட்டுவிட்டிருந்தாள். என்னமோ ஏதோ என்று கேட்கப் போயிருந்தேன்.

கிரு : என்ன சொன்னுள்? முக்கியமான தகவல் உண்டோ?

வாலா : "தை பிறக்கிறதே. உன் பிள்ளைக்குப் பூணப்போடப் போறியா" என்று கேட்டாள். ஆமாம் போடத்தான் வேண்டும் என்று நான் சொன்னதற்கு, "நான் ஒன்று உன்னைக் கேட்பேன் வாலாம்பா, உன் பிள்ளையை எனக்கு ஸ்வீகாரம் கொடுப்பியோ" என்று கேட்டாள்.

கிரு : அதுக்கு நீ என்ன சொன்னே?

வாலா : நான் ஒன்றும் பேசவில்லை. பேசாம

லிருப்பதைப் பார்த்துவிட்டு அவளாகவே, "நீ எனக்குக் கொடுப்பியா? உங்கண்ணுவிற்கு கொடுப்பியா, நான் கேட்டதே தப்பு" என்று அவளாகச் சொல்லிக் கொண்டாள். இதெல்லாம் வம்புதானே!

கிரு: என் தலையை என்னத்துக்கு ஊராரெல்லாம் உருட்டுகிருர்கள்? இந்தப் பொம்மனுட்டிகள் எல்லாம் பெரிய வாயாடிகளாயிருக்கு.

வாலா: உன்னைப்பற்றி என்ன தப்பிதமாகச் சொல்லிப்பிட்டாளாம். நல்லதைத்தானே சொன்ன? இதற்கு என்னத்துக்கு கோவிச்சிக்கிறியாம்?

கிரு: இல்லை. எனக்குப் பிள்ளை எடுத்து வைப்பதுபற்றி இந்த மீனுக்ஷி அம்மாளுக்கு ஏன் இவ்வளவு அக்கரை என்றுதான் கேட்கிறேன்.

வாலா: அவள் மாத்திரமா அப்படிக் கேட்கிருள். ஊர் பூராத்தான் என்னைக் கேட்கிறது. இப்படித்தான் நடக்குமென்று நியாயமாக எல்லோரும் எதிர்பார்க்கிருர்கள்.

கிரு: என்னைத்தவிர எல்லோரும் இதைப்பற்றி தீர்மானம் செய்துவிட்டதாகத் தெரிகிறது. சித்தப்பா, அத்தான் இரண்டு பேரும் இது சம்பந்தமாக எனக்கு எழுதியிருக்கிருர்கள். எல்லோரும் முடிவுக்கு வந்து விட்டார்கள்போலிருக்கு.

வாலா: இல்லை அண்ணு, எனக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் முடிவுக்கு வந்து என்ன பண்றது? எங்கள் எல்லோருக்கும் நம் வம்சம் வீணுகப்படாதே என்றுதான் கவலை.

கிரு: அப்படியா?

வாலா: உனக்கும் வயசு காலத்திலே செய்றதுக்கு

பிள்ளை மாட்டுப்பெண் வேண்டாமா? போகிற வழிக்கும் நல்லது பண்ணிக்கொள்ள வேண்டாமா? இதையெல்லாம் யோசித்துத்தான் அவர்கள் சொல்கிறார்கள். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.

கிரு: எனக்கு அகப்படாத விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க ஊர்பூரா ஆட்களாயிருக்கே. எனக்கும் ஒன்றுமே தெரியத் தேவையில்லை. எனக்கிருக்கும் பொறுப்பைவிட உங்களுக்கு அதிகம் போலிருக்கு?

வாலா: நீ கோபிப்பாய் என்றுதான் 'அவர்' உனக்கு இது சம்பந்தமாய் ஒன்றும் எழுதவில்லை. எனக்காக நான் இவ்வளவு தூரம் சொல்வதாக நீ எண்ணவே வேண்டாம். எனக்கு, என் பிறந்த வீடு பிரகாசமில்லாமல், பாழாகப் போய்விடுமோ என்று நினைக்கிறபோது பகீரென்கிறது.

கிரு: இப்பொழுது என்ன முழுகிப்போய்விட்டது?

வாலா: நன்று எவ்வளவோ சம்பாதித்தாயே! சம்பாதித்து என்ன பலனைக் கண்டாய்?

கிரு: சௌக்கியமாயிருக்கிறேன், வேண்டியவர்களுக்கு நிறையச் செய்திருக்கிறேன், தான தருமங்கள் செய்து வருகிறேன், வேறு என்ன வேண்டும்?

வாலா: என்ன செய்தென்ன? நம் வீட்டை விளங்கவைக்க ஒரு குழந்தை கிடையாது. அந்தக் காலத்திலேயே வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்று வேண்டியமட்டும் சொல்லிப் பார்த்தேன். ஒரே பிடிவாதமாக முடியாதென்று சொல்லி விட்டாய். உன் வயிற்றுக்குழந்தையைப் பார்ப்போமா என்ற எங்கள் ஆசை நிராசையாகிவிட்டது.

கிரு: பிள்ளை பிறந்தால் அதன் மேல்தான் வாஞ்சை போகும். அது இல்லாவிட்டால், எல்லோர் குழந்தைகளும் நம் குழந்தைகள் தாம்.

வாலா: அதென்னமா ஊரார் குழந்தைகள் நம் குழந்தைகளாகும்? ஆகவே ஆகாது. என் பிள்ளையைத்தான் எடுத்துக்கணும்னு நான் சொல்ல வரவில்லை. உனக்கு எந்தக் குழந்தை பிடிக்கிறதோ, அதைப்பார்த்து எடுத்துக்கொள். அதுதான் அழகு. நியாயம். வீட்டிற்கும் பெருமை. உனக்கும் கௌரவம்.

கிரு: பெருமையும் கௌரவமும் கிடக்கட்டும். உன் மன்னி என்ன நினைக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டாமா?

வாலா: அவள் என்னத்தைச் சொல்வதற்கு இருக்கு? நீ சொன்னால் எல்லாம் சரிதான்.

கிரு: மன்னியைக் கூப்பிடு.

வாலா: மன்னி, மன்னி!

(இந்தப் பேச்சு வார்த்தைகளைக் கவனித்துக் கொண்டேயிருக்கும் பாகீரதி அம்மாள் வேகமாக ஒன்றும் அறியாதவள் போல் வருகிறாள்)

கிரு: ரொம்ப முக்கியமான பேச்சு நடக்கிறது. நீயும் வா. நான் முந்தியே லெட்டர்கள் வந்திருக்கிறதைப் பத்திச் சொல்லியிருக்கேன். பிள்ளையை சுவீகாரம் பண்ணிக் கொள்ளச் சொல்கிறாள் வாலாம்பாள்? நீ என்ன சொல்கிறாய்?

பாகீ: என்னை என்ன கேள்வி. எனக்கு என்ன தெரியும்?

வாலா: கேட்டால் சொல்லேன் மன்னி.

பாகீ: இல்லை அக்கா, நான் வாயைத் திறந்தால்

எல்லாம் குற்றமாப் போயிடறது. நான் என்ன சொல்லக்கிடக்கு? அப்படியே நான் சொன்னாலும் ஒருவர் காதிலேயும் ஏறப்போவதில்லே. அப்படியிருக்கச்சே சொல்வானேன். வசவுகளை வாங்கிக் கட்டிப்பானேன்!

வாலா: நாங்க ஒண்ணு கேட்டா நீ ஒண்ணு சொல்றியே மன்னி.

பாகீ: எனக்குப் பேசத் தெரியாது. பேசத் தெரிஞ்ச நீங்கள் எங்களைச் சொல்வதை நினைத்தால் கஷ்டமாயிருக்கு.

வாலா: என்ன சொல்லிக்கொண்டு கிளம்பறம்?

பாகீ: உங்கண்ணு அனியாயமா சம்பாதிக்கல்லே, அனியாயமா செலவழிக்கல்லே. முப்பது வருஷமா ராஜாங்கமே தன் தோளிலே இருக்காப்போலே இரவும் பகலும் உழைத்து சம்பாதித்தார். அவராலே முடிந்தவரை தானதருமங்கள் செய்து வருகிறார். "எங்களண்ணுவும் மன்னியும் ஏன் இப்படி பணத்தை வாரியிறைக்கிறார்கள். அவர்களுக்குப் பணத்தின் அருமையே தெரியவில்லே." என்று புகார் பண்ணிக் கொண்டிருக்கிறீர்களாம்.

கிரு: அடாடா! அடாடா! அதெல்லாம் என்ன துக்கு இப்போ. சண்டைக்கு எடு பிடி மாடு பிடி என்று காத்துக்கொண்டிருக்காப் போலிருக்கு.

பாகீ: பிள்ளையைக் கொடுக்கு முன்னாலேயே இவ்வளவு கெடுபிடியாயிருக்கே. பிள்ளையை வேறு வாங்கிக் கொண்டுவிட்டால் எப்படியாகும் என்பதை யோசனை பண்ணுங்கள். அதற்குத் தான் சொல்ல வரேன்.

வாலா: இல்லாத்தையும் பொல்லாத்தையும் சொல்ல வேண்டாம் மன்னி; பிள்ளை எடுத்துக்கொண்டால் இப்போ மாதிரி உன் அண்ணன் தங்கை மார்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்க முடியாதுங்கிற பயம் போலிருக்கு. அது உறுத்தறது உன் மனசை.

பாகீ: உங்கள் அண்ணு இதோதான் இருக்கிறுர். அவரை வச்சுக்கொண்டுதான் சொல்றேன். என் வீட்டாருக்கு என்ன செய்தேன்? உங்கள் வீட்டாருக்குத் தான் ஆதி முதல் செய்து கொண்டே வந்திருக்கிறது. உங்க கல்யாணம் முதல் கொண்டு, உங்கள் பெண் கல்யாணம் வரைக்கும் செய்தாகிவிட்டது. இவ்வளவு செய்தும் "அண்ணுவை எங்களிடம் ஒட்டவிடாமல் செய்கிறுள் மன்னி" என்று கத்திக்கொண்டு வந்திருக்கேள்.

வாலா: நீயும் எவ்வளவோ, பிரிக்க அநேகம் செய்திருக்கே மன்னி. செய்யாமல் இருந்ததைச் சொல்லவில்லே. என்ன இருந்தாலும் வேற்று மனுஷிதானே நீ. உனக்கு எப்படி மனது ஒட்டும்? அண்ணு பாசம் விட்டுப்போகக்கூடாது என்பதற்குத் தான் பிள்ளை எடுத்துவைக்கணுமென்பது.

பாகீ: முன்பு, வேறு கல்யாணம் பண்ணி வைக்க பார்த்தியள். பண்ணி வைக்கல்லே. இப்பொழுதாவது பிள்ளையை எடுத்து வையுங்கள். உங்கள் மனசு எப்படியாவது திருப்தியாறுல் சரி.

வாலா: எனக்கென்ன திருப்தி மன்னி? வம்சம் விளங்க வேண்டுமே என்கிற கவலேதான் எங்களுக்கு. உன்னிடம் துவேஷ மிருப்பதாக நீயா நினைத்துக்கொள்கிறுய். துராங்காரம் உனக்கு எப்பொழுதுமே உண்டு.

கிரு: இதேதடாது! தகரார் செய்ய ஆரம்பித்து விட்டீர்களா?

பாகீ: (அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், வாலாம்பாளைப் பார்த்து) துராங்காரப்படமாட்டேன்? அந்த நிலையில்தானே இருக்கேன். உங்கள்ளாம் போலே இருந்தால் எனக்கு துராங்காரம் வராது. ஜீவனும்சக்காரின்னு சொல்லவில்லையா. ஜீவனும்சம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆரம்பமாகிறது.

வாலா: எந்த வார்த்தைக்கு எந்த வார்த்தை மன்னி!

பாகீ: இல்லை அக்கா. எனக்கு வயிறு பெரிசு. சாப்பிடாமல் இருக்க முடிகிறதா. நீங்களும், உங்கள் பிள்ளையும் எனக்கு ஜீவனும்சம் கொடுக்கவேண்டி வந்தால் நான் திருப்தியா வாங்கிச் சாப்பிடுகிறேன்.

கிரு: சிவ-சிவ-சிவ. போதும் நிறுத்தமாட்டியளா உங்கள் வெட்டி விதண்டாவாதங்களை.

பாகீ: (காதில் போட்டுக்கொள்ளாமல்) இது வரையில் என்னைப் பிடுங்கித் தின்னது போதாது! பிள்ளை ஒன்றை கூட்டிவைத்து என் பிராணனை வாங்கணும். யாரார் கிட்ட என்ன அவஸ்தைப்படணுமோ, அதெல்லாம் பட்டுத்தானே ஆகணும்? சாகிறவரையில் எனக்கு சங்கடம் விடாது போலிருக்கு. எனக்கு சாவும் சட்னு வரமாட்டேனென்கிறது. இந்த ஜென்மத்தோடேயாவது, என்னைப் பிடித்த கஷ்டம் தொலைந்தால் சரி. (கண்ணீரைத் துடைத்துக்கொள்கிருள்.)

கிரு: (இரக்கத்துடன்) என்னது! எதுக்கு இப்படி?

பாகீ: என்றுதான் என் துன்பம் தீருமோ?

(வாசலில் ஏதோ சப்தம் கேட்கிறது.)

கிரு: வாலாம்பா. யாரோ கூப்பிடறுன். பால் காரன் போலிருக்கு போய்ப் பார். (வாலாம்பாள் போகிறுள்).

கிரு: ஏண்டி அழறே. உன் இஷ்டத்துக்கு விரோதமா, ஏதாவது செய்துவிடுவேனு என்ன? அவர்கள் சுபாவம் அப்படித்தான். எதை வேண்டுமானுலும் சொல்லிக்கொள்ளட்டுமே. அதை லட்சியம் பண்ணுதே. எனக்கு இவர்கள் குணங்கள் தெரியாமலா யிருக்கு. போகட்டும் போ. அவ்வளவுதான் தெரிந்த லக்ஷணம். சுவீகரிக்க வேண்டியது, இன்னெருவர் வீட்டுப்பிள்ளையை அல்ல. நாம் சுவீகரிக்கவேண்டியது, தர்மத்தையும், நியாயத்தையும், தன்னுடையது என்று சொல்லிக்கொள்ளாத மனப்பாங்கையும்தான். அவர்களுக்காகவா நாம் ஒன்று செய்யமுடியும்?

பாகீ: எனக்கென்ன சமாதானம் வேண்டியிருக்கு? நான் பட்ட மரம். (கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே போகிறுள்.)

கண் திறந்தது

சத்தியானந்தன் சுந்தரி
ஞானதேவன்

[சத்தியானந்தன் விக்கிரகம் ஒன்றை உளிகொண்டு நகாசு வேலை செய்து கொண்டிருக்கிறான். மெது வாகச் சதங்கை ஒலி கேட்கிறது. உளியை நிறுத்தி விட்டுச் சற்றுக் கவனிக்கிறான். சுந்தரவல்லி வருகிறாள்.]

சத்தியானந்தன்: சுந்தரி, ஏது இவ்வளவு சீக்கிரம்?

சுந்தரி: ஆற்றங்கரைக்கு ஸ்நானத்திற்குச் சீக் கிரமே வந்துவிட்டேன். இன்று விக்கிரகம் பூர்த்தி யாகிவிடும் அல்லவா?

சத்தி: ஆம். இப்பொழுது கண்தான் பாக்கி. கண் களைத் திறந்துவிட்டால், இந்த விக்கிரகம் சகலரும் தொழும் தெய்வமாகிவிடும்.

சுந்தரி: நீங்கள் கொடுத்துவைத்தவர்கள்!

சத்தி: சுந்தரி, என் வாழ்க்கையின் கனவு, இவ் விக்கிரகத்தில் பூர்த்தியாகிறது. என்னுடைய நிறை வேறாத ஏக்கங்களைத் திருப்தி செய்யவந்த மூர்த்தி இது.

சுந்தரி: நீங்கள் திருப்தியடைவதற்கு எவ்வ ளவோ சாதனங்கள் இருக்கின்றன.

சத்தி: நீயும் திருப்தியடைவாய்; அதற்கும் வழி இருக்கிறது.

சுந்தரி: இந்த ஜன்மத்தில் சுகம் எனக்கு இல்லை.

சந்தி: விதி நம் வாழ்க்கையில் ஏன் இவ்வளவு சதி செய்திருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. இளமைப் பருவம் முதற்கொண்டு பழகிவந்த உன்னை என்னிடமிருந்து பறித்து, அந்நியன் ஒருவனுக்குக் கொடுத்து விட்டதே! சிதைந்த வாழ்வை உருவாக்க இனி என்ன இருக்கிறது?

சுந்தரி: உங்களுக்குக் கலை இருக்கிறது. எனக்கு....

சந்தி: கலை ஒரு மயக்கம். அது போதாது. வாழ்வுதான் வேண்டும். நான் முடிவான தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். உன் சம்மதந்தான் தேவை.

சுந்தரி: என்ன செய்ய வேண்டும்?

சந்தி: சுந்தரி, இந்தச் சமூகத்தில் நாம் அமைதியுடன் வாழமுடியாது. இவ்விக்கிரகம் சாவக நாட்டிற்குப் போகிறது. நானும் கூடப் போகிறேன். நீயும் என்னுடன் வந்தால்....

சுந்தரி: நீங்கள் இப்படிக் கேட்பது இது முதல் தடவை யல்ல.

சந்தி: இல்லை. ஆனால் இதுதான் கடைசித் தடவை. சாவகத்திலிருந்து நான் திரும்பி வரப்போவதில்லை. இப்பொழுது நீ சொல்லும் பதிலைப் பொருத்திருக்கிறது என் பிற்கால வாழ்க்கையின் அமைப்பு.

சுந்தரி: (லஜ்ஜையுடன்) என் மனம் உங்களுக்குத் தெரியாததா? என்னைக் கேட்க வேண்டுமா? ஆயினும் நியாயமற்ற காரியம் என்ற எண்ணம் ஒரு அச்சத்தைக் கொடுக்கிறது. அது தான் தயங்கி யோசித்து நின்றேன்.

சத்தி: சுந்தரி, எதை நியாயமற்ற தென்கிறாய்? ஒழுங்கீனமான வார்த்தையை என்னிடம் எதிர்பார்ப் பாயா? மனித உள்ளம் உண்மையைத்தவிர ஒன்றை யும் பேசாது. ஸ்திரீபுமான்கள் ஒருவருடன் ஒருவர் காதல் கொண்டு வாழும் வாழ்வுதான் சத்தியமானது. போலி வாழ்க்கைதான் நியாயமற்றது. உலகத்தி லேயே மனிதனை உயர்த்தக்கூடிய சக்தி காதல்தான். அது சொல்கிறபடி கேட்போம்.

சுந்தரி: நான் என்ன சொல்வது? எனக்கு வேறு வழி ஒன்றும் புரியவில்லை. உங்கள் கையில் அகப் பட்ட சிற்பங்களைப்போல், உங்கள் விருப்பத்திற்கு என் மனத்தைத் நாளாவட்டத்தில் செதுக்கி யிருக்கிறீர் களே.

சத்தி: சுந்தரி, இன்றுதான் என் மனத்தில் ஒளிந்துகிடந்த அழகுத் தெய்வம் உருப்பெறுகிறது. இன்றுதான் என் உள்ளத்திலே காதலைத் தூண்டிய பெண்மணி வாழ்க்கையை உருவாக்கப் போகிறாள்.

சுந்தரி: பிறர் கண்டு தொழும் தெய்வத்தைச் சிருஷ்டி செய்யவல்ல சிற்பி நீங்கள். நான் தங்களுக் குக் கொஞ்சமேனும் அருகதை அற்றவள்.

சத்தி: நான்தான் உனக்கு நிகரில்லாதவன். சுந் தரி! புருஷன், வீடு, வாசல், சமூகம், கவலையற்ற வாழ்வு எல்லாவற்றையும் புறக்கணித்து ஒரு நாடோ டிச் சிற்பியுடன் வருவதாகச் சொல்கிறாயே! உன் தியா கந்தான் சிறந்தது.

சுந்தரி: மனோரதம் பூர்த்தி அடைவதற்குச் செய் யும் காரியங்களுக்குத் தியாகம் என்ற வார்த்தை தகாது.

சத்தி: எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள். மௌனமாக இருந்த என் வாழ்விலே, கீதம்போல வந்தாய்!

சுந்தரி: சரி, போதும். எனக்கு நேரமாகிறது.

சத்தி: ஆற்றிலே குளித்துவிட்டு வா. அதற்குள் என் பணியும் பூர்த்தியாகிவிடும். ஞான தேவனை இன்னும் காணவில்லை. நீ சீக்கிரம் வந்துவிடு.

[சுந்தரி போகிறாள். அவள் போய்க்கொண்டிருக்கையி லேயே, எதிர்ப் பக்கமாக ஞானதேவன் வரு கிறான்.]

சத்தி: ஞானதேவா, வா. உட்கார். உன்னைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஞான: இன்று கண் திறப்பு விழா உண்டு அல்லவா?

சத்தி: இன்று புனிதமான நாள். இப்பொழுது இந்த விக்கிரகம் கண் திறந்து, உலகத்தை வாழ்விக்கப் பார்க்கும்.

ஞான: உலகம் உள்ளளவும் தெய்வ ஒளி வீசி உய்விக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

சத்தி: ஞானதேவா, இன்று ஒரு முக்கியமான முடிவுக்கு வந்திருக்கிறேன்; சுந்தர வல்லியுடன் சாவகம் போகிறேன்.

ஞான: (ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் காட்டும் முகத்துடன்) நான் சொல்வது உனக்கு ஹிதமில்லாமல் இருக்கலாம். ஆனால் உன் யோக்கியதைக்கும் சால்புக்கும் ஒத்துவராத செய்கை அது.

சத்தி: அதில் என்ன தப்பு?

ஞான: அந்நியன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட

ஸ்திரீயைக் கூட்டிக்கொண்டு ஓடும் காரியம், திருடு வதைவிட எள்ளளவும் குறைந்ததல்ல.

சத்தி: ஞானதேவா, இது பழைய அசட்டு வேதாந்தம். ஒரு ஸ்திரீயும் ஓர் ஆண்மகனும் ஒரு வரை ஒருவர் விரும்பும்போது, யார்தான் அதைத் தடுத்துக் குறுக்கே நிற்கமுடியும்? அதைத் தடுப்பது தான் தெய்வ சம்மதமாகாது.

ஞான: மனம் போனபடி வாழும் வாழ்வு உண்மை வாழ்வு அல்ல. கேவலம் மிருகங்கள் கூடத் தான் இச்சா வாழ்க்கை வாழ்கின்றன. மனத்தை ஒடுக்கிச் சத்தியத்திற்கும் தருமத்திற்கும் உட்படுத்தப் பட்ட வாழ்க்கைதான் உண்மை வாழ்க்கை.

சத்தி: ஞானதேவா, இரண்டு உள்ளங்கள் ஒன்றை ஒன்று விரும்பும்படியான உயர்தரக் காதல் சத்தியமானது அல்லவா? அதுதான் தர்மம். காத லுக்கு மிஞ்சிய சத்தியமும் தர்மமும் இல்லை.

ஞான: காதல் மிகச் சிறந்ததொரு தூண்டுதல் சக்தி. அதில் சந்தேகம் இல்லை. காதல் ஒரு வெள் ளம் போன்றது. அதற்குச் சத்தியமும் தர்மமும் இரு பக்கத்திலும் உள்ள அணைகள். அணைக்கு உட்பட்டுப் போகும் வரையில்தான் அதனால் நன்மை உண்டு. அணையைமீறி உடைத்துக்கொண்டு போகும் பொழுது விநாசந்தான்.

சத்தி: ஞானதேவா, உபயோகப்படாத தத்து வோபதேசம் செய்து என் மூளையைத் திணற வைக் காதே. நான் தீர்மானித்து விட்டேன். இந்தச் சார மற்ற உபதேசங்களுக்காக எங்கள் இருவர் வாழ்க்கை யையும் வியர்த்தமாக்கப் போவதில்லை.

ஞான: சத்தியானந்தா, அறம் பொருள் இன்பம் வீடு எல்லாவற்றிற்கும், தர்மந்தான் தாயகமாக முதலில் நிற்கிறது. நீ தேடும் இன்ப வாழ்வு, தர்மத்தில் முளைக்காவிட்டால் துன்பமாகவே மாறும். தர்மம் இல்லாவிட்டால் வாழ்வே இல்லை.

சத்தி: சுந்தரி இல்லாவிட்டால்தான் எனக்கு வாழ்வு இல்லை. இதோ, என் கையிலே உருப் பெற்று வரும் தெய்வங்கூட அவளிடம் காதல் கொண்ட என் மனத்தில் பிறந்ததுதான். அந்தக் காதல் தெய்வீகம் அல்லவா?

ஞான: சத்தியானந்தா, அந்த விக்கிரகத்தைப் பார். அது எதற்கு அறிகுறியாக நிற்கிறது, தெரியுமா?

சத்தி: ஏதோ புதிர் போடுகிருயே!

ஞான: "தர்மத்துக்கு எப்பொழுது ஹானி உண்டாகுமோ, அப்பொழுது நான் அவதரிக்கிறேன்" என்று சொன்ன கடவுளின் அம்சமாக நிற்பது அல்லவா?

சத்தி: ஆமாம்.

ஞான: சஞ்சலமுற்று வழி தெரியாமல் தத்தளிக்கும் லக்ஷக்கணக்கான மக்களின் மனத்தைத் தூய்மைப்படுத்திச் சாந்தி அளிக்கப்போகும் தெய்வீக மூர்த்தி அல்லவா இது?

சத்தி: மனிதனுடைய அந்தக்கரணத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் தெய்வத் தன்மையைத் தட்டி எழுப்பும் சக்தி வாய்ந்த உன்னத மூர்த்தியை உருவாக்க வேண்டும் என்பதே என் அபிலாஷை.

ஞான: உண்மை. அருள் சுரந்து மனித வாழ்வை உய்விக்கப்போகும் உன்னத மூர்த்தியைக் கற்பனை செய்து சிருஷ்டித்த சிற்பியான உன் வாழ்விலே, அம்

மூர்த்தியினிடம், இலங்கும் தூய்மை வேண்டியதில்லையா? உன்னிடம் புனிதத்தன்மை வேண்டியதில்லையா?

சந்தி : தூய்மை என் கற்பனையில்தான் தேவை. வாழ்விலே இல்லை. அப்படி வாழ்வதும் சாத்தியம் அல்ல.

ஞான : தூய்மை பெற முயற்சியாவது செய்ய வேண்டாமா? சத்தியானந்தா, நீ மிகச் சிறந்த சிற்பி. நல்ல அறிவாளி. யோசனை செய். அவசரப்பட்டு முடிவுக்கு வந்து விடாதே.

சந்தி : ஞானதேவா, என்னை மன்னித்து விடு. இவ்விஷயத்தில் யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை. கொஞ்சம் இரு. இந்தக் கண்களைத் திறந்துவிடுகிறேன். (உளிகொண்டு கண்களைச் செதுக்குகிறான். கண்கள் திறந்து நிற்கும் அந்த விக்கிரகம் மிகுந்த பொலிவுடன் நிற்கிறது. ஞானதேவனும் சத்தியானந்தனும் பார்க்கிறார்கள்.)

ஞான : ஆகா! என்ன தேஜஸ்! என்ன அமைதி! என்ன கருணை! அப்பனே சத்தியானந்தா, உலகம் உனக்கு என்றென்றைக்கும் கடன்பட்டுவிட்டது. நாஸ்திகன்கூட மெய்ம்மறந்து பக்தி பரவசனாகிக் கை கூப்பித் தொழும் கடவுளைப் படைத்துவிட்டாய். ஆகா! மனிதன் நிறைவேறாத தன் ஆசைகளை நினைந்து நினைந்து ஏங்கி வரும்பொழுது கருணை சுரந்து அருள் மழை பெய்யும் ஆனந்த மூர்த்தியைப் படைத்துவிட்டாயே! நீ வாழி!

சந்தி : ஞானதேவா, என் வாழ்வு இன்றுதான் பயனுற்றது. இப்புண்ணிய மூர்த்தியை உருப் பெறச்

செய்த பாக்கியம் என் முன்னோர்கள் செய்த தவப் பயன்.

ஞான : இம்மூர்த்தியை நன்றாகப் பார். உன் மனத்தில் சஞ்சலம் இருக்கிறதா? இன்னும் உன் மனம் தெளிவடையவில்லையா? ஈசன் முன்னிலையில்கூட உன் மனம் தூய்மை அடையவில்லையா?

சந்தி : (மறுபடியும் பார்க்கிறான். கடவுளின் பார்வை அவன் உள்ளே ஊடுருவிப் பாய்கிறது. மெய்மறந்து நிற்கிறான். பிறகு சாவதானமாக) ஞான தேவா, நான் உன்னை நமஸ்கரிக்கிறேன். என்கையில், வெறும் சிலையாக இருந்து இப்பொழுது ஒளிபெற்று நிற்கும் இக்கடவுளைக் கண்டதும், என் மனம் ஏனோ மாறுதல் அடைகிறது. என் மனத்தில் சொல்ல முடியாத ஆனந்தமும் பரவசமும் கொந்தளித்து நிற்கின்றன. மனமும் அமைதி அடைகிறது. இம்மூர்த்தியின் தரிசனம் கண்டும், மனம் மாறாதபடி அவ்வளவு மிருகமாகப் போகவில்லை.

ஞான : இந்தக் கருணாமூர்த்தியின் கடைக்கண் பார்வை விழுந்து கடைத்தேறாத ஜன்மா இருக்கப் போவதில்லை. உன் மனம் திரும்பியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

சந்தி : மூர்த்தியைப் பார்க்குந்தோறும் ஒரு சாந்தி ஏற்படுகிறது. சத்தியம், சிவம், சுந்தரம் மூன்றுக்கும் உறைவிடமான கடவுளைக் கண்டும் ஒருவன் கடைத்தேறாமல் இருக்கமுடியாது. இப்புனித மூர்த்தியை உருவாக்கிய சிற்பி, பக்திமானாகவும் ஒழுக்கத்தில் உயர்ந்தோனுமாக இருந்திருப்பான் என்று ஜனங்கள் எதிர்பார்த்தார்களானால், தப்பல்ல. அதற்கு

நான் அருகதையுள்ளவனுவது நீயாய்த்தான். விக்கிரகத்தின் கண்கள் இன்று திறக்கப்படவில்லை. என் கண்கள்தாம் திறந்தன. மாயையும் அஞ்ஞானமும் விலகின. தேவன் என்று கற்பனை செய்த மனிதன் தேவ வாழ்வு வாழவேண்டாமா? அதை மறந்து விட்டேனே!

ஞான: தேவ வாழ்வுதான் முக்தி. புலன்களை வென்றவன் விடுதலை அடைந்தவன் தானே? உன் மனம் மாறியது எனக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கிறது.

சத்தி: சுந்தரியின் கதி என்ன?

ஞான: உனக்குச் சொன்னதுதான் அவளுக்கும். அவள் கணவனுடன் வாழ்வாள். இம்மூர்த்தி அவளுக்குச் சகல சௌபாக்கியத்தையும் அருள்வார்.

சுந்தரி: (வந்துகொண்டே) என்னை என்ன வைதுகொண்டிருக்கிறீர்கள்?

சத்தி: (தீர்மானத்துடன்) நான் என் தீர்மானத்தை மாற்றிவிட்டேன். நானும் நீயும் சேர்ந்து வாழ்வது என்பது தெய்வ சம்மதம் அல்ல. ஆகவே என்னை மறந்துவிடு. காதல் என்று சொல்லிக்கொள்வதெல்லாம் ஏமாற்றிக் கொள்ளும் வித்தை.

(சுந்தரி பிரமித்து நிற்கிருள்.)

ஞான: ஏன் அம்மா! பேசாமல் நிற்கிருய்?

சுந்தரி: நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது? என்னைக் கேட்டா தீர்மானம் செய்தார்? இப்பொழுது மாற்றுகிருர். கடவுள் என்னைச் சோதிக்கிருர். இவர் கல்லிலே கடவுளைக் கண்டுபிடிப்பவர். என் நெஞ்சிலுள்ள துன்பத்தை மாத்திரம் கண்டுகொள்ள

முடியவில்லைபோலிருக்கிறது. எனக்கு ஏன் இந்தக் கொடுமைகள்! (கண் கலங்குகிருள்.)

ஞான: அம்மா! இந்த விக்கிரகத்தைப் பார். அது உனக்கு ஓர் ஆறுதலையும் அளிக்கவில்லையா? ஆசாபாசங்களை ஒழித்துத் தியாக வாழ்வு வாழ்வதே தேவ வாழ்வு. இதுதான் இந்த மூர்த்தியின் உபதேசம்.

(சுந்தரி வருத்தத்துடன் நமஸ்கரித்துவிட்டுப் போகிருள்.)

ஞான: ஹே தேவ! மனிதன் மிருகத்தனத்திலிருந்து தேவனுவதற்கு, உரிய அருள் புரியவேண்டும். (நமஸ்கரிக்கிருன்.)

சத்தி: லக்ஷ்யமும் வாழ்வும் ஒன்ருவதற்கு அருள் புரிவாயாக! (நமஸ்கரிக்கிருன்.)

குழாயடியில் குப்பு

குப்புசாமி	—	வயது 15 : கதா நாயகன்
விசாலாக்ஷி அம்மாள்	—	குப்புவின் அருமைத் தாயார்.
ராஜாராமன்	—	கூட ஒட்டுக்குடி யிருப்பவன்.
கல்யாணி	—	ராஜாராமன் மனைவி.
ராமச்சந்திர அய்யர்	}	வேறொரு குடும்பத்தின்
சீதாலக்ஷிமி அம்மாள்	}	ஒரு பகுதி.
குழாய்		இதுவும் ஒரு நாடக பாத்திரம்

(எல்லோரும் ஒரே வீட்டில் வெவ்வேறு பாகத்தி லிருப்பவர்கள்)

[காலை சுமார் மணி எட்டு இருக்கும். விசாலாக்ஷி அம்மாள் புடலங்காய் நறுக்கிக்கொண்டிருக் கிறாள். ராமச்சந்திரய்யர் ஜபம் செய்துகொண் டிருக்கிறார். ராஜாராமன் ‘ ஹிந்து ’ தலையங்கத் தைக் கவனமாகப் படித்துக்கொண்டிருக்கிறான். குப்பு முற்றத்தில் ‘டப்’ ‘டப்’ என்று வேஷ்டி யைத் துவைத்துக்கொண் டிருக்கிறான். ஜலம் ராமச்சந்திரய்யர் மேல் தெறிக்கிறது.]

ராம :—டேய், டேய், மெள்ளடா. அதைக் கொஞ் சம் பிழிந்துவிட்டுத் தோயடா !

குப்பு :—ஓகோ ? நான் உங்களிடம் தோய்க்கக் கற்றுக்கொள்ள வேணுமோ ? சரிதான். சொல்லிக் கிறேன்.

ராம :—ஆஹா, உனக்குத் தெரியாதது எது ? எல்லாம் உனக்குத் தெரியும்.

சீதா :—பொழுது விடிந்தது ; ஆரம்பித்து விட்டீர்களா ?

ராம :—சரிதாண்டி போ. அவன் தோய்க்கிற லக்ஷணத்தைப் பாரேன். மேலெல்லாம் ஜலம் தெரிக்கிறது.

குப்பு :—நீர்தான், நகர்ந்துபோய் உட்கார்ந்து கொண்டு ஜபம் செய்யுமே.

சீதா :—சாஸ்திரிகளைப் பார்க்கப் போக வேண்டாமா ?

ராம :—ஆகட்டும் ; போரேன். டேய் ! மெள்ளத் தோயடா ! (தாழ்வாரத்தின் வேறொரு பக்கத்தில்)

கல்யாணி :—(முணுமுணுத்துக்கொண்டு) நாழியாயிடுத்து. அடுப்புக் காக்கிறது. அரிசி களையணும். இந்தப் பாவி வந்து குழாயடியைப் பிடித்துக் கொண்டுவிட்டானே. சித்தே சட்டுனு குளிச்சிட்டுப் போகச் சொல்லுங்களேன்.

ராஜாராமன் :—சட்னு போன்னுத்தான், அவன் வேணும்னு நாழியாக்குவன். அவனைக் கவனிக்காமல் விட்டு விட்டால், காரியத்தைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு போய் விடுவான்.

கல்யாணி :—அவனாவது சீக்கிரம் குளித்துவிட்டு வரதாவது ? அவன் சேதி எனக்கு நன்னாத் தெரியுமே. ஒரு அதட்டல் போட்டு அன்னண்டை வெறட்டாமே, என்ன பொறுமை வேண்டியிருக்கு ! ஆபீசுக்கு போறதுக்குள் சமையலாகல்லேன்னு என்மேல் குற்றம் சொல்லாதேயுங்கோ. எனக்குத் தெரியாது.

ராஜா :—சமையலாகாத போனால் பாதகமில்லே.

சாப்பிடாமல் போறேன் ஆபீஸுக்கு. அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்.

கல்யாணி :—பட்டினியாப் போனாலும் போவியள், அவனைச், " சீ, அன்னண்டை போ "ன்னு சொல்லி அதட்டமாட்டியள்!

ராஜா :—அதுக்கெல்லாம் மசிந்த ஆள் இல்லை அவன். எல்லாம் எனக்குத் தெரியும்.

கல்யாணி :—(விசாலாக்ஷியிடம்) அம்மாமி, உங்க பிள்ளையைச் சித்தெ சீக்கிரம் குளித்துவிட்டு வரச் சொல்லுங்களேன்.

விசாலா: —(சாவதானத்துடன், ஒவ்வொரு வார்த்தையாக) ஜலத்திலே தொளையாதேடா. சீக்கிரம் குளிச்சிட்டு வாடா !

குப்பு :—எல்லாம் எனக்குத் தெரியும். வாயை மூடிக்கொண்டு பேசாமல் கிட.

[சட்டைக்கு சோப்புப் போட ஆரம்பிக்கிறான். முற்றம் பூராவும் சோப்பின் நுரை பரவுகிறது.)

ராம :—ஏண்டா, முற்றம் பூரா சோப்பா அடிச் சுட்டியே !

குப்பு :—ஏன் ஐயா ? என்ன ஐயா, அது ? சோப்பு போட்டா நுரை வராமலிருக்குமா என்ன ?

ராம :—அதுக்காக முற்றம் பூரா வெள்ளையாக் கணுமா என்ன ? வழுக்கி விழுந்து மண்டை உடைந்து நூறு சுக்கலாப் போய்விடும். ஒரு சிறு துண்டு அகப் படாது. அங்கெல்லாம் ஜலத்தைவிட்டு அலம்புடா!

குப்பு :—போகிறவர்கள்தான் கீழே பார்த்து நடக் கட்டுமே. வீட்டுக்குள்ளே நடக்கும்போது ஆகாசத் தைப் பார்த்துண்டா நடப்பார்கள் ?

ராம :—என்னடாது ? பண்றது பூரா இடைஞ்சல் காரியம். என்ன வியவகாரண்டா வேண்டியிருக்கிறது? அசட்டு வியவகாரம்.

குப்பு :—ஜாஸ்தி பேசாதேயும். உம் சமத்து எனக்குத் தெரியுங்காணும்.

விசா :—என்னடா பண்றே : சீக்கிரம் வாடா.

கல்யாணி :—(ராஜாராமிடம்):—சரி, சரி. சோப்புப் போட்டு அவன் குளித்து முடிவதற்குள்ளே நீங்கள் ஆபீஸ் போய்த் திரும்பி வந்துவிடலாம். ராத்திரிச் சமையலுக்குக் குழாய் காலியாயிடும்.

ராஜா :—என்ன பண்ணச்சொல்றே ? அவனோ முரடன், அசடு, பிடிவாதக்காரன்.

கல்யாணி :—எரைஞ்சு, நகந்துக்கச் சொன்னால் போறான். என்னை வந்து என்ன கேள்வி கேட்கிறயள் ?

ராஜா :—இரு. நான் சாவதானமாகச் சொல்லி யனுப்புகிறேன். வீண் சண்டை பிடிப்பதில் யாருக்கு என்ன லாபம் ? (குப்புவைப் பார்த்து) குப்பூ !

குப்பு :—ஏன் மாமா !

ராஜா :—அப்படியே சட்டையை ஊற வைத்து விட்டுச் சாயந்திரம் தோச்சால், சட்டை மல்லிகைப் பூவாப் போயிடும்..

குப்பு :—இல்லே, மாமா, சோப்பிலே ரொம்ப நாழி சட்டையை ஊறவைக்கக் கூடாது. எண்ணைப் பிசுக்கு மாதிரி ஆயிடும்; இப்போவே, தோச்சு வெய்யல்லே உணத்திட்டால் மத்தியான்னம் பூரா காயும். சாயந்திரம் அப்படியே வண்ணான் வெளுப்புக்கு மேலே, தும்பைப் பூவா ஆயிடும்.

ராஜா :—(முகத்தைச் சுளுக்கிக்கொண்டு) சரி, சீக்கிரம் குளிச்சுட்டு வா. நாங்கள் எல்லாம் குளிக்கணும்.

குப்பு :—இதோ ஆயிடுத்து. (மேலும் 'தொப்' 'தொப்' பென்று தோய்க்கிறான்.)

[கல்யாணி புருஷனையும் குப்புவையும் மாறி மாறிக் கோபத்துடன் பார்க்கிறாள். குப்பு தோய்த்த துணியை, முற்றத்துக் கம்பியில், வழியை மறைக்கும்படி உலர்த்துகிறான்.]

ராம :—ஏண்டா? ஒரு தரம் சொன்னால் புத்தியில்லே? ஏண்டா இப்படி, சதா தொந்தரவுக் காரியங்களாகப் பண்ணித் தொலைக்கறே. போகிறவர்கள், வருகிறவர்கள் தலையில் அது இடித்துக் கொண்டிருக்கும். அதை எடுத்து வேறு எங்கேயாவது உலத்து. இல்லாவிட்டால், வந்து, துணியைத் தூக்கி எறிந்துவிடுவேன்.

சீதா :—சதா அவனோடே ஏன் வம்பு? சாஸ்திரிகள் ஆத்துக்குப் போக நாழியாக வில்லையா?

குப்பு :—என்னங்காணும், சதா 'தொண தொண'ன்னு ஏதாவது முணுமுணுத்துக் கொண்டேயிருக்கிறீர்? என்னைத்தான் ஜபம் பண்ணுகிறீர் போலிருக்கிறதே. காலையிலிருந்து, நானும் பார்க்கிறேன், வலுச் சண்டையை இழுத்துக்கொண்டேயிருக்கிறீர். இங்கே வந்து துணியிலே கையை வையும், பார்த்துக்கிறேன்! யார்ன்னு நினைத்துக்கொண்டீர் என்னை?

கல்யாணி :—(ராமச்சந்திரய்யரிடம்) பாருங்கோ மாமா, காலை வேளையிலே, இப்படி பழிவாங்கிறதைப் பாருங்கோ.

ராம :—ஆமாம் அம்மா. எப்போ பார்த்தாலும் அப்படித்தான். அசடு. இதிலே முரட்டுத் தைரியம் வேறே. நன்னு 'வெதுப்பிண்டே' வரணும். அவன் அம்மா கொடுக்கிற செல்லம் இந்த மாதிரி பண்ணிடுத்து.

குப்பு :—ஓய்! அசடு கிசடு என்று ஏதாவது உளறினல் என் அசட்டுத்தனம் பூராவும் காட்டி விடுவேன். ஜாக்கிரதையாகவே பேசும். யார் அசடுன்னு பின்னுலே தெரியும்.

[வேஷ்டியை நடு முற்றத்தில், முன்பு இருந்ததை விட இடைஞ்சலாக உலர்த்த முயற்சிக்கிறுன்.]

ராம :—என்னடா சொல்லச் சொல்ல பிடிவாதம் ஜாஸ்தியாக ஆகிறுப் போல இருக்கு? அதை எடுத்து உங்கள் கூடத்துக் கொடியில் இழுத்துப் போட்டு உணர்த்திக் கொள்ளேன்.

குப்பு :—முடியாது. வெய்யில்லேதான் உணரணும். கூடத்திலே வெய்யிலா இருக்கு?

ராம :—அதை எடுக்கிறயா, இல்லையா?

குப்பு :—முடியாது.

ராம :—தூக்கி எறியப்போறேன்.

குப்பு :—முடிஞ்சால் செய்யுமே.

[ராமச்சந்திரய்யர், வேஷ்டியைக் கொடியிலிருந்து உருவிக் கீழே போடுகிறுர்.]

குப்பு :—மூளையிருக்கா உமக்கு? சோப்புப் போட்டு உலர்த்தியிருக்கும் வேஷ்டியைக் கீழே போட்டு அழுக்கடிக்கிறீரா? எனக்குத் தெரியாதோ! நானும் பண்ணுகிறேன்.

[வாளியிலிருக்கும் சோப்பு ஜலத்தை, ராமச்சந்திரய்யர் இருக்கும் பாகம் நோக்கி விசிக் கொட்டுகிருன். சமையல் அறை வரையில், அந்த ஜலம் எட்டிப் பார்க்கிறது.]

சீதா :—(தனக்குள்) ஐயோ, இதென்ன கஷ்ட காலம்? நாசமாப்போச்சு. விடியற்காலம் தொந்தம் ஆரம்பமாயிடுத்து. தலே வேதனே ஓயாது. நல்ல வேளே கொதிக்கிற குழம்பிலே தெறிக்கல்லே.

ராம :—அயோக்கியப் பயலே! என்னடா இந்த வேலேகள் எல்லாம் பண்ணிண்டு திரியறே? உன்னே வெளியிலே கொண்டுபோய் தள்ளிட்டுத்தான் மறு ஜோலி.

[குப்புவின் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுக்கிருர்.]

குப்பு :—ஐயோ, ஐயோ! கொல்லவரானே, பாபி!

விசாலாக்ஷி :—(இந்த உலகத்துக்கு அப்பொழுது தான் வருகிருள். பிள்ளேயைப் பார்த்து) கட்டையிலே போறவனே! ஏண்டா இப்படி வந்து என் வயற்றிலே பிறந்தே? பெற்ற வயிற்றிலே பெறண்டையை வைத்துக் கட்டிக்கணும். உன்னேயும் என்னேயும் சேர்த்து அந்த யமன் வாரிண்டு போகமாட்டானு? ஊரார் ஏச்சுக்கும், ஊரார் பேச்சுக்கும், எசவா வந்து வாச்சிடுத்தே. என் வயிறு எரியறதே!

[கிட்ட வந்து 'படீர் படீ'ரென்று பிள்ளேயின் முதுகில் வைக்கிருள். சீதா லக்ஷ்மி அம்மாள் சமாதானம் செய்கிருள்.]

விசாலாக்ஷி :—ஊரார் கையாலே சாகிறதுக்கு, என் கையாலேதான் சாகட்டுமே. (இன்னும் இரண்டு).

[குப்பு அழுதுகொண்டே, தன் பாகத்திற்குப் போகிறுன்.]

ராஜா :—சரி, குழாய் ஒரு தினுசாகக் காலி ஆய் விட்டது. மேலே ஆகவேண்டியதெல்லாம் சீக்கிரம் ஆகட்டும். நாழி ஆய்விட்டது ஆபீஸுக்கு.

கல்யாணி :—பட்டினியாகப் போறேன்னியளே, போங்களேன்.

ராஜா :—சரி. நாழி ஆய்விட்டது. அனுவசியப் பேச்சு வேண்டாம். சீக்கிரம் பொங்கிப் போடுவதை விட வேறு என்னதான் வேலை?

கல்யாணி :—(குழாயண்டை போய்த் திருகி விடு கிருள். ஜலம் வரவில்லை. குழாய் 'நின்று' விட்டது.) அட கஷ்டமே? குழாய் வேறே நின்று விட்டதே. நமக்கு அனுசரணையாகத்தான் எல்லாம் நடக்கும். இப்படி திடீர்ன்னு நிற்குமோ? சரிதான். நீங்கள் ஆபீஸ் போறுப்போலத்தான். காலை வேளையிலேயே, எல்லாத்தையும் பண்ணி வச்சுடணும். இன்னமே என்னத்தை பண்ணுகிறது?

[ராஜாராமன் பத்திரிகையில் கனம் மந்திரியின் பேச்சைக் கவனமாகப் படித்துக்கொண்டிருக்கிருன்.]

சீதா :—சாஸ்திரிகளைப் பார்க்கப் போகவேண்டாமா? இன்னிக்குச் சடங்கு ஆயிடுத்து. போய் விட்டு வாங்களேன்.

ராம :—எனக்குத் தெரியாதா? இதோ நான் போகப்போகிறேனே. (போகிருர்.)

விசாலாக்ஷி :—குப்பு!

குப்பு :—(துக்கத்தோடு) ஊம் !

விசாலாக்ஷி :—இங்கே வாடா, அப்பா குழந்தை ! (தலையைத் தொட்டுப் பார்க்கிருள்.) அட பாவி. தலை ஈரம் சொட்டச் சொட்ட இருக்கே. தலை ஈரத் தோடேயே வேஷ்டியைத் தோச்சிருக்கியே. இவ்வளவு நாழி தலை ஈரமா வச்சுக்கலாமா ? இப்படி உண்டா ? (தலையைத் துவட்டுகிருள்.)

தீர்மானம்

முத்துசாமி — கிட்டு
அகிலாண்டம்மாள் — பாலு

(முத்துசாமியும் அவனுடைய அத்தை அகிலாண்டமும் பேசிக்கொண் டிருக்கிறார்கள். குழந்தைகள் விளையாடிக்கொண் டிருக்கின்றன.)

அகிலாண்டம்மாள்—முத்து! என்னாலே இதுகள் விஷமம் தாங்கமுடியல்லே. நானும் அரை மணி நேர மாப் பார்க்கரேன், சித்த நாழி சும்மாயிருக்க மாட் டேன் என்கிறதுகள். அரிசி அரைக்கணும், அடுப்பு மொழுகணும், தலைக்குமேலே காரியமிருக்கு.

முத்துசாமி—அத்தை! எங்கே அந்தப் பெரிய கழு தைகள்?

அகி—அதோ பார், கிணத்தடியிலே பச்சைக் குதிரை விளையாடறதை.

முத்து—ஏ குரங்குகளா! என்னடா விளையாட்டு? கழிசடைகள். படிப்பிலே பூஜ்யம். விளையாடறத் துக்கு இடத்தைப் பார். கிணத்தடிதான் அகப்பட் டதோ? இங்கே வாங்கடா.

அகி—அவர்கள் காதிலே விழுமா என்ன?

முத்து—ஏ பெரிய பிரும்மஹத்தி! இங்கே வா. இல்லேனு உலக்கையைத் தலையிலே போடுவேன்.

கிட்டு—ஏன் அப்பா!

முத்து—என்னடா விளையாட்டு, புஸ்தகத்தை வைத்துப் படியடா!

பாலு—அப்பா, அவன் எதிராள் ஆத்து ராமு வோடே சண்டை போட்டான் அப்பா.

முத்து—சீ சீ, உன் காரியத்தைப் பாருடா. கோழிச் சொல்லிக் கொடுக்க வேண்டாம், போ.

அகி—குழந்தையை சித்த வைச்சிண்டிரு. கொஞ் சம் காரியத்தைப் பார்த்துவிட்டு வரேன். என்னுலே, வர வர வேலேபார்க்க முடியல்லே. இதுகள் பண்ணு கிற விஷமமோ சாத்யமில்லாமலிருக்கு.

முத்து—என்ன அத்தை பண்ணச் சொல்றே? எனக்கும் இன்னது பண்றதுன்னு புரியல்லே. எங்கே யாவது ஓடிப்போகலாமென்று தோணறது.

அகி—எங்கே ஓடிப்போறது? இப்படித்தானே குடும்பங்கள்ளே இருந்து வரா.

முத்து—அது சரி, அத்தை. எனக்குக் கொஞ்சம் கூட ஒன்றும் பிடிக்கவில்லே. வீட்டிலோ இந்தப் பசங்க படுத்தறபாடு ஒரே ரகளேயாயிருக்கு.

அகி—நான் சொன்னு, உனக்கென்னமோ காதிலே ஏறமாட்டேனென்கிறது. அவள் போய் ஆறு மாசத் திற்கு மேலாகி விட்டதே. இன்னும் எவ்வளவு நாள் பேசாமலிருக்கிறது? குழந்தைகள் இரண்டுங் கெட் டான்கள். அப்படித்தான் விஷமம் செய்யுங்கள். இதற்காக என்ன செய்யறது? பேசாமே தை மாசம் பிறந்தவுடன், எதையாவது ஒண்ணேத் தாலியைக்கட்டி அழைத்து வந்துவிடு.

முத்து—போதும், போதும். இது வரையில் நான் தாலியைக்கட்டி, எமனுக்கு பலி கொடுத்தது போதும்; மறுபடியும் பரீக்ஷை வேண்டாம்.

அகி—முத்து! உன்னை என்னமோ பகவான் சோதிக்கிறார். நீ கொடுத்து வைத்தது அதுதான்.

முத்து—இந்தக் குழந்தைகளை என் தலையிலே கட்டிவிட்டுப் போய்விட்டாளே. அதுதான் கஷ்டமாயிருக்கு. இல்லாதபோனால் எங்கேயாவது ஓடிப் போயிருப்பேன்.

அகி—வேறு ஒன்றும் வழியில்லை. நாள் கடத்தாமே கால்கட்டு ஒண்ணு போட்டுவிட்டால் சரியாகப் போய்விடும். இந்தக் குழந்தைகளை வைச்சு மேய்க்க நாலு ஆள் போதாது. என்னாலே என்ன முடியறது!

முத்து—என்ன கல்யாணம்! என்ன குடும்ப சுகம்! ஒரு கல்யாணம் ஆனதற்குப் பலன் இது. இனிமேல் வரப்போகிறவள் எப்படி இருப்பாளோ! குழந்தைகளை பாடு படுத்துவாளோ, நன்னு வைத்துக் கொள்வாளோ! கடைசியா, என்னிடம் 'அவள்' என்ன சொல்லிவிட்டுப் போனாள் தெரியுமா? 'உங்களுக்கு தெரியாதது இல்லை. குழந்தைகளை மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள். வரவ என்ன பண்ணுவாளோ? ஆகவே இந்த சங்கடமே வேண்டாமென்றுதான் கல்யாணம் வேண்டாமென்கிறேன்.

அகி—அதெல்லாம் நடக்கிற காரியமா? சாதுவான பெண்ணு, பார்த்துப் பண்ணினாப் போறது. பெண் இல்லாத வீடு விளக்கேற்றாத வீடு மாதிரி. குடித்தனம் ஒழுங்காக நடக்கவேண்டாமோ?

முத்து—என்னவோ எனக்கு ஒன்றும் புரியவில்லை. யாரது தபாலா? (தபாலைப் பிரித்து படித்துக்

கொண்டே) உன் தங்கை பெண் அன்னபூரணி எழுதி யிருக்கிறாள்.

அகி—அவளுக்கு அடுத்தது மாஸம்.

முத்து—ஆமாம், அதற்குத்தான் உன்னைப் புறப் பட்டு வரச் சொல்லி எழுதி இருக்கிறாள்.

அகி—ஏற்கனவே துர்பலம்; அதிலும் கர்ப்பிணி. என்னமோ, பெத்து பிழைக்கணும். போன பிரசவம் ரொம்ப சிரமப்பட்டுது.

முத்து—அப்போ நீ போகணும்னு சொல்லுவே போல இருக்கே!

அகி—பின்னே என்னடா பண்றது? அவள் வேறு நீ வேறு இல்லை. எல்லாம் எனக்கு ஒண்ணுதான். நீ அண்ணு பிள்ளை, அவள் தங்கை பொண். தாயில்லாப் பொண்ணை இவ்வளவு நாள் காப்பாற்றி இருக்கிற தற்கு, பிரசவத்திற்குப் போகாமல், எப்படி இருக் கிறது?

முத்து—அப்பொழுது என் கதி?

அகி—உன் கதி என்ன? தை பிறக்க இன்னும் 10 நாள்தான் இருக்கு. அது வரையில் பொறுத்துக் கொண்டு இரு. மாதம் பிறந்தவுடன், அன்னபூரணி யின் நாத்தனார், ஒரு பொண் இருக்கு. ரொம்ப நல்ல பெண். குடித்தனப் பாங்கா சமத்தாயிருக்கும். வெகு அடக்கம். ரொம்ப மட்டு மரியாதை. மூக்கும் முழி யுமா, மாநிறமா யிருக்கும். நல்ல மனுஷாள் வீட்டுப் பெண். இப்பொழுது போனவுடனே அதை ஏற்பாடு பண்ணி விடறேன்.

முத்து — அத்தை, மறுபடியும் மறுபடியும் அதையே சொல்றயே. எனக்குக் கொஞ்சமாவது

பிடித்தால்தானே! மறுபடியும் ஒரு மணக்கோலம் மறுபடியும் புது மாப்பிள்ளை வேஷம். வரப்போகிற பெண்ணுக்கு என் சுபாவம் பழகி, அவள் சுபாவம் எனக்குப் பிடிச்சு......போதும்! இதுதான் வேலையா? எனக்கு ஒன்றும் வேண்டியதே இல்லை.

அகி—இந்த இரண்டாங் கெட்டாங் குழந்தைகள் கதி?

முத்து — எக்கேடு கெட்டுத் தொலையட்டும். ஹோட்டலிலிருந்து எடுப்புச் சாப்பாடு எடுத்துவரச் சொல்லி சாப்பிட்டுப் போரேன். வேலைக்காரி ஒன்று வைத்துவிட்டால் அவள் மேய்த்துக்கொண்டு இருக்காள்!

அகி—முத்து, நீ புரியாமெ சொல்றே. அந்தப் பெண் ரொம்பத் தங்கமான பெண். அதைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால், உனக்குக் கவலையேயில்லை.

முத்து—எனக்கு வாழ்க்கைப்பட வருகிற பெண் மேல் என் குடும்ப பாரம் அத்தனையும் தள்ளணும். அதுக்குத்தான் கல்யாணம்! வருகிறவள் என்ன சுமை தாங்கியா?

அகி—பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்? குடும்பத்தைத் தாங்கி நிற்பவள்தான் பெண். சதுர் ஆடிண்டு, கூத்தாடணுமா பெண்கள்? அந்தப் பெண் ரொம்ப பதவிசு. அது நன்னா சமாளிச்சுக்கும்.

முத்து—அதுசரி, அத்தை. நாற்பத்தோரு வயசான, சம்சாரியான ஒரு புருஷனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் அந்தப் பெண்ணுக்கு என்ன ஆனந்தம் இருக்கப்போகிறது? மனக் கசப்பும் துக்கமும்

கொடுப்பதற்காக நான் மணம் செய்துகொள்ள வேண்டுமா ?

அகி—நாலு வருஷமா, மாப்பிள்ளை கிடைக்குமான்னு ஏங்கிக்கொண்டு இருக்கிறார்கள் அவாத்திலே. நீ பண்ணிக்கிறேன்னு சொன்னா உன் காலிலே கொண்டுவந்து தள்ளிவிட மாட்டாளா? அந்தப் பெண்ணும் விவரம் தெரிஞ்ச பெண்ணோ இல்லியோ. தன் கழுத்திலேயும் தாலி ஏறுமாவென்று தவிச்சிண்டிருக்கு. அதற்காகவாவது நீ பண்ணிக் கொள்வது நல்லது. நான் சொல்றதைக் கேளு. பேசாமே அதைக் கல்யாணம் செய்துகொள். இரண்டு பேருக்கும் நல்லது.

முத்து—அந்தக் காலத்திலே, சில ரிஷிகள் யாகம் செய்வதற்காக விவாகம் செய்து கொள்வார்களாம். இன்னும் சிலர், வம்ச விருத்திக்காக மணம் செய்து கொள்வார்களாம். அதைப்போல, இப்போது என் குடும்ப பாரத்தைத் தாங்குவதற்கு மறு கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்கிறே?

அகி—கல்யாணம் என்கிறது முடிவு ஆயிடுமா? அதுதான் ஆரம்பம். குடும்ப பாரத்துக்காகக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் தவறு என்ன? உன் குழந்தைகளை உத்தேசித்து நீ செய்து கொள்ளத்தான் வேண்டும். நீ சரியென்று சொல்லு, நான் போன உடனே ஏற்பாடு செய்துடறேன்.

முத்து—முதல் மனைவி, வீட்டுக்கு வருவதற்கு முன்பே போய்விட்டாள். இரண்டாம் மனைவியோ, இந்தக் குழந்தைகளை விட்டு விட்டுப் போய்விட்டாள். மூன்றும் மனைவி என்னென்ன சுகதுக்கங்களைக்

கொண்டு வருவாளோ? ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மாறினால், அது பழகுவதற்கு எவ்வளவோ நாள் ஆகிறது. புதிது புதிதாக, வாழ்க்கை முடிவதும், வாழ்க்கை ஆரம்பிப்பதும் வழக்கமாகிவிட்டது. இதற்குத்தான் என்ன முடிவோ தெரியவில்லை. இந்தப் பயல்கள் என்ன லூட்டி பண்றதுகள்! என்ன இரைச்சல்! என்னடா பண்றியள்? தடிக்கிடா மாடு, இங்கே வா. என்னடா கொம்மாளம்? (கிட்டு, வருகிறான். பாலு அழுதுகொண்டு வருகிறான்)

கிட்டு—அப்பா, பாலு அந்த அலமாரியிலேந்து ஏதோ மருந்தை வாயிலே போட்டுக் கொண்டான், அப்பா.

முத்து—(கவலையுடன்) என்ன! என்ன!

அகி—அடபாவி, எதேடா வாயிலே போட்டுக் கொண்டுட்டே! என் கால் சிரங்குக்குப் போடறதுக்கு மருந்து வாங்கி வச்சிருந்தேன். அதைப் போட்டுக் கொண்டுட்டானே? அது விஷம்னா!

முத்து—என்ன கண்ராவி சனியன்கள் பாரு.

அகி—(பார்த்துவிட்டு) ஐயையோ சிரங்கு மருந்தைத்தான் வாயிலே போட்டுக் கொண்டுட்டான். நல்ல வேளை, முழுங்கல்லே. கசந்திருக்குப்போல இருக்கு. துப்பிட்டான். இங்கே வாடா, வாயை அலம்பிவிடறேன். நல்ல குழந்தைகள்! ஒரு நிமிஷம் வாலை அடக்கிக்கொண்டு இருக்க மாட்டேனென்கிறதுகள்.

முத்து—நன்றாய் வாயை அலம்பி விடு. நானும் டாக்டரிடம் கொண்டுபோய் காட்டிக் கேட்டுக் கொண்டு வருகிறேன்.

அகி—இந்தக் குழந்தைகளை வைத்துக்கொண்டு தான் கல்யாணம் வேண்டா மென்கிறே! ஒரு நாழி உன்னால் சமாளிக்க முடியுமா ? நடக்கிற பேச்சா பேச மாட்டே என்கிறாயே!

முத்து—என்னவோ எனக்கு ஒன்றும் புரியவில்லை. வழியே தெரியவில்லை.

அகி—வேறு ஒன்றும் மார்க்கமில்லேடா முத்து. மூளையைப் போட்டுக் குழப்பிக்காதே. நான் சொல்ற படி கேளு. நான் போய் அந்தப் பெண்ணை ஏற்பாடு செய்து விடுகிறேன்.

முத்து—(கசப்புடன்) சரி உன் இஷ்டம். இங்கே வாடா பாலு. டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டு வர லாம்.

(போகிறான்)

நியாயம்

ஆத்மா ஓர் உருவம்
கடவுள்

இடம்: பூலோகத்திற்கு வரும் வழி. (ஆத்மா வேகமாக வந்துகொண்டிருக்கிறது. ஒரு குரல் அதைக் கூப்பிடுகிறது.)

ஆத்மா: (திரும்பிப் பார்த்துக்கொண்டு) யாரய்யா அது? போகிறபொழுது சகுனத் தடையாகக் கூப்பிடுகிறது.

இரண்டாவது உருவம்: (வந்துகொண்டே) ரொம்ப அவசரம்போலிருக்கிறது!

ஆத்மா: உமக்கென்ன அதைப்பற்றி? என் அவசரம் எனக்குத் தெரியும். அதோ பாரும். இந்த நட்சத்திரம் உச்சத்திலிருக்கும்போதே நான் ஜனனமாக வேண்டுமென்று ஓடுகிறேன்.

இ. உ.: அதில் என்ன விசேஷமோ?

ஆத்மா: விசேஷமா! நான் பிறந்து தீரவேண்டுமென்று கட்டளை. பிறக்கத்தான் போகிறேன். நல்ல ராஜ வம்சத்தில் பிறக்கலாமே என்று யோசனை. அதற்குத்தான் சரியான நேரம் பார்த்துப் புறப்பட்டேன்.

இ. உ.: அலவன்ஸ் வாங்கிக்கொண்டு எல்லா வேட்டைகளும் ஆடலாம் என்ற யோசனைபோலிருக்கிறது. ஆசையிருந்து என்ன பண்ண?

ஆத்மா: அதென்ன அப்படிச் சொல்கிறீர்?

இ. உ.: இந்த லக்னத்தில் பிறந்தால் ராஜகுமாரனுகப் பிறக்கலாமென்று போகிறீரே. இந்த நேரத்தில் லக்ஷக்கணக்கான ஜீவராசிகள் ஜனனமாகப் போகின்றன. இவ்வளவுக்கும் ராஜ வம்சங்கள் கண்டு பிடிப்பது கஷ்டமாயிற்றே.

ஆத்மா: ஏனய்யா? போறவனைப் பிடித்து வைத்துக்கொண்டு விதண்டாவாதம் பண்ணுகிறீர்.

இ. உ.: இல்லை. உலகத்திலே, ஒரே நேரத்தில் பிறக்கும் ஒருவன் ராஜாவாகப் பிறக்கிறுன். இன்ெனுருவன், அவனுக்கு வேலைக்காரனுவதற்கும், பல்லக்கு தூக்குவதற்காகவுமே பிறக்கிறுன்.. ஒரு ஆத்மா, வண்ணுனுகப் பிறக்கிறது. வேறு ஒன்று, கழுதையாகப் பிறந்து அவனிடம் உதை வாங்குகிறது. ஒரு ஆத்மா ஆடாக அவதரிக்கிறது. மற்ெறுன்று மனிதனுகப் பிறந்து அதை ஜீரணம் பண்ணுகிறது. இந்த விசித்ர விபரீதங்களுக்கெல்லாம் காரணம்?

ஆத்மா: கடவுளின் லீலா விேனுதம் என்று சொல்லப் போகிறீர்.

இ. உ.: இல்லவே இல்லை.

ஆத்மா: கடவுளின் அநீதிக்கு மனிதன் வைத்த பெயரான விதியைக் காட்டப் போகிறீர்.

இ. உ.: கடவுளின் நீதிக்குத்தான் விதி என்று பெயர். கடவுளை ஏன் குறை கூறுகிறுய்? அவர் இதில் செய்வதற்கு ஒன்றுமில்லை.

ஆத்மா: சரி, சரி. இந்தக் கவலையெல்லாம் எனக்கு ஏதுக்கய்யா? போறவனைப் பிடித்து வைத்துக்கொண்டு மல்லுக்கு நிற்கிறீர். எனக்கு நேரமாகிவிட்டது. இந்த கிரகங்கள் இந்த ஸ்தானத்திலிருக்கும்போதே நான்

ஜனனமாக வேண்டும். நேரமாகிறது. நான் போகி றேன். (ஓர் அடி நகர்கிறது.)

இ. உ.: (உரக்கச் சிரித்துக்கொண்டே) என்ன அவசரம்? நீ பிறக்கவேண்டிய இடம் எங்கு இருக் கிறது? நீ எங்கு போகப் போகிறுய்? பைத்தியக்காரன்.

ஆத்மா: (திரும்பியபடி) நான் எங்கு பிறக்க வேண்டும் என்பதைத் தெரிந்தவர்போலப் பேசுகிறீரே!

இ. உ.: நீர், ஒரு ஏழை வீட்டில் பிறந்து, குமாஸ்தா வேலே பார்த்து, ஆபீசில் எஜமானனிடமும், வீட்டில் மனேவியிடமும், குட்டுப்பட்டு, ஆண்மை யிழந்து, ஜட்மான வாழ்க்கை நடத்தவேண்டுமென்று தலே எழுத்து இருக்கிறது. ஆனல், ராஜகுமாரனுகப் பிறந்து சுவிட்ஸர்லாந்தில், ஐரோப்பிய மாதுடன் கோல்ப் விளேயாட வேண்டுமென்ற ஆசை மாத்திரம் உமக்கு நிரம்ப இருக்கிறது. (சிரிக்கிறது)

ஆத்மா: (கிட்ட வந்து) என் தலேயில் எழுதின பிரம்மாவைப்போல் பேசுகிறீரே, நீர் யார்?

இ. உ.: நான் பிரம்மாவிற்கு மேலான கர்மா. அவரவர்களுடைய பாவ புண்யத்திற்கேற்றுப்போல, சுக துக்கங்களேத் தாங்கிக்கொண்டு ஒவ்வொரு ஆத்மா வையும் பிறக்கும்போது, பின் தொடர்கிறேன். நான் இல்லாமல், நீ மாத்திரம் தனியாகப் பிறக்க முடியாது.

ஆத்மா: நிழல்போல் என்னுடன் வந்து என் வாழ் வைக் குலேக்க வருவீர்போலிருக்கிறது.

கர்மா: உனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய வாழ்வைத் தருவதற்கு உன்னுடன் வருவேன்.

ஆத்மா: நீர் என்னுடன் வரவேண்டாம். என்னே விட்டுவிடும்.

கர்மா: அதெப்படி முடியும்? தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். அவனவன் செய்யும் பாவ புண்யங்கள் அவனைப் பின் தொடர்கின்றன. வினை விதைத்துவிட்டு அதன் விளைவைக் கண்டு ஓடமுடியாது. நீ செய்திருக்கும் பாவ புண்யங்களுக் கேற்றாப்போல் உனக்கு ஜன்மத்தையும், வாழ்வையும் தருவதற்காக நான் அனுப்பப் பட்டிருக்கிறேன்.

ஆத்மா: கடவுள் எனக்கு விதித்த தண்டனையா உங்கள் உருவத்தில் என்னிடம் வருகிறது ?

கர்மா: வெகுமதியும்கூட.

ஆத்மா: எனக்குச் சிறிதேனும் சுதந்திரமில்லை. நிழல்போல என்னுடன் வந்து, என்னை வாட்டப் போகிறீர். ஆனால், பாவ புண்யத்திற்கு மாத்திரம் நானு பொறுப்பாளி? என்ன நியாயம்!

கர்மா: நல்லதும் கெட்டதும் செய்வது நீதானே. பாவ புண்யத்திற்கும் நீதான் பொறுப்பாளி.

ஆத்மா: அக்ரமம்! அன்பே சிவமாகவும், கடவுளைக் கருணை வள்ளலாகவும் புரளி பண்ணுகிறார்கள். மனிதன் கால்தூசி பெறமாட்டார் கடவுள்.

கர்மா: ஜாக்கிரதை! தகாத வார்த்தை பேசாதே.

ஆத்மா: என்னய்யா இது! நல்ல கர்மா! நல்ல கடவுள்! மனிதனுக்கும், மனிதனுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வை பூலோகத்தில் ஒழிக்க ஆரம்பித்துவிட்டார்கள். பிறப்பினால், ஒருவன் உயர்ந்தோனாகவும் மற்றொருவன் தாழ்ந்தவனாகவும் • இருக்கக்கூடாது என்று கண்டுகொண்டார்கள். எல்லா ஏற்றத் தாழ்வுகளும் உலகத்திலே ஒழிந்து வருகிறது. ஆனால், நீரும் உமது

கடவுளும் மாத்திரம் இந்த அநீதியை சாசுவதமாக்கப் பார்க்கிறீர்கள். இந்த அநீதி ஸ்தாபகருக்குக் கடவுள் என்ற மரியாதை வேறு?

கர்மா: கடவுளின் நீதியைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

ஆத்மா: என்ன தெரியவேண்டும்! பரமயோக்கியனை ஒருவனுக்கு தீராத நோயைக் கொடுத்திருக்கிறார். சாதுவான ஒருவனுக்கு பிறக்கும்போதே, தகப்பனைத் தீர்த்து விடுகிறார். ஒருவனைக் குருடனாக்குகிறார். ஒருவனைச் செவிடனாக்குகிறார். ஒருவனுக்கு, சதா இன்பமாயிருக்கும் வாழ்வைக் கொடுக்கிறார். மற்றொருவனுக்கு, தொலையாத துன்பத் தொடர்களைக் கொடுக்கிறார். கடவுளும் நீரும் செய்யும் இந்த சூட்சியை—

கர்மா: நிறுத்து. இதற்கு நாங்கள் சிறிதேனும் பொறுப்பாளிகளே அல்ல. அவனவன் பூர்வ ஜன்மத்திலே செய்த பாவ புண்யங்களுக்கேற்றவாறு, பின் ஜன்மத்தில் சுக துக்கங்களை அனுபவிக்கிறான். முந்திய ஜன்மாவில், உன்னை யார் நல்லது செய்யவேண்டாமென்று கையை பிடித்துத் தடுத்தார்கள்?

ஆத்மா: நீர்தான். ஒவ்வொரு ஜன்மத்திலும், அதற்கு முந்திய ஜன்மாவின் கர்ம பலன் விலங்குகள் போல கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும்பொழுது, எனக்குச் சுதந்திரம் ஏது? பாவ புண்யங்களின் முழுமைக்கும் நான் பொறுப்பாளி அல்ல.

கர்மா: உன் வாழ்க்கை பூர்வ ஜன்ம கர்ம பலனால் நிர்ணயிக்கப்படுவது உண்மைதான். ஆனால், குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் வரையறுக்கப்பட்ட வாழ்விலே, ஸத்கர்மாக்கள் செய்யத் தவறிவிட்டாய்.

தோல்வி யடைந்தாய். அதன் பலனை அனுபவிக்கப் போகிறாய்.

ஆத்மா: (கோபத்துடன்) முன் ஜன்மாவில் செய்த குற்றத்திற்கு இந்த ஜன்மாவில் ஏன் நான் தண்டனை யடையவேண்டும்? கடவுளின் நியாயம் வெகு நேர்த்தி!

கர்மா: நியாயம், காலத்தையும் ஜன்மாவையும் மீறிய நித்யவஸ்து.

ஆத்மா: (கேலியாக) பூலோகத்தில் ஒரு சட்டம் உண்டு. கடன் மீறி தத்தளிக்கும் ஒருவன், தப்பு வதற்கு ஒரு வழி இருக்கிறது. தன் சொத்துக்களை, கடன்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டு, 'இன்சால் வெண்டு' மனுப் போட்டுவிட்டால், அவன் சுதந்திர புருஷன். கடன் அவனை ஒன்றும் அதற்குமேல் செய் யாது. கடவுளுக்கு அந்தச் சட்டம் தெரியாதுபோலி ருக்கிறது. கர்மாவின் கடன் வந்து என்னைத் துரத் தாமல் 'இன்ஸால்வெண்டு' மனுக் கொடுக்க இங்கு வழி கிடையாதுபோலிருக்கிறது.

கர்மா: கடவுளை ஏமாற்றமுடியாது. இயற்கையின் விதியை மீற முடியாது.

ஆத்மா: (ஆத்திரத்துடன்) எந்த ஜன்மத்திலோ செய்த குற்றத்திற்கு, வரப்போகும் ஜன்மாவில் நான் அவஸ்தைப்படப் போவதில்லை. என் பின்னோடு உம்மால் வர முடிகிறதா பார்ப்போம். வந்தால் காலை ஒடித்து விடுவேன் (கர்மாவின் காலை உற்றுப் பார்க் கிறது. கர்மா பயத்தினால் நடு நடுங்குகிறது. அப் பொழுது ஒரு மின்னலும் இடியும் உண்டாகிறது.

கடவுள் பிரசன்னமாகிருர். கடவுளேக் கண்டவுடன் கர்மாவிற்குத் தைரியமுண்டாகிறது.)

கர்மா: இவன் மிகவும் பொல்லாதவனுய் இருக்கிருன். என்னேக் கூட வரக்கூடாதென்று தடுக்கிருன்.

கடவுள்: (ஆத்மாவைப் பார்த்து) என்னப்பா! மிகவும் கோபிக்கிருயே!

ஆத்மா: தோரணேயைப் பார்த்தால் கடவுள்போல இருக்கிறது. உம், நியாயம் விநோதமாகத்தான் இருக்கிறது.

கடவுள்: நியாயம் உனக்கு ஒருவனுக்குத்தான் வேடிக்கையா யிருக்கிறது.

ஆத்மா: முன் ஜன்மாவில் நான் செய்த குற்றத்திற்கு, இந்த ஜன்மாவில் நான் ஏன் தண்டனேயடைய வேண்டும்? அதற்குச் சரியானபடி பதில் சொல்லும்?

கடவுள்: அவசரப்படாதே அப்பா. ஒவ்வோர் ஜன்மமும் தனித்தனியென்று நினேத்து நீ பேசுகிருய். ஜன்மங்கள் சங்கிலியில் உள்ள கரணேகள்போலத் தனித் தனியாயிருந்தாலும், உன் பிறவிப் பிணி சங்கிலியைப்போல ஒன்றேதான். இந்த ஜன்மத்தின் ஆரம்பம் முந்திய ஜன்மாவில் பிணேக்கப்பட்டு இருக்கிறது. பிறவிப்பிணி நீங்கும் வரையில், விடுதலேயில்லே. இந்த விதிக்குட்பட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆத்மா: நான் உம்முடைய அநீதிக்குட்படமாட்டேன். நான் இந்தக் கர்மாவைச் சுமந்துகொண்டு போக மாட்டேன்?

கர்மா: இவன் என்ன பெரிய புரட்சிக்காரனுக இருக்கிருன்.

கடவுள் : இவன் புரட்சியெல்லாம் சில விநாடிகள் தானே. குமாஸ்தா உத்தியோகம் பார்க்கப்போகும் இவன் ஆணவம் இழந்து தொடை நடுங்கிக்கொண்டு இருக்கப்போகிருன். சில நிமிஷங்களாவது புரட்சிகரமான வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப் போகட்டுமே.

கர்மா : (ஆத்மாவைப் பார்த்து) சரி நேரமாகிறது. உன் ஜனன காலம் நெருங்கிவிட்டது. வா சீக்கிரம். (ஆத்மாவின் கையைப் பிடித்து இழுக்கிறது.)

ஆத்மா : (ஆவேசத்துடன்) நான் வரமாட்டேன். என்னைத் தொடாதே. உன்னைத் துலைத்துவிட்டுத் தான் போவேன். (கர்மாவின் மேல் பாய்கிறது.)

கடவுள் : என்னமோ பாவம் அறியாக் குழந்தை அலறுகிறது. (சிரிக்கிருர்) இடியும் மின்னலும் போல தோன்றுகிறது. மின்னல் மறையும்போது, மூவரும் மறைகின்றனர். தூரத்திலே ஒரு பிறந்த குழந்தையின் அழுகைக் குரல் கேட்கிறது. அந்தக் குரலிலே, அநீதியைப் பொறுக்காத ஆத்மாவின் சோகம் தொனிக்கிறது).

தோல்வி

சந்திரமுகி	பானுகோபன்
தோழி	மார்த்தாண்டன்
விக்ரமன்	வீரர்கள்

[காட்டில் ஒரு முகாம். ராஜகுமாரி சந்திரமுகி உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். பக்கத்திலே தோழி நிற்கிறாள்.]

சந்திரமுகி: தோழி, எப்போது இந்தக் காட்டை விட்டுக் கிளம்பப் போகிறோமாம்?

தோழி: நாளை விடியற்காலை இதை விட்டுக் கிளம்பப் போகிறார்களாம்.

சந்திர: எப்பொழுது ஊர் போய்ச் சேருவோம்?

தோழி: நாளை நின்று மறுநாள் ஊர்போய்ச் சேர்ந்துவிடலாம்.

சந்திர: ஏன் என் தந்தை விக்ரமபுரிமீது படை எடுத்து வெற்றி கொண்டார் என்பதுதான் தெரியவில்லை? அதை ஜயித்தது முதற் கொண்டு உறக்கம் இல்லை, ஓய்வு இல்லை, நிம்மதி இல்லை; என்னையும்கூட அழைத்துக்கொண்டு அலக்கழிக்கிறார். ஊம், அந்த வீணையை எடுத்து வா.

(தோழி வீணையைக் கொண்டுவந்து வைக்கிறாள்.)

தோழி: இந்த வீணை உங்களுக்கு மிகவும் பிடித்து விட்டது.

சந்திர: விக்ரமபுரியிலிருந்து எவ்வளவோ ரத்னங்களையும் ஆபரணங்களையும், என் தந்தை கொண்டு வந்து குவித்திருக்கிறார். ஆனால் இந்த வீணையைக் காட்டிலும் வேறு ஒன்றையும் சிறந்ததாகச் சொல்ல மாட்டேன். என்ன நாதம்! என்ன வேலைப்பாடு!

என்ன அழகான அமைப்பு! ஒரு அரண்மனையையே அலங்கரிக்க இது ஒன்று போதும்,

(வாசிக்க ஆரம்பிக்கிருள். பலத்த சிரிப்பு கேட்கிறது.)

சந்திர: அது யார் சிரிக்கிறது? போய்ப் பார்.

தோழி: (போய்ப் பார்த்துவிட்டு வருகிருள்.) யாரோ தேசாந்தரம் போகும் பாடகனும். நீங்கள் சுருதி சரியாகச் சேர்த்துக்கொள்ளுமுன்பே வாசிக்க ஆரம்பித்துவிட்டதைக் கேட்டுச் சிரித்தானும்.

சந்திர: (கர்வத்துடன்) அவனை அழைத்துவா, அவன் திறமையைப் பார்க்கலாம். மகா கர்வியாக இருப்பான்போலிருக்கிறது.

(தோழி வெளியே போய்ப் பாடகனை அழைத்து வருகிருள்.)

சந்திர: நான் வாசித்தது சரியாக இல்லையா?

பாடகன்: நான் அப்படிச் சொல்லவில்லையே! வாத்யத்திற்குச் சரியாக சுருதி சேர்க்கப்படவில்லை என்றுதான் சொன்னேன்.

சந்திர: மகா ஞானஸ்தன் மாதிரி பேசுகிறீரே, உமக்கு வீணையில் நல்ல பயிற்சி உண்டோ?

பாடகன்: ஏதோ கொஞ்சம் தெரியும். சுருதி சேரவில்லை என்பதை அறிந்து கொள்ளும் அளவுஞானமும் உண்டு.

சந்திர: எங்கே, கொஞ்சம் வாசியும் கேட்கலாம்.

பாடகன்: வாசிக்கிறேன், ஆனல் என் வாசிப்பு உங்களுக்குப் பிடித்திருந்தால் வெகுமதி கிடைக்குமா?

சந்திர: உண்டு.

பாடகன்: நான் கேட்பதைக் கொடுக்கவேண்டும்.

சந்திர: சரி, தருகிறேன்.

(பாடகன் வீணையைச் சரியாக சுருதி செய்துகொண்டு வாசிக்கிறான். அந்தப் பாட்டு, தென்றலைப்போல இனிமையைக் கொடுத்துக்கொண்டு, பெருகி வருகிறது. அந்தப் பாட்டிலே சொக்கிப் போய் நிற்கிறாள் சந்திரமுகி.)

சந்திர : என்ன வாசிப்பு! எங்கள் நாட்டிலே இவ்வளவு திறமையாக அந்த வாத்யத்தைக் கையாளுபவர்கள் இல்லை. உங்களிடம் கொஞ்சுகிறது அந்த வீணை. நான் அந்த வாத்யத்தைத் தொடுவதற்கே லாயக்கில்லாதவள். நீங்கள் பரிகசித்தது நியாயந்தான். உங்களுக்கு என்ன வேண்டும்?

பாடகன் : நிச்சயம் தருவீர்களா?

சந்திர : கட்டாயம் தருகிறேன். அதில் என்ன சந்தேகம்?

பாடகன் : அந்த வீணைதான் வேண்டும்.

சந்திர : (தயக்கத்துடன்) என் தந்தை விக்ரமபுரியிலிருந்து கொண்டுவந்திருக்கும் பொக்கிஷங்களில் சிறந்ததாக இதை மதிக்கிறேனே. அதைக் கேட்டீர்களே! இதுதான் தங்களுக்கு வேண்டுமோ?

பாடகன் : விக்ரமபுரியிலேயே, சிறந்ததாகத் தாங்கள் நினைத்தது முற்றிலும் சரி. உலகத்திலேயே இம்மாதிரி வாத்யம் மற்றொன்று அமையாது.

சந்திர : இந்த வீணையை இவ்வளவு சிலாகிக்கிறீர்களே. நீங்கள் இதை முன்பே வாசித்துப் பார்த்திருக்கிறீர்களோ?

பாடகன் : (சாவதானமாக) அது என்னுடைய வாத்யம்தான்.

சந்திர : தங்களுடையதா? இது எப்படி அரண்மனைக்கு வந்தது?

பாடகன்: விக்ரமபுரியின் அரசனுக்கு நான் இதைக் கொடுத்திருந்தேன்.

சந்திர : உங்கள் அரசருக்கு கொடுத்திருந்தீர்களா? அவருக்கு எதற்காக?

பாடகன் : எங்கள் அரசர் சங்கீதத்தில் நல்ல விற்பன்னர். என் தோழர் அவர். நாங்கள் இருவரும் ஒரே குருவிடம் சங்கீதம் பயின்றோம். எனக்குச் சமமாக அவர் வாசிப்பார்.

சந்திர : (கேலியாக) பாட்டிலும் கூரியாட்டத்திலும் வாழ்க்கையை நடத்தியபடியால்தான் என் தந்தையிடம் ராஜ்யத்தைத் தோற்றுவிட்டு ஓடிவிட்டார்போலிருக்கிறது.

பாடகன் : இல்லை இல்லை, நீங்கள் நினைப்பது தவறு. உங்கள் தந்தையிடம் எட்டுலட்சம் பேர் படையிலிருந்தனர். விக்ரமனிடம் லட்சம் வீரர்கள் கூட இல்லை. உங்கள் தந்தையிடம் யானைகளும் குதிரைகளும் ஏராளம். விக்ரமனிடம் அவை மருந்துக்குக்கூட இல்லை.

சந்திர : அதற்காக ஓடவேண்டுமா? முடிந்த வரையில் சண்டை செய்து பார்க்கக்கூடாதோ?

பாடகன் : தோல்வி நிச்சயம் என்று அறிந்த எங்கள் அரசன் வீணுக லக்ஷக்கணக்கான ஜனங்களின் உயிர்களேயும், வாழ்க்கையையும் பாழாக்க விரும்பவில்லை. ஜனங்களின் வாழ்வைப் புண்ணுக்கிவிட்டு தோல்வியுறுவதில் என்ன பயன்! அதனுல்தான் அவன் நாட்டை விட்டு ஓடிப்போனது.

சந்திர : படையெடுப்பு என்றுவது வந்துதான் தீரும் என்ற எண்ணம் உங்கள் அரசருக்கு உதிக்க

வில்லையோ ? முன் ஜாக்கிரதை செய்யத் தோன்றவில் லையோ ?

பாடகன் : அவருக்குத் தெரியாமல் இல்லை. தந்தை இறந்து சமீப காலத்தில்தான் பட்டத்துக்கு வந்தார். ஆகையால் ராணுவத்தைப் பலப்படுத்த போதிய அவ காசம் அவருக்கு இல்லை. தவிரவும் அவர் மனதில் ஒரு போராட்டமும் இருந்து வந்தது.

சந்திர : என்ன போராட்டம் ?

பாடகன்: புத்தனும் அசோகனும் தோன்றிய இந்த நாட்டிலே, இன்றும் மிருகபலம் தாண்டவமாடுவதைக் கண்டு அவர் மனம் புழுங்குவார். "ஓர் அரசன் மற் ெறாரு தேசத்து மக்களை வெல்லவேண்டியது ஆயுதத் தினால் அல்ல. அன்பினால்தான் வெல்லவேண்டும்" என்பார். "அரசன் ஆட்சி செய்யவேண்டியது ஜனங் களின் உள்ளத்திலே" என்பார்.

சந்திர: ஒரு லட்சியவாதி என்றுஅல்லவா தோன்று கிறது.

பாடகன் : அவர் சதா கனவு காண்பவர். கலையுள் ளம் படைத்தவர்.

சந்திர : என்ன ஆச்சரியம்! அவரைக் கோழை என்றல்லவா நினைத்தேன்.

பாடகன் : அவர் கோழைதான். பிறருடைய துன் பங்களைக் கண்டு உளம் ஏங்கும் கோழை அவர். மக்க ளின் துன்பங்களைக்கண்டு மனம் இளகித் தவிக்கும் கோழை அவர். ஆனால், தன் விருப்பு வெறுப்புகளை உதறி எறியும் கல்நெஞ்சனும் கூட.

சந்திர : அவர் எங்கிருக்கிறார் இப்பொழுது ?

பாடகன்: எனக்கென்ன தெரியும்? நான் போக லாமா?

சந்திர: கொஞ்சம் இருங்கள். என் தந்தை வருகிறார். அவருக்குக் கொஞ்சம் உங்கள் வாசிப்பைக் காட்டுங்கள்.

பாடகன்: (தயக்கத்துடன்) எனக்கு நேரமாகிறது.

சந்திர: கொஞ்சம் இருங்கள் போகலாம்.

(பானுகோபன் வருகிறான்.)

சந்திர: (எழுந்துகொண்டே) அப்பா, இவர் ஒரு சிறந்த வைணிகர். இவர் வாசிப்பைக் கொஞ்சம் நீ கேள்.

பானு: குழந்தாய், எனக்கு நேரமில்லை. இருந்தாலும் போகட்டும், கொஞ்சம் வாசிக்கச் சொல். கேட்கிறேன்.

(சந்திரமுகி தலையசைக்கிறாள். பாடகன் பாடுகிறான், பானுகோபன் பாடகனைக் கூர்ந்து கவனிக்கிறான். பாட்டு முடிகிறது.)

பானுகோபன்: பாட்டு நன்றாய்த்தா னிருக்கிறது. வேஷம்தான் சரியாயில்லை.

(பாடகன் ஆச்சரியத்துடன் பார்க்கிறான்.)

சந்திர: (வியப்புடன்) என்ன! என்ன சொல்கிறீர்?

பானு: (உனக்குத் தெரியவேண்டுமோ? இதோ பார்!

(பாடகன் தாடியைப்பிடித்து இழுக்கிறான். அது கையோடு வருகிறது.)

பானு: விக்ரம! உன்னைக் கோழை என்று மாத்திரம் நினைத்தேன். சுத்தப் பைத்தியக்காரன் என்பது கூடத் தெரிகிறது.

விக்ரம: பயித்தியக்காரன் தான். கலையிலும் கடவுளிடமும் பைத்தியம் கொண்டவன். மிருகம் போல, அகங்காரத்தில் உழன்றுகொண்டிருக்கும் உனக்கு இவைகளில் என்ன தேட்டம் இருக்கப் போகிறது?

சந்திர: (ஆச்சரியத்துடன்) விக்ரம மகாராஜன் இவர் தானா?

பானு: வலையில் வந்து சிக்கிக்கொள்ளும் மானைப் போல எதற்காக இங்கு வந்து மாட்டிக் கொண்டாய்?

விக்ரம: என் வீணையைத் திரும்ப அடையவே இங்கு வந்தேன்.

பானு: உன் ஆபத்தை அறியவில்லையா? அல்லது சுலபத்தில் ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணமா?

விக்ரம: என் வாத்தியத்தை எப்படியும் திரும்ப அடையவேண்டுமென்ற ஆசை என்னை இங்கு தள்ளிக் கொண்டு வந்தது.

பானு: உன் கலை ஆர்வம்தான் உன்னை நாட்டை விட்டு ஓடச் செய்துவிட்டது. ஓடிப்போன பிறகுகூட கலைப் பித்து தெளியவில்லை போலிருக்கிறது.

விக்ரம: மனிதனிடம் உள்ள கருணைதான் என்னை நாட்டைவிட்டு ஓடச் செய்தது. கலை ஆர்வம் அல்ல.

பானு: கோழைத்தனத்திற்கு அஹிம்சை என்ற பெயர் இல்லை.

விக்ரம: கோழைத்தனம் இல்லை. கசாப்புக் கடையில் செய்வதுபோல், லக்ஷக்கணக்கான மக்களைப் பலியிடும் மகத்தான காரியத்திற்கு வீரம் என்றும், வெற்றி என்றும் பெயர் இருக்கும் வரையில்

நான் செய்த காரியம் கோழைத்தனமாகத்தான் தோன்றும்.

பானு: போர் என்பது க்ஷத்திரிய தர்மம். நீ பேசுவது அரசன் பேசும் பேச்சல்ல.

விக்ரம: அசோகன் உன்னைவிட மகத்தானதொரு சாம்ராஜ்யத்தை ஜயித்து ஸ்தாபித்தான். ஆனால், அவன் கண்ட அனுபவம் வேறு. ஆத்மபலம்தான் பெரிது என்று அறிந்துகொண்ட கௌசிகனும் க்ஷத்ரியன்தான். மிருகபலம் தாண்டவமாடும் வரையில் உலகத்திற்கு நிம்மதியில்லை என்று அறிஞர்கள் கண்டு இருக்கிறார்கள். மெலியாரை வலியார் வாட்டுவதில் துன்ப பரம்பரை உண்டாகுமே தவிர இன்ப வாழ்விற்கு இடமில்லை.

பானு: இந்தத் தத்துவங்கள் எனக்கும் தெரியும். மேலே ஆகவேண்டிய காரியங்களைக் கவனிப்போம். இப்பொழுது என் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாய். உன்னை மூட்டைப் பூச்சியைப்போல் நசுக்கிவிடும் சக்தி என்னிடம் இருக்கிறது. உன் அஹிம்சையும் கருணையும், ஆத்மபலமும் உன்னை வந்து காக்கப்போகிறதா?

விக்ரம: அதோ பார். ஈயை ஒரு பல்லி கவ்விப் பிடித்துக் கொண்டு நிற்கிறது. அந்தப் பல்லியின்மேல் பாய்வதற்கு மூலையில் பூனையொன்று காத்திருக்கிறது. உன் சக்தி இத்தகையதுதான். மனிதன் ஆறறிவு படைத்தும் மிருகத்திற்கும் கேவலமாக நடந்து கொள்வதுதான் உலகத்திலே விந்தையாயிருக்கிறது.

பானு: அன்பு வழியும், அஹிம்ஸா தர்மமும் உன்னை இன்று காப்பாற்றுமா?

விக்ரம: கடவுள் உண்மை என்றால் எனக்கும் இன்று வெற்றியுண்டு.

பானு: யாரங்கே?

(இரண்டு வீரர்கள் வருகிறார்கள்.)

பானு: அவனைக் கொண்டு போய்ச் சிரச்சேதம் செய்யுங்கள்.

சந்திர: அப்பா, கொஞ்சம் பொறுங்கள். அவரை எனக்காக விட்டு விடுங்கள்.

பானு: சந்திரமுகி நீ இதில் தலையிடாதே. இது அரசியல்.

சந்திர: அரசியல் மாத்திரமல்ல. இதில் காவியமும் கலந்து விட்டது.

பானு: என்ன சொல்கிறாய்?

சந்திர: அவர் பேச்சும், சங்கீதமும், குணமும் என் மனத்தைக் கவர்ந்துவிட்டது.

பானு: அவன் எனது சத்ரு. அவன் நாட்டை நான் ஜயித்திருக்கிறேன்.

சந்திர: என் உள்ளத்தை அவர் ஜயித்துவிட்டாரே.

பானு: இம்மாதிரி சரித்திரங்களில் எவ்வளவோ நாடகங்கள் நடந்திருக்கின்றன. அதுபோலவே, இப்பொழுது இவன் சாகவேண்டியதுதான்.

சந்திர: நிராயுதபாணியாக நிற்கும் இவரைக் கொல்வது நியாயமா?

விக்ரம: ஆயுதபலமேயின்றி பலவீனமாயிருந்த என் நாட்டைப் பற்றிக்கொண்டதுதான் நியாயமா?

பானு: இதெல்லாம் ராஜதந்திரம். அரசியல் நீதி. உன் காரியத்தைப் பார்.

(வெளியே கூச்சல் கேட்கிறது. ஏதோ கலவரமாயிருக்கிறது. கத்தியும் கேடயமும் மோதும் சப்தம் கேட்கிறது. வெளியே ஒரே குழப்பமாயிருக்கும் சப்தம்.)

பானு: (ஆச்சரியத்துடன்) என்ன கூச்சல் வெளியே?

விக்ரம: இதுவும் ராஜதந்திரம். அரசியல் நீதி. நான் இரகசியமாகத் தயாரித்துவைத்திருந்த வீரர்கள் உன் பாதுகாப்புப் படையை வென்று உன்னைப் பிடிக்க வருகிறார்கள்.

பானு: என்ன! இது உண்மையா!

(ஒருதளபதி வேகமாக வந்து விக்ரமனுக்கு நமஸ்கரிக்கிறான்.)

விக்ரம: மார்த்தாண்டா! இவரைக் கைது செய்யுங்கள்.

(பானுகோபனிடம் உருவின கத்தியுடன் இருவீரர்கள் வருகிறார்கள். பானுகோபன் நகர்ந்து கொள்கிறான். அவனைக் கட்டி பிடித்துக்கொள்கிறார்கள். அந்த வேகத்தில் அவன் கிரீடம் கீழே விழுகிறது.)

விக்ரம: பானுகோப மகாராஜனே! இப்பொழுது புரிகிறதா? என் படைகள் உங்கள் வரவிற்குக் காத்திருந்தன. சிறிதுநேரத்துக்குமுன் நான் மூட்டைப் பூச்சியாயிருந்தேன். இப்பொழுது நீங்கள் ஒரு சிறு மூட்டைப்பூச்சி. நான் நினைத்தால் உங்களை நசுக்கிவிடலாம். காலம் மாறுகிறது. விதி விளையாடுகிறது. எல்லாம் ஈசன் செயல்.

பானு: (கேலியாக) இதுதான் நீ சிறிதுநேரத்திற்கு முன் பிரசங்கம் செய்த அஹிம்சை முறையோ? பலே, வேதாந்தி வீரனே.

விக்ரம: இல்லை, நான் தயாராயில்லாத சமயத்தில் என்னை வந்து நீ தாக்கினாய். நீ எதிர்பாராத சமயத்தில்

உன்னை வந்து நான் தாக்கினேன். மிருக பலத்தின் ஆட்சியும் நியதியும் இதுதான். இதற்கு முடிவு கிடையாது. அஹிம்சா முறையின் அடிப்படையே வேறு. அதை ஆளும் வர்க்கம் கைப்பிடிக்கும்போது சுவர்க்கம் பூலோகத்தில் இறங்கிவிடும். அந்த நாள் என்று வருமோ? உன்போன்றவர்களின் பார்வை என்று அதை நோக்கிப் போகுமோ?

(பெருமூச்சு விடுகிறான்.)

மார்த்தாண்டன்: (வணங்கிக்கொண்டே) இவரை என்ன செய்யவேண்டும்?

விக்ரம: ஒரு நாழிகைக்குமுன் எனக்கு இவர் மரண தண்டனை விதித்தார். நான் இவருக்கு மரண தண்டனை விதிக்க இவர் தலை எழுத்து இருக்கிறது.

மார்த்தாண்டன்: நம் நாட்டைக் கவர்ந்த இந்த அரசனின் சிரத்தைத் துண்டிக்க என் கை துருதுருக்கிறது.

விக்ரம: மார்த்தாண்டா, கொஞ்சம் பொறு. இவர் சிரத்திற்கு தண்டனை நானே கொடுப்பேன்.

(கீழே விழுந்திருக்கும் கிரீடத்தை எடுத்துப் பானுகோபன் தலையில் வைக்கிறான்.)

இதுதான் என் தண்டனை. பானுகோப மகாராஜனே! தாங்கள் சகல மரியாதைகளுடன் போய்வரலாம். தாங்கள் திரும்பிப் படை எடுத்து வருவதற்குள் நாங்கள் தயாராகிவிடுவோம். ஆனாலும், பலமில்லாதவனைத் தாக்குவது தான் கோழைத்தனம். அதை மாத்திரம் தாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மார்த்தாண்டா, இவருக்கு ராஜாங்க மரியாதைகள் செய்து அனுப்பு.

பானு: (*தாழ்மையுடன்*) *விக்ரம, நான் தோல்வி யுற்றேன்.*

விக்ரம: *அரசே, எனக்கும் இது தோல்விதான். மிருகபலம் வெற்றியடையும்போது மனிதனுக்கு வெற்றி ஏது? வெற்றியும் தோல்வியும் இல்லாமல் இருக்கும் காலம் வருமா? அன்பும் அமைதியும் உலகத் திலே நிலைத்து நிற்கும் காலம் வருமா?*

பானு: *முயற்சிப்போம்.*

விக்ரம: *மனிதன் வெற்றியடைய ஈசன் அருள் புரியட்டும்.*

(*சந்திரமுகி லஜ்ஜையுடன் விக்கிரமனைப் பார்க்கிருள். வெளியே ஜயபேரிகை கொட்டுகிறது*).